# விடுதலைப்புலிகள்



- என் தேவனே... 03
- ஆக்கிரமிப்பிலிருந்து மீண்டெழும்... 04
- நான்காவது உலகத்... 14
- நம்பிக்கை இழந்த மக்களும்... 05
- இதுவரை நடந்த பேச்சுக்களும்... 08
- மட்டு நகரில்... 13



குரல் – 113 | தை – 2004 | அன்பளிப்பு – 12/=


# விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பில் கருத்துமாற்றம் காணும் சர்வதேச உலகம்

**புலிகள் இயக்கம் தொடர்பாக சிங்கள அரசாங்கங்கள் முன்னர் புனைந்து பரப்பிய அவதூறுக் கருத்துக்கள் சர்வதேச அளவில் படிப்படியாகப் பிசுபிசுத்துப்போகும் நிலை தோன்றியுள்ளது.**

**போர்வெறியர் - சமாதான விரோதிகள் - பயங்கரவாதிகள் என்றவாறாக விடுதலைப்புலிகள் இயக்கம்மீது சிங்கள அரசு அள்ளி இறைத்த அரசியல் அவதூறுகளை உண்மையென மேற்குநாடுகள் முன்னர், நம்பியிருந்தன.**

**ஆனால், கடந்த இரண்டு வருடகால சமாதான நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் காட்டிவரும் சமாதான விருப்பும் - நெகிழ்ச்சிப் போக்குகளும் - நேர்மையான அணுகுமுறைகளும் - அரசியல் இராஜதந்திரச் செயற்பாடுகளும் மேற்குநாடுகள் கொண்டிருந்த தப்பபிப்பிராயங்களைத் தகர்க்க உதவியுள்ளன.**

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுடன் தலைவர் பிரபாகரன் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை சிறிலங்கா அரசாங்கம் முழுமையாக நடைமுறைப் படுத்தாத போதும், புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்களை முறித்துக்கொள்ள வில்லை. மாறாக, சிங்கள அரசாங்கத்திற்குக் கால அவகாசங்களை வழங்கி - விட்டுக்கொடுப்புக்களைச் செய்து சமாதான முயற்சியை உயிர்த் துடிப்புடன் வைத்திருக்கப் புலிகள் இயக்கம் உதவியது.

போர்நிறுத்த காலத்தில் புலிகளின் வணிகக் கப்பல்களை சிங்களக் கடற்படை தாக்கியழித்த நிலையிலும் புலிகள் பொறுமை காத்தனர். தமிழீழக் கடற்பரப்பில் போராளிகள் பலரது சாவுக்குச் சிங்களக் கடற்படை காரணமாக இருந்தபோதும் சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்கப் புலிகள் முனையவில்லை.

அண்மையில், ரணில் அரசாங்கத்தின் சில அமைச்சுப் பொறுப்புக்களை சந்திரிகா அம்மையார் பறித்தெடுத்த கையோடு நாடு முழுவதும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி ஒரு பதட்ட நிலையைத் தோற்றுவித்திருந்தார். இதற்குப் பதிலடியாக ஏ.9 பாதையை மூடி புலிகள், சமாதானப் பேச்சுக்களை முடித்துக்கொள்ளப் போகின்றார்கள் என்று உலகநாடுகள் நினைத்திருந்தன.

ஆனால், புலிகள் இயக்கம் பொறுமை இழக்கவில்லை. சமாதானத்தை ஏற்படுத்தப் பாடுபடும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து புலிகள் இயக்கம் சமாதானச் சுடரை அணையவிடாது பாதுகாத்தது.

சமாதானத்தைக் குழப்பியடிக்கும் வகையில் சிங்களத்தரப்பு பல தடவைகள் நடந்துகொண்டபோதும் அவற்றுக்குப் பதிலடியாகப் புலிகள் இயக்கம் காட்டிய அரசியல் முதிர்ச்சியும் - விவேகமான செயற்பாடுகளும் சர்வதேச சமூகத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

இது காரணமாக, உலக நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள் - இராஜதந்திரிகள் கிளிநொச்சி வந்து புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்தித்து - கருத்துப் பரிமாறும் அளவுக்குப் புலிகள் மீதான மதிப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

சிங்களத் தலைவர்களின் அதிகாரப் போட்டியால் சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டபோது, பேச்சை மீண்டும் ஆரம்பிக்கும் நல்லெண்ணத்துடன் 'உதவிப் பணத்தை வழங்கக் கொடையாளி நாடுகள் நிபந்தனை விதித்தன. புலிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்தால் மட்டுமே நிதி உதவி என அறிவித்தன.

சிங்களத் தலைவர்கள் சமரசம் காணும் அறிகுறி இன்றுவரை தென்பட

(தொடர்ச்சி 02ம் பக்கம்)



**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

# ஒரு குடையின் கீழ் இனவாதிகள் சமாதானத்துக்குச் சாவுமணி

சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பி யினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள அரசியல் கூட்டு, தமிழ்மக்களை அச்சத்திற்கும் - கவலைக்கும் உள்ளாக்கியுள்ளன.

கடந்த இரண்டு வருடகாலமாக கட்டியெழுப்பப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக மாறிவருகின்றது.

சமாதானத்திற்கு ஆதரவான சிங்களவர்களும் இந்த அரசியல் கூட்டை அபாயகரமானதொன்றாகவே இனங்கண்டு - எச்சரித்துள்ளனர்.

தமிழரின் தேசிய அபிலாசைகளை மறுத்துரைக்க முயலும் சிங்களப் பத்திரிகை உலகமும் இக்கூட்டையிட்டுச் சந்தோசப்படவில்லை.

இக்கூட்டு முன்னணியின் சமாதான விரோத நிலைப்பாடு கண்டு சர்வதேச சமூகமும் அதிருப்தியும் - கவலையும் அடைந்துள்ளது.

இந்த இனவாதப் பெருங்கூட்டணியுடன் மகாஜன எக்சத் பெரமுன, சிங்கள உறுமய... போன்ற உதிரி இனவாதக் கட்சிகளும் கைகோர்த்துள்ளன.

கட்சி அரசியலால் பிரிந்துகிடந்த சிங்களப் பேரினவாதிகள் ஒரு குடையின்கீழ் அணிதிரண்டு - அதிகாரத்தைக் கைப்பற்றும் இலக்குடன் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

இந்த இனவாதக் கூட்டு முன்னணி பகிரங்கமாக ஒரு அரசியல் அறிக்கையையும் - இரகசியமான வகையில் இன்னொரு செயற்திட்ட நகலையும் தயாரித்துள்ளது.

பகரங்க அரசியல் அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக, இரு கட்சிகளும், முரண்பட்ட நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளன.

ஜே.வி.பி தனது பேரினவாத நிலைப்பாட்டையும் - சமாதான விரோதப் பண்பையும் வெளிப்படையாகவே பறைசாற்றியுள்ளது.

சுதந்திரக்கட்சி ஒரு மழுப்பல் அறிக்கையை வெளியிட்டு வழமைபோலவே சர்வதேச சமூகத்தை மயக்க முனைந்துள்ளது.

Liberation Tigers Of
TAMIL EELAM
புலிகளின் குரல்

சந்திரிகா அம்மையார் வெளியிடுத்தும் சமாதான வார்த்தைகளுக்கு அதற்குரிய அர்த்தம் இருப்பதில்லை என்ற உண்மையை அவரது கடந்த காலச் செயற்பாடுகள் கூறும்.

அவரது சமாதான வார்த்தைகளில் போலித்தனமும் - சந்தர்ப்பவாதமுமே குடிகொண்டிருக்கும்.

தமிழர்மீது தான் கட்டவிழ்த்துவிட்ட ஒரு கொடூரமான இன அழிப்புப் போருக்கு சமாதானச் சாயம்பூச முயன்ற போர்வெறியர் அவர்.

அனைத்துவகை மறைப்பு முகமூடிகளும் கிழிந்த நிலையில் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் இன்று அவர் உள்ளார் என்ற உண்மை தமிழ் மக்களைப் பொறுத்த வகையில் மகிழ்ச்சியான விடயம்.

ஜே.வி.பியின் வெறித்தனமான இனவாதமும் - வெளிநாட்டார் மீதான வெறுப்புணர்வும் உலகறிந்த விடயம். ஜே.வி.பி கட்சியை "சிறிலங்காத் தலிபான்கள" என்றே வெளி உலகம் கணித்துள்ளது.

இந்த இனவாதக் கூட்டுமுன்னணி செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தம் அபாயகரமான அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுக்களை உடனடியாக நிறுத்துவது - போர்நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச்செய்வது - சமாதான ஆவணங்களைச் சட்டவிரோதமாக்குவது - நோர்வேயை மத்தியத்துவ பாத்திரத்தில் இருந்து வெளியேற்றுவது உட்பட தமிழ் இனத்தின் மீதான ஒட்டுமொத்தப் போருக்காக சிங்கள மக்களை அணிதிரட்டுவது... என்ற ஒரு விரிவான செயலறிக்கை, இரகசிய ஒப்பந்தமாக உள்ளது என்று சிங்களத்துப் பத்திரிகைகள் சில தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கைத்தீவின் ஆட்சியியல் வரலாற்றில் சந்திரிகா அம்மையாரின் தந்தையார் நிறுவிய சுதந்திரக்கட்சி ஒரு சிங்களப் பேரினவாதக் கட்சியாகவே இனங்காணப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் அத்திவாரமே "தனிச் சிங்களச் சட்டம்" என்ற இனவெறிக் கொள்கையிலேயே அடங்கியுள்ளது. அந்த இனவெறிக் கொள்கையைப் பரப்புரை செய்தே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. அதன் விளைவுதான் இலங்கைத்தீவில் நடந்தேறிய முதலாவது இன அழிப்புக் கலவரமாகும்.

தந்தைக்குப்பின் சந்திரிகா அம்மையாரின் தாயார் ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சியில்தான் தரப்படுத்தல் என்ற இனவெறிச்சட்டம் தமிழ் மாணவர்கள் மீது பிரயோகிக்கப்பட் டது. அத்துடன், தமிழரை அரசியல் அநாதைகள் ஆக்கிய 1972ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் நிகழ்ந்தேறின.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சந்திரிகா அம்மையாரின் ஆட்சி தமிழின அழிப்பில் ஒரு சாதனை படைத்த காலமாகக் கடந்துள்ளது. ஈழத்தமிழரின் வரலாற்றில் சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலம் ஒரு துன்பியல் வரலாறாகவே பதியப்பட்டுள்ளது. படுகொலைகளாலும் - இடப்பெயர்வுகளாலும் தமிழினம் உலுக்கியெடுக்கப்பட்ட காலப் பகுதியாக அம்மையாரின் ஆட்சிக்காலம் அமைந்துள்ளது.

அண்மைக் காலமாக சமாதானக் காற்றைச் சுவாசித்து - நிம்மதிதேட முற்பட்ட மக்களின் நம்பிக்கைகளைச் சிதறடிக்கும் வகையில் அமைச்சுப் பறிப்புக்களை மேற்கொண்டு சமாதான வண்டியை அம்மையார் குடைசாய்த்துள்ளார்.

இப்போது, பேரினவாதக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி தமிழருக்கெதிரான இன அழிப்புப்போரை விட்ட இடத்திலிருந்து தொடர திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவகையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் அரசியல் தீர்வுகாண இயன்றமட்டும் முனைவது என்ற உறுதியான கொள்கையுடன் உள்ளது. சிங்களத்தின் போர் வெறியையும் - இனவாதக் கொள்கையையும் சர்வதேச சமூகம் முற்றாக உணரும்வரை பொறுமையைக் கடைப்பிடிக்க புலிகள் இயக்கம் எண்ணியுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு மத்தியத்துவராக வந்த நோர்வே அரசும், இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் யப்பானும் மற்றும் மேற்குலக நாடுகளும் மேற்குறித்த உண்மையை நேரடியாகத் தரிசித்து வருகின்றன.

சமாதான நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருந்து - போர்வெறி கக்கிவருவது சிங்களத் தரப்பா! தமிழர் தரப்பா என்ற பேருண்மை இப்போது சர்வதேசத்திற்குப் புரிந்திருக்கும்! ●

(01ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. அவர்களுக்கிடையேயான அதிகாரப்போட்டி மேலும் வலுத்து, அரசியல் நெருக்கடி அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இந்த நிலையில், உதவிவழங்கும் நாடுகளை, நிதி நிறுவனங்களை கிளிநொச்சிக்கு அழைத்து - வடக்கு கிழக்கின் அபிவிருத்தி தொடர்பான ஒரு மாநாட்டை நடாத்த புலிகள் விரும்பினர்.

புலிகள் அழைப்பை ஏற்று அவை வன்னிவந்து - மாநாட்டில் பங்கேற்றது புலிகள் இயக்கத்திற்குக் கிடைத்த ஒரு பாரிய அரசியல் வெற்றியாகவே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பங்கேற்றதுடன் மட்டும் அவை நின்றுவிடவில்லை. வட - கிழக்கின் அபிவிருத்திக்காக நிதியுதவி வழங்க அந்த நாடுகள் சம்மதம் தெரிவித்தது புலிகள் இயக்கத்திற்குக் கிடைத்த இன்னுமொரு அரசியல் வெற்றியாகும்.

பேச்சுத் தொடங்கிய பின்னர் தான் வாக்களித்த நிதி உதவியை வழங்குவதாக சிங்களத்துக்கு நிபந்தனை விதித்த கொடையாளி நாடுகள் வட - கிழக்கு அபிவிருத்தி விடயத்தில் புலிகளுக்கு எந்தவித நிபந்தனைகளும் விதிக்காது உதவி அளிக்க ஒப்புக்கொண்டது, புலிகள் இயக்கத்திற்கு வழங்கப்பட்ட அரசியல் அங்கீகாரமாகவே பலராலும் நோக்கப்படுகின்றது.

சிங்களத்தைத் தண்டிப்பது போலவும், புலிகள் இயக்கத்திற்கு வெகுமதி அளிப்பது போலவும் உதவி வழங்கும் நாடுகள் எடுத்த முடிவு சிங்களப் பேரினவாதிகளை எரிச்சலூட்டியுள்ளது.


தென்னிலங்கையில் தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்குப் புலிகள் இயக்கம் எந்த விதத்திலும் காரணமல்ல. எனவே, உதவி வழங்குவதில் சிங்களத்தை தண்டிக்கும்போது சமாதானத்தின் சம பங்காளியான புலிகள் இயக்கமும் - தமிழ்மக்களும் பாதிக்கப்படுவதை சர்வதேச சமூகம் விரும்பவில்லை.

கடந்த இரண்டுவருட சமாதான காலத்தை அரசியல் ரீதியாகப் புலிகள் இயக்கம் மிகச் சரியாகவே பயன்படுத்திவருகின்றது. புலிகள் இயக்கம் மீதான களங்கத்தை நீக்குவதிலும் - தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை ஆணித்தரமாக எடுத்தியம்புவதிலும் புலிகள் இயக்கம் பெரு வெற்றிபெற்று வருகின்றது.

அதேவேளை, சிங்கள ஆட்சியாளர்களின் விட்டுக்கொடாப் போக்குகளையும் - இனவாத நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்துவதிலும் புலிகள் வெற்றிபெற்றே வருகின்றனர்.

இப்போது சுவரில் எறிந்த பந்துபோல புலிகள் மீது சுமத்திய அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் உண்மையில் உரித்துடையவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள் தான் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

சிங்கள - தமிழ் இனப்பிரச்சனையின் ஆழத்தையும் சம்பந்தப்பட்ட தரப்புகளில் எந்தப்பக்கம் நியாயமுள்ளது என்பதையும், சமாதானத் தீர்வுக்கு எந்தப்பக்கம் ஆதரவு வழங்குகின்றது! எந்தப்பக்கம் போரை நாடுகின்றது! என்ற உண்மைகள் சர்வதேசசமூகத்திற்கு புரியத் தொடங்கிவிட்டது. தமிழ்மக்களுக்கு இது மகிழ்ச்சியான செய்தியாகும். ●



# "என் தேவனே, என் சத்துருக்கருக்கு என்னைத் தப்புவியும்"

சிங்களத்தின் இன்றைய அரசியற் சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது அதை எவ்வாறு விளக்குவது? புரிந்துகொள்வது என்கிற வினா மேலோங்குகின்றது. 'பாரத ஜனங்களின் தற்கால நிலைமை' என்கிற தலைப்பில் பாரதி பாடிய நொண்டிச் சிந்தின் அத்தனை வரிகளும் அப்படியே சிங்கள நிலைமைக்கு பொருந்துகின்றது. "நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்" எனப் பாரதியின் நெஞ்சம் அன்று கனத்தது போய் இன்று எம் நெஞ்சம் கனக்கின்றது. இனியாவது, இன்றாவது சிங்களம் உணருமா? வரலாற்றுத் தவறுகளை திருத்துமா? இவ்வினாவிற்கு விடைதேடி அலைவதே மீதமாகின்றது. இனம்புரியாத போதை மயக்கத்தில் மிதப்பதுபோல் பேரினவாதப் போதை உச்சிக்கேறித் தடுமாறும் சிங்களம், இப்போதையிலிருந்து விடுபடும் அறிகுறிகள் தெரியவில்லை. ஆனால் அடிக்கடி வலிப்பு வரும் நோயாளிபோலத் திடுக்கிட்டு விழிக்கும் சிங்கள இனவாத புத்திசீவிகள் அவ்வப்போது தரும் தன்னிலை ஒப்புதல் வாக்குமூலங்கள்கூட புலிகள்/தமிழ்மக்கள் நன்மை பெற்றுவிடக்கூடாதே என்பதையே முதன்மை நோக்கமாகக் கொள்வதைப் பார்க்கும்போது... என்ன சொல்வது? யதார்த்த நிலைமையை முற்றிலும் மறுக்க முடியாமலும் அதனை ஏற்க முடியாமலும அவர்கள் படும்பாடு - அதன் விளைவாக தமக்கு இலகுவான, எளிதில் இரையாகக்கூடிய பாதுகாப்பற்ற குழுக்கள் மேல் அவர்கள் காழ்ப்பு/வெறுப்பு/சினம் இடம்மாறிப் பாயும் விதம் எல்லாமே பல நூற்றாண்டுகால அவர்கள் அரசியல் முறைமை. இது மீண்டும் எவ்வாறு இன்று நிகழ்கின்றது என்று வாசகர்களுக்கு உணர்த்துவதே எம் கடமை.

**"Poetic Justice"** என்கிற இவ்வரசியல் சொல்லை அவ்வாறே இங்கு பயன்படுத்துகின்றோம். இன்றைய மிகச் சிக்கலான அரசியற் சூழலை விளக்க முனை

க.வே.பாலகுமாரன்

யும் சிங்கள இனவாத அறிவுஜீவிகள் 'தவிர்க்க முடியாமல்' 'தற்செயலாக' 'நாத் தடுமாறி' உதிர்த்த பொன்மொழியாக இச்சொல் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தினை நோக்கலாம். வரலாற்றின் போக்கு மிகத் தெளிவாகத் தெரிகின்றது. மிகப் பொருத்தமான நீதி இப்போது வழங்கப்படுகின்றது. "நாங்கள் சிறுபான்மை மக்களை ஒடுக்கும் போதெல்லாம் அவை பின்னால் எம்மையே திருப்பித் தாக்குகின்றன. சிறுபான்மையினர் தொடக்கத்தில் கோரியவற்றைவிட மிகவதிகமாகவே பின்னாளில் வழங்கவேண்டியதாகின்றது. முதலில் நாம் சிங்களம் மட்டும் என விடாப்பிடியாக நின்று தமிழை அரசகரும மொழியாக்கக்கூட மறுத்தோம். இப்போது நாற்பது வருடங்களுக்குப் பின்னால் மொழியுரிமை மட்டுமல்ல கூடியளவு தன்னாட்சியுரிமைகளையும் வழங்கவேண்டிய நிலை" (1) என இந்நிலையை குறிக்கவே 'Poetic Justice' என்கிற இச்சொல் பயன்படுத்தப்பட்டது. இதன் பொருள் எதுவென அகராதியைப் புரட்டியபோது மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டான நீதி அல்லது தண்டனை அல்லது பரிசு என்றிருந்தது.

அப்படியானால் சிங்களம் உண்மையை உணர்ந்து விட்டதா? அவசரப்பட வேண்டாம் எங்கள் அன்பிற்குரிய வாசகர்களே! அடுத்து வருவதைக் கவனியுங்கள் "புலிகள் தமிழ் ஈழத்தினை முறையாக சட்ட ரீதியாக உரிமையாக்க ஒரேயொரு பிரதான தடையொன்றுண்டு. சருவதேசம் புலிகளின் கரும்புலி அணி, அரசியற் படுகொலைகள் என்பவை காரணமாக புலிகளின் தனிநாடு குறித்து ஐயம் கொண்டிருக்கின்றார்கள். இதனால் எம்மைப் பற்றிய (சிறிலங்காவைப் பற்றிய) சந்தேகத்தைவிட புலிகள்மேலே அதிகம் சந்தேகமுறுகின்றார்கள். இத்தடையை நீக்கினால் தமிழீழம் அமைவது உறுதி. ஆனால் தற்போது தொடரப்படும் குறித்த தேவாலயங்கள் மீதான காட்டு மிராண்டித் தாக்குதல்கள் தொடருமானால், மத வெறியர் கருத்தினையேற்று மதமாற்றத் தடைச்சட்டத்தினை அரசாங்கம் கொண்டுவருமானால் - அப்போது சருவதேசம் இதனையொரு தனிமனித சுதந்திர மறுப்பாக, பெரும் மனித உரிமை மீறலாகக் கருதும். அப்போது புலிகள் முறையாக தமிழீழத்தை அமைக்கும் உரிமையை பெற்றுவிடுவர். இன்று நாங்கள் புலிகள் இல்லையென்பது



போல செயற்படுகின்றோம். பிரிவினை அபாயம் இல்லாததுபோல செயற்படுகின்றோம். நாங்கள் எமது பிரதான எதிரி சக கிறித்தவ சிங்களவர் என நினைக்கின்றோம், புலிகளையல்ல. நாம் சோமராமதேரரின் இறப்புப் பற்றி ஐயப்படுகின்றோம். அவரின் மரணச் சடங்கின்பொழுது அவரைக் கொன்றவரைப் பழிவாங்குவோம், மதப்போர் இங்கு வெடிக்கும் என அலறும்பொழுது புலிகள் தமது வேலையை இலகுவில் முடித்துவிடுவர். புலிகள் பற்றி, அவர்கள் பயங்கரவாதம் பற்றி ஒரு சொல் தானும் அன்று கூறினோமா?"(1), (2) இதுவே சிங்கள கருத்துருவாக்கிகள் நிலை. இவற்றிற்கெல்லாம் என்ன காரணம் வரலாற்றினைப் புரட்டினால் பதில் எமக்கு இலகுவில் கிட்டிவிடும்.

கிறித்தவ மத எதிர்ப்பு என்பது இன்று நேற்றுத் தோன்றிய விடயமல்ல. ஆங்கிலேயர் காலத்தில் பௌத்தம் பாதிக்கப்பட்டபொழுது அதற்கெதிராகக் குரல் கொடுக்க 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பலர் தோன்றினர். பௌத்தம் கிறித்தவத்திற்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததல்ல என்பதை இவர்கள் நிரூபித்தும், பௌத்தத்தை கிறித்தவத்திற்கு ஈடுகொடுக்கத்தக்கதாக மாற்றியும் செயற்பட்டனர். சமணர் பௌத்தரோடு சைவர்கள் அனல்வாதம் புனல்வாதம் அன்று செய்ததுபோல் விவாதங்களில் ஈடுபட்டனர். இதன்பொழுது ஏற்கனவேயிருந்த தமிழின எதிர்ப்போடு, மத எதிர்ப்பும் பேரினவாத சிந்தனையின் ஒரு மறைமுகப் பகுதியாகிவிட்டது. இதனை அனகாரிக தருமபாலர் எண்ணெய் ஊற்றி வளர்த்தார். கத்தோலிக்கத்தை எதிர்க்கும் மனநிலையை உருவாக்கினார். இதன் விளைவாக 1883 ஆம் ஆண்டளவில் தொட்டாடு சேனையில் மதக்கலவரம் ஒன்று வெடித்ததாக வரலாறு பதிவு செய்கின்றது. இக்கலவரத்தில் ஒரு பௌத்தனும் ஒரு கத்தோலிக்கனும் கொல்லப்பட்டதாகவும் முப்பதுபேர் காயப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் பன்னிரண்டு பேர் பொலிசார்.(3)

தருமபாலரின் போக்கு விசித்திரமாக அமைந்தது. ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு முன்னணியைப் பல்லின, பல்மதச் சார்பாக உருவாக்குவதற்குப் பதிலாக இவர் பௌத்தத்தினையே முதன்மைப்படுத்தினார். இவர் பிரதானமாகக் கவனம் செலுத்திய அம்சங்கள் கிறித்தவ எதிர்ப்பு, முசுலிம் எதிர்ப்பு, மது எதிர்ப்பு, மாட்டிறைச்சி உண்ணல் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு, தென்னிந்தியத் தமிழர் எதிர்ப்பு, மேலைத்தேய கலாச்சார எதிர்ப்பு, துட்டகாமினிக்கு மறுபிறவி வழங்க முயற்சி இவை யாவற்றினையும் ஒன்றிணைத்து சிங்களவரை மண்ணின் மைந்தராக உருவகப்படுத்தினார். கிறித்தவமே பலதெய்வ வழிபாட்டுமுறை,கொலை, களவு, விபச்சாரம், மதுப்பழக்கம் எல்லாவற்றிற்கும் காரணம்(3) என தருமபாலர் உரத்துக் கூவினார்.

இப்போது இக்குரல் மீண்டும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. சற்று கருதி மாற்றி வேறுபட்டு ஒலிக்கும் இக்குரலை மிகத் தெளிவாக உரத்து ஒலித்தவரே சோமராமதேரர். சோமராமதேரரின் வருகை என்பது சிங்கள பௌத்த பேரினவாத வரலாற்றில் இன்னொரு திருப்புமுனை. இவரின் வருகையோடும் மறைவோடும் இன்னொரு யூலைக் கலகம்போல சிறிலங்காவில் உருவாக வாய்ப்பிருப்பதாகவே பலரும் கருதுகின்றனர். "கிறித்தவ விவிலியக் குழுக்களால் தீட்டப்பட்ட - சதித்திட்டம் ஒன்றின் விளைவாக சோமராம தேரருக்கு மரணம் நேர்ந்தது என்றும் இவரின் மரணத்திற்கு கிறித்தவ மிசனறிமாரும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் ஒரு முக்கிய வர்த்தகப் பிரமுகரும் காரணம் (இவர் வேறு யாருமில்லை - சிலிங்கோ முதல் வரும் கிறித்தவருமான லலித் கொத்தலாவையே) என பெருமளவு சுவரொட்டிகள் கொழும்பில் காணப்பட்டன. 2003ஆம் ஆண்டு டிசம்பர் 24இல் நடைபெற்ற சோமரின் இறுதிச் சடங்குகள் அண்மைய வருடங்களில் இங்கு நடைபெற்ற மிகப்பெரிய பொதுநிகழ்வு. டிசம்பர் 25ஆம் திகதியே இதனை ஏற்பாட்டாளர்கள் நடத்த முயன்றனர். பெருமளவு மக்கள் கலந்துகொண்டு தாம் நேசித்த பிக்குவிற்கு இறுதி வணக்கம் செலுத்தினர். தோரணங்களைக் கட்டுவதில் வணிகர், ஆட்டோ சாரதிகள் மும்முரமாக ஈடுபட்டனர்" என உயங்கொட எழுதுகின்றார். (தி.குரல் 11.01.2004)

சோமராமர் என்ன கூறினார்? கிறித்தவத்தையும் மதமாற்றத்தையும் மிகக் கடுமையாகச் சாடினார். முசுலிம்களின் அரசியலை, அவர்கள் வணிக ஈடுபாட்டினை மிக இழிவாகக் கண்டித்தார். ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் கவர்ச்சியாக விவாதிக்க வல்லவரான இவர் தொலைக்காட்சி உரையாடல்கள் மூலம் பெரும் செல்வாக்குப் பெற்றார். முசுலிம் தமிழ் வர்த்தக செல்வாக்கினைக் கண்டித்தார். இத்தோடு நிற்காமல் தூய அடிப்படைப் பௌத்தத்தினை (சிங்களத்துவா என உயங்கொட அழைக்கும்) வலியுறுத்தும் சீர்திருத்தவாதியாக, ஊழலற்ற அரசியலை வலியுறுத்துபவராக, குழம்பிய நிலையிலிருக்கும் சிங்கள சமூகம் முன்தோன்றி அவர்கள் அபிமானம் பெற்றார். அத்தோடு பௌத்த குடும்பங்களில் நல்லொழுக்கத்தினை வலியுறுத்தி குறிப்பாக சிங்கள ஆண்களின் மது, போதைப்பொருள் பாவனை, வன்முறை இவற்றினைக் கண்டித்து பெண்கள் மத்தியில் ஆதரவினைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறானது சோமதேரரின் அபாயகரமான ஆளுமை. "சமூகவியல் நோக்கில் சிறு வர்த்தகர், நடுத்தர வர்க்கத்தினர் பெண்கள் இளைஞர்களை நோக்கியும் சிறுபான்மையினர்கள் மீதான சகலவகை பீதியுணர்வுகளையும் பயன்படுத்தித் திளைப்பதில் நாட்டம் கொண்டுள்ள சிறிய அடிப்படைவாத கோட்பாட்டுக் குழுக்களையும் அவர் ஈர்த்தார்" என்கிறார் உயங்கொட.(4)

இக்கதைகளை அவதானிக்கும் பொழுது 1956 தொட்டு ஒவ்வொரு தமிழின அழிப்புக் கலவரத்தின் பொழுதும் நடந்தவையே மீள் நினைவோட்டமாகின்றது. அரசசார்ந்த ஊடகங்களால் பரப்பப்படும் வதந்திகள், அரசியல் சக்திகளின் பின்னணி எல்லாமே இறந்தகால வரலாறு நிகழ்காலமாவதைக் காண முடிகின்றது. இங்குள்ள பெருத்த அபாயமென்னவெனில் சிங்களத்தின் பிரதான அரசியல் சக்திகள் யாவுமே அடுத்து வரும் தேர்தலுக்காக இச்சக்தியைப் பயன்படுத்த ஆயத்தமாகிவிட்டன என்பதே. சோமராமரின் இறுதி நிகழ்வில் ஆற்றப்பட்ட இனவாத வெறியூட்டும் உரைகள் அவ்வாறே ஒளிபரப்பப்பட்டமை, அரசமரியாதை வழங்கப்பட்டமை, மதமாற்று தடைச்சட்டத்தினை அறுபது நாட்களுக்குள் கொண்டுவரும் முடிவு எல்லாமே மிகத் தெளிவான செய்திகளைச் சொல்லி நிற்கின்றன. இங்குள்ள இன்னொரு பெருத்த அபாயமென்னவெனில் புலிகளையும் இக்குரோதச் சிக்கலில் இவர்கள் ஈடுபடுத்தும் போக்கு. தென்னிலங்கையிலுள்ள கிறித்தவ தேவாலயங்கள் அனைத்துமே புலிகளின் செயற்பாட்டுத் தளங்கள் என்றும் புலிகளின் ஆணைப்படியே அவர்களது கிறித்தவ ஏஜண்டுகள் சோமராமரைக் கொன்றதாகவும் இச்சக்திகள் அலறுகின்றன. கடந்தவாரம் புலிகள் உதவியோடு சிங்கள பௌத்தத்தினை அழிக்க புறப்பட்டுள்ள பௌத்த விரோதிகளை முறியடிப்போம் என வருணச் சுவரொட்டிகள் தென்னிலங்கையெங்கும் ஆயிரக்கணக்கில் ஒட்டினர். சிங்களப் பகுதிகளிலுள்ள கிறித்தவ தேவாலயங்களுக்கெதிரான தாக்குதல்கள் புலி/தமிழ் விரோத உணர்வுகளைச் சிங்களவர் மத்தியில் தூண்டும் வகையில் செயற்படுகின்றன. இவற்றிற்குப் பின்னணியில் பெரும் அரசியல் சக்திகள் செயற்படுவதாக கட்டுவானையில் நான் சந்தித்த சாதாரண கிறித்தவ சிங்கள மக்களும் கொழும்பிலுள்ள விசயமறிந்த அரசியலாய்வாளர்களும் கூறினர்.(5)

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

அங்கோலா நாட்டுக் கவிஞரான அன்ரோனியோ ஜசின்ரோ தனது நாட்டின் சோகம் பற்றி.

"அந்தப் பண்ணையில்
மழை பெய்வதில்லை
எங்கள் வியர்வையே
பயிர்களுக்குப் பாய்ச்சப்படுகிறது"

என்று எழுதினார். அதனை சிறிது மாற்றி.

"அந்த எண்ணைக் குழாய்களில்
பெற்றோல் செல்வதில்லை
எமது குருதியே
பாய்ந்து செல்கிறது"

என்று எழுதினால். அது தென்சூடானுக்கு நன்கு பொருத்தமானதாக இருக்கும். அந்த அளவுக்கு உள்நாட்டுப் போர்களில் சுதேசிய மக்களின் குருதி அந்த மண்ணில் சிந்தப்பட்டிருக்கிறது.

**வரலாற்றுப் பின்னணி.**

மத்திய ஆபிரிக்க ஏரிகளிலிருந்து 4000 மைல்கள் அலைந்து மத்தியதரைக் கடலுடன் சங்கமமாகும் நைல்நதித் தீரங்களில் அமைந்த சூடான் நாட்டில் ஆகக் குறைந்தது பலமில்லியன் வருடங்கள் மனிதன் வாழ்ந்திருக்கலாம் எனக் கூறும் ஆய்வாளர்கள் நாகரீகத்தின் தொட்டிலாக இயூ ப்றேற்ஸ்-ஐக் கூறுவதைவிட சூடானைக் கூறுவது பொருத்தமானதெனக் கருதுகிறார்கள். நாட்டின் பொருளைகள் எதுவுமற்ற சுதந்திரத்தைக் கோரியதோடு எகிப்தோடு எந்த இணைப்பும் இருக்கக்கூடாது என்றும் கோரியது.


1953.பெப்ரவரி 12ஆம் திகதி கூட்டு நிர்வாகத்தை முடித்துக்கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்ட பிரித்தானியாவும் எகிப்தும் சர்வதேச ஆணைக்குழு ஒன்றின் மேற்பார்வையில் சூடானுக்கு சுய ஆட்சி வழங்குவதற்கான தேர்தலை நடத்த ஒப்புக்கொண்டன.

1953 நவம்பர். டிசம்பர் மாதங்களில் நடத்தப்பட்ட இத்தேர்தலில் NUP வெற்றிபெற. அதன் தலைவரான இஸ்மயில் அல்-அஸ்ஹாரி சூடானின் முதலாவது பிரதமராகப் பதவியேற்றார்.

1955 டிசம்பர் 19ஆம் திகதி "முழுமையான சுதந்திரமுள்ள இறைமையுள்ள நாடாக" சூடான் ஆகவேண்டும் என்று நாடாளுமன்றம் வாக்களித்தது. 1956 ஜனவரி 01ஆம் திகதி பிரித்தானிய. எகிப்தியப் படைகள் வெளியேறின. சூடான் சிவில் சேவையில் எகிப்திய பிரித்தானிய அதிகாரிகளுக்குப் பதிலாக சூடான் அதிகாரிகளை மாற்றீடு செய்வது விரைவாக இடம்பெற்றது. நூற்றுக்கணக்கில் மாற்றீடு செய்யப்பட்டவர்களில் தென்புலத்தவர் நால்வர் மட்டுமே இருந்தனர்.

வடக்கு சூடானில். 22மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் செய்ய முறையான அனுமதிப் பத்திரங்கள் பெற வேண்டியிருந்தது. அதேவேளை. தென் சூடானியர்கள் நுகர்வோராக இருக்க ஊக்கப்படுத்தப்பட்டார்களேயொழிய வர்த்தகர்களாக ஆக ஊக்கப்படுத்தப்படவில்லை.

சூடானுக்கு சுதந்திரம் வழங்க முன்பதாக தென்சூடானை என்ன செய்வது என்று பிரித்தானிய குடியேற்றவாத நிர்வாகிகள் யோசித்தார்கள். வடக்கிலும் தெற்கிலும் வாழ்ந்தவர்கள் தெளிவாகவே வேறுபட்ட இனக் குழுமங்கள் என்றும் வேறுபட்ட தேசியத் தன்மை கொண்டவர்கள் என்றும் அவர்களுக்கு நன்கு தெரியும். ஒன்றுக்கொன்று எதிரான சமூக. கலாச்சார. மொழி. மதரீதியான வேறுபாடுகளையும் யானைத் தந்தம் மற்றும் அடிமை வர்த்தகம் காரணமான வரலாற்று ரீதியான கடும் வெறுப்பைக் கொண்டவர்களான வடக்கு. தெற்கு சூடானியர்களை தகுந்த பாதுகாப்புக்கள் இன்றி இணைப்பது அரசியல் தற்கொலைக்குச் சமமானது என்பதை அவர்கள் நன்றாகவே உணர்வார்கள். எனினும் சிவில் ருக்கும் அரசிடமிருந்து தமது மண்ணை மீட்கப் போராடி வருகிறார். தென்சூடான் விடுதலை இராணுவத்தின் (SPLA) பிரதம தளகர்த்தராக அவர் இன்றைக்கு இருக்கிறார். தென் சூடானுக்கு உள்ளக விவகாரங்களில் பிராந்திய சுயாட்சியை அளிக்கும் அடிஸ் அபாபா ஒப்பந்தத்தோடு. இந்த மோதல்கள் 1972ஆம் ஆண்டில் ஓய்வுக்கு வந்தன. அடுத்த பத்து வருடங்களுக்கு உள்நாட்டுப் போரில் இடைவெளி ஏற்பட்டது. 1960களின் பிற்கூறுகள் வரையான காலப்பகுதிவரை 500.000 மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் பலநூறு தென்புலத்தவர்கள் காடுகளில்




# ஆக்கிரமிப்பிலிருந்து மீண்டெழும் தென் சூடான்.

மியத்தில் தற்போதும் முக்கிய பங்கை வகிக்கின்றதும். எருதுகளால் இயக்கப்படுவதுமான நீர்ச்-சகடை. கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு பாவனைக்கு வந்துவிட்டது. கிட்டத்தட்ட இதே சமயத்தில் எகிப்தை காம்பைஸஸ் ஆக்கிரமிக்க வந்தபோது பாரசீகத்தவரால் கொண்டுவரப்பட்ட ஒட்டகங்களும் இங்கு வந்துசேர்ந்தன.

சக்கரவர்த்தி ஜஸ்ரினியனின் ஆட்சியின் போது சூடானுக்குள் இருந்த பல ஆதிவாசி அரசுகள் கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றப்பட்டன. 16ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் சமயம் பரவும்வரை நைல்நதித் தீரமெங்கும் கிறிஸ்தவ ஆலயங்கள் பரவிக் கிடந்தன.

17ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எகிப்தில் ஆட்சிக்குவந்த மொஹமட் மி. 1821ம் ஆண்டளவில் வடக்கு மற்றும் மத்திய சூடான் பகுதிகளை கைப்பற்றிக்கொண்டார்

டொங்கோலா படகு கட்டும் நிபுணர் ஒருவருக்கு மகனாகப் பிறந்த மொஹமட் அகமட். தன்னை 'மாஹ்தி'(இரண்டாவது தீர்க்கதரிசி)யாகப் பிரகடனப் படுத்தி மேற்குப்புற பழங்குடிப் படைகளின் உதவியோடு தலைநகர் காட்டூம் தவிர்ந்த ஏனைய பகுதிகளை 1884ல் கைப்பற்றிக்கொண்டார்.

இந்நச் சமயத்தில் எகிப்துக்குள் நுழைந்திருந்த பிரித்தானியா. காட்டூமில் நிலைகொண்டிருந்த படைகளை வெளியேற்ற. அப்பணிக்கு சற்றும் பொருத்தமில்லாத ஜெனரல் சாள்ஸ் கோர்டன் (Gen. Charles Gordon)ஐ அனுப்பிவைத்தது. 317 நாட்களுக்குப் பின்பு மாஹ்தியின் படைகள் காட்டூம் படைகளை முறியடித்து நகரை எரித்து அழித்தன.

மஹ்தியை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த காலிபா அப்டல்லா (KHALIFA ABDAL-LAH)வின் படைகளை 1898ஆம் ஆண்டில். ஜெனரல் ஹேபட் கிச்செனர் (Gen. HERBERT KITCHENER) தலைமையில் வந்த ஆங்கில-எகிப்தியப் படைகள் முறியடித்து காட்டூமுக்குள் வெற்றியாளராய் நுழைந்தன.

சூடானை கூட்டாக நிர்வகிப்பதற்கான ஒப்பந்தம் (CONDOMONIUM AGREEMENT) ஒன்று எகிப்துக்கும் பிரித்தானியாவுக்குமிடையே 1899ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்டாலும். எழுச்சிபெற்ற எகிப்திய தேசியவாதிகள் கைரோவின் வீதிகளில் வைத்து சூடானின் ஆளுனரான சேர் லீ ஸ்ராக் (Sir Lee Stack)ஐக் கொலை செய்ததற்குப் பதிலடியாக சூடானிலிருந்த அனைத்து எகிப்திய அதிகாரிகளையும் பிரித்தானியா வெளியேற்றியது.

1936ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஆங்கில - எகிப்திய நட்புறவு ஒப்பந்தத்தின் (Detente)பின் சில எகிப்தியர்கள் சூடானின் சிறு பதவிகளுக்கு வர அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் இந்த 1936ஆம் ஆண்டு ஒப்பந்தத்தினால் உஷுப்பப்பட்ட சூடான் தேசியவாதிகள் எகிப்தியர்கள் திரும்ப வருவதற்கும். வேறு நாடுகள் தங்கள் தலைவிதியை நிர்ணயிப்பதற்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள்.

**அரசியல் கட்சிகளின் உதயம்.**

1945ஆம் ஆண்டளவில் இரண்டு அரசியல் கட்சிகள் உருவாகியிருந்தன. சக்திமிக்க மதத் தலைவரான செய்யத் சேர் அலி அல்-மிர்ஹானியின் ஆதரவைப்பெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் கட்சி (NUP) சூடான் எகிப்தோடு இணையவேண்டும் என்று கோரியது. செய்யத் சேர் அப்துர்-றஹ்மான் ஆதரவைப் பெற்றிருந்த உம்மா கட்சி (UP). நிபந்த அரபு - முஸ்லிம்களாவர்.

தென்சூடான் என்பது. சூடானில். பதின்மூன்றாவது சமாந்தரக் கோட்டுக்குத் தெற்கே. 400.000 சதுரமைல்களை (இலங்கையின் பரப்பளவு 25.000சதுரமைல்) கொண்டதும் பார்-எல்-காஸல் (Bahr-El-Ghazel) ஈகுவட்டோரியா (Equatoria). மேல்நைல் பிராந்தியங்கள் (Upper Nile Regions) முதலியவற்றைக் கொண்டதுமான பகுதியாகும். வடக்கே. அரபு-இஸ்லாமிய வடக்கு சூடானையும். மேற்கே சாட் மற்றும் மத்திய ஆபிரிக்கா ஆகியவற்றையும். தெற்கே ஸையர் மற்றும் உகண்டா ஆகியவற்றையும். கிழக்கே கென்யா மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.



தெற்கு சூடானில் அண்ணளவாக எட்டு மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் ஆபிரிக்க - கிறிஸ்தவர்களாகும்.

இரண்டு சூடான்களும் பிரித்தானிய ஆட்சியின்கீழ் இருந்தபொழுது அவை வேறுவேறாகவே நிர்வகிக்கப்பட்டன. பிரித்தானிய குடியேற்ற நாடுகளின் பாணியில் வடக்கு சூடான் நிர்வகிக்கப்பட்டது.

தென்சூடானில் ஹென்றி லூகாட் பிரபுவால் வடிவமைக்கப்பட்ட கொள்கை அடிப்படையிலான நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது. இரண்டு பிராந்தியங்களுக்குமிடையேயான வேறுபாட்டை நிலைநிறுத்தும் விதத்தில் மூடிய மாவட்ட சட்டம் 1920இல் உருவாக்கப்பட்டது. இரு நாடுகளுக்கிடையேயான பயணத்துக்கென கடவுச்சீட்டு முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டது. 60 வருடகால பிரித்தானிய ஆட்சியிலே தென் சூடானியர்கள் எவரும் கோர்டன் கல்லூரியில் (தற்போது காட்டூம் சர்வகலாசாலை) கல்விகற்க அனுமதிக்கப்படவில்லை. பிரித்தானிய கிழக்காபிரிக்காவிலேயே அவர்கள் கல்வி கற்றார்கள். வடக்கைச் சேர்ந்த அரபுக்கள் தெற்கில் வர்த்தகம் சேவலரும். அந்தனி ஈடனின் தொழிற்கட்சி அரசும் "தென்சூடான் கொள்கை"யைக் கைவிட்டு. ஒருங்கிணைப்பதற்கு முடிவை எடுத்ததானது முதல்தர கழுத்தறுப்பென்றே கூறவேண்டும். அதையும்விட. தென்சூடான் ஆளுனர்கள் வடசூடானுடன் எந்தத் தொடர்பையும் வைத்திருக்காமல். பிரித்தானிய கிழக்கு ஆபிரிக்காவுடனேயே தங்கள் உத்தியோகபூர்வ அலுவல்களை நடத்திவந்தார்கள். 1928ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட றெஜாப் மொழி மகாநாடு ஆங்கிலத்தை உத்தியோகபூர்வ மொழியாக ஏற்று அரபு மொழியை முற்றாகவே நிராகரித்ததன் மூலம். வடக்கையும் தெற்கையும் பிரித்தே வைப்பதில் முனைப்பாக இருந்தார்கள் என்பதைக் கவனிக்கலாம்.

தெற்கிலே அரசியல் கட்சிகள் எதுவும் உருவாகியிருக்கவில்லை என்பதைச் சாட்டாக வைத்து சுயநிர்ணய செயற்பாட்டில் தெற்கில் இருந்த மக்களுக்கு எந்தப் பங்கும் வழங்கப்படவில்லை. வடக்கு - தெற்கு சூடானியர்களுக்கு பிரித்தானிய அரசு சம வாய்ப்புகளை வழங்கியிருந்தால் தற்போது எழுந்திருக்கும் நெருக்கடிக்கு வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும் என்பதோடு. தற்போதைய உள்நாட்டுப் போருக்கு முழுமுதற் காரணியாக பிரித்தானிய அரசின் சூடான் பற்றிய போக்கே இருக்கிறது எனலாம். 1970 - 1980களில் தென் சூடானியர்கள் வர்த்தகத்திலும் கல்வியிலும் நிலைகொள்ள முயன்றாலும் உள்நாட்டுப் போர் தொடங்கியதால் அந்த முயற்சிகளும் பாழ்பட்டுப் போயின.

பிரித்தானியாவும் எகிப்தும் இணைந்து 1953இல் சூடானுக்கு சுய ஆட்சியையும் சுயநிர்ணயத்தையும் வழங்கும் உடன்பாட்டுக்கு வந்தன. சுதந்திரத்தை நோக்கிய இடைமாறு காலம் (Transitional period). சூடானில் 1954ஆம் ஆண்டில் முதலாவது பாராளுமன்றம் உருவாக்கப்பட்டதோடு ஆரம்பமாகியது. பிரித்தானிய. எகிப்திய அரசுகளின் ஒப்புதலோடு. தற்காலிக அரசியலமைப்புடன் 1956 ஜனவரி 01ஆம் திகதி சூடான் சுதந்திரமடைந்தது. அதனை அங்கீகரித்த முதற் சில நாடுகளில் அமெரிக்காவும் அடங்கியிருந்தது.

அராபியர்களின் தலைமையிலான காட்டூம் அரச சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதான தன் வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டது. இதனை எதிர்த்து தென்புல இராணுவ அதிகாரிகள் கலகம் செய்தனர். இது பதினேழு வருடகாலம் நீண்டு சென்ற உள்நாட்டுப்போரை (1955 - 1972) ஆரம்பித்து வைத்தது. தென்புல இராணுவ அதிகாரிகளின் கலகத்தை அடக்க. அரச பாதுகாப்புப் படைகளில் உறுப்பினராக இருந்த மேஜர் ஜெனரல் ஜோண் கறாங் (Major General John Garang) அனுப்பப்பட்டார். அவர் கலகத்தை அடக்குவதற்குப் பதிலாக அவர்களுடன் சேர்ந்துகொண்டு கடந்த இருபது வருடங்களாக அரபுக்கள் மேலாண்மை கொண்டி மறைந்து வாழ்ந்தனர் அல்லது அயல் நாடுகளுள் தப்பியோடிவிட்டனர்.

1983 செப்ரெம்பரில் சூடானின் அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கென. சூடானின் சிவில் சட்டங்கள் 'சூரியா' (இஸ்லாமிய சட்டங்கள்)வுக்கு அமைவானவையாக மாற்றப்படும் என ஜனாதிபதி நிமெய்ரி அறிவித்தார். இந்த அறிவிப்பானது 1972ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்தது. காட்டும் அரசு என்ன விலை கொடுத்தேனும் தெற்கின் வளங்களைச் சுரண்ட முயன்றது. போர் மீண்டும் வெடித்தது. இம்முறை சோவியத் யூனியன் ஆதரவுபெற்ற எத்தியோப்பியாவின் உதவியோடு சூடான் மக்கள் விடுதலை இராணுவம் (SPLA) என கிளர்ச்சியாளர் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தனர்.

வடக்கு-தெற்கு பகைமைகள் குடியேற்றவாத சகாப்தத்துக்கு முன்பிருந்தே தொடங்கிவிட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் அடிமைகளை பிடிப்பதற்கான இடமாகவே தென்புலத்தை அரபுகள் கருதினார்கள். அங்கு வாழ்ந்தவர்களின் ...த்துக்காக என்றில்லாவிட்டாலும் 'பிற சமயிகள்' என்பதனாலேயே தரம் குறைந்தவர்களாக அரபுக்களால் தென்சூடானியர் கருதப்பட்டார்கள். ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் அடிமைகளைப் பிடிப்பது 19நூற்றாண்டின் பிற்கூறுகளில் முடிவுக்கு வந்தாலும் வெறுப்பினுடைய எச்சங்கள் தென்புலத்தவரிடையே படிந்திருந்தன. அராபியர்கள் தென்புலத்தவரைப் 'பிற சமயிகள்' எனவே பார்த்தார்கள்.

1983-1996 காலப்பகுதியில் தென் சூடானில் 1.9மில்லியன் மக்கள் கொன்றழிக்கப்பட்டனர். உலகமோ. குறிப்பாக ஆபிரிக்காவோ. அவர்கள் மனிதர் என்ற வகையில்கூட அவர்கள்மீது அக்கறை காட்டவில்லை. உலகளாவிய ரீதியில் உள்ள இடம் பெயர்வுக்கு உட்படும் 25மில்லியனில் ஐந்திலொரு பங்கு அளவினரான 5மில்லியன் தென்சூடான் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர நேர்ந்தது. பலர் அயலிலுள்ள எத்தியோப்பியா. கென்யா. உகண்டா. ஸையர் ஆகிய நாடுகளுக்கு ஏதிலிகளாக தப்பிச் சென்றனர். நூறாயிரக் கணக்கானவர்கள் - ஒரு மாபெரும் மனிதவனம் - அமெரிக்கா. கனடா. பிரித்தானியா. ஐரோப்பா. அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் குடியேற்றத்துக்காக அனுமதிக்கப்பட்டனர்.

காட்டூமின் NIF ஆட்சியினரின் படைகள் தென்சூடானில் மேற்கொண்ட செயற்பாடுகள் குறிப்பிட்ட இனக் குழுமங்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட 'இனப்படுகொலை'யாகவும் 'இனச் சுத்திகரிப்பு' ஆகவும் கருதப்படவேண்டும். என பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டேவிட் டி சாண்ட் குறிப்பிடுகிறார். NIF இன் ஆயுதப்படையான PDF. தென்சூடானியப் பெண்களையும். யுவதிகளையும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள். பெரும்தொகையான இள வயதினரைக் கடத்திச்சென்று வடக்கில் அடிமைகளாக ஆக்கினார்கள். அவர்களில் சிலர் லிபியாவின் பகிரங்க சந்தைகளில் அடிமைகளாக விற்கப்பட்டார்கள். பல பெண்கள் விபச்சாரிகளாகவும் வைப்பாட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டார்கள். மக்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து 'எரிபரந்தெடுத்தல' (SCORCHED EARTH POLICY) முறையில் விரட்டியடித்தார்கள்.


தென்புலத்தில் பரந்த எண்ணை வளங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகளை வலிந்து வடக்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# நம்பிக்கை இழந்த மக்களும் நிலை தடுமாறும் சமாதானமும்

**— எல்லாளன் —**

சிறிலங்காவின் ஜனாதிபதிக்கும் - அதன் பிரதமருக்கும் இடையேயான அதிகாரப் போட்டியால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு முடிவேற்படும் வாய்ப்பு இதுவரை தென்படவில்லை.



இதனால், போர்நிறுத்தம் ஏற்பட்டு - சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி - இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் நிலையிலும் தமிழ்மக்களுக்கு எந்தவித சமாதான நன்மைகளும் கிட்டவில்லை.

போர்க்காலத்தில் இருந்த அகதிவாழ்வும் - அன்றாட வாழ்வியல் நெருக்கடிகளும் இன்றும் அப்படியே தான் உள்ளன.

இராணுவ நிலைகளைத் தூர விலக்கி மக்களின் மீள்குடியேற்றத்திற்கு வழிவகை செய்யும் போர்நிறுத்த ஒப்பந்த விதிகள் வெறும் எழுத்திலேயே உள்ளன. அதற்குச் செயல் வடிவம் கொடுக்கச் சிங்களத்துப் பிரதமரும் நடவடிக்கை எடுக்கவில்லை. சிங்களத்து ஜனாதிபதியும் முயற்சிகள் செய்யவில்லை. சிங்களப் படைத் தலைமையும் அலட்டிக் கொள்ளவில்லை.

போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் முடிவடையும் நேரத்திலும் தமிழரின் கல்விக் கூடங்களும், வழிபாட்டுத் தலங்களும், பொதுக் கட்டடங்களும், மக்கள் குடியிருப்புக்களும் இராணுவ முகாம்களாக - படை நிலைகளாகவே உள்ளன.

உடன்பாட்டு விதிகளை அமுல்படுத்தக் கோரி தமிழ் மக்கள் நடாத்தும் போராட்டங்களும் - கோரிக்கைகள் அடங்கிய மனுக் கையளிப்புகளும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

தமிழர் நிலத்திற்கு, குறிப்பாக குடாநாட்டு நிலவரங்களைப் பார்வையிட வரும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் - நல்லெண்ணக் குழுக்களும் தமிழ்மக்களின் நிலையை அனுதாபத்துடன் நோக்கி - அறிக்கைகள் விடுவதுடன் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். அதற்கு அப்பால் சிங்கள அரசு செயற்படும் விதத்தில் அதற்கு அழுத்தங்கள் கொடுப்பதில் அவை தீவிர அக்கறைகள் காட்டுவதில்லை.

அடுத்தடுத்து நல்லெண்ண விஜயம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளால் குடாநாட்டின் நிலைமை மாற்றமடைய வாய்ப்புண்டு என்று காத்திருந்த மக்கள் இப்போது மெல்ல - மெல்ல விரக்தி நிலைக்குள் சென்று கொண்டிருக்கின்றனர்.

தமிழ்மக்களின் இந்த விரக்தி உணர்வை - கைவிடப்பட்ட மனோ நிலையை குடாநாட்டிற்கு விஜயம் செய்யும் ஊடகவியலாளர்கள் பகிரங்கப்படுத்தி வருகின்றனர். சிங்கள ஊடகவியலாளர்களில் சிலர், இதை மனந்திறந்து வெளிப்படுத்தும் அளவுக்கு அங்குள்ள நிலைமை மோசமடைந்து செல்கின்றது.

போர்நிறுத்தம் ஏன் மேற்கொள்ளப்பட்டது!? சமாதானப் பேச்சுக்கள் ஏன் தொடங்கப்பட்டன!? என்று ஊடகவியலாளர்களிடம் மக்கள் வினவும் அளவுக்கு மக்களின் மனநிலை உள்ளது.

எனினும், சமாதானத்திற்கு ஒரு இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்குவது என்பதில் புலிகள் இயக்கம் மிகவும் உறுதியாக உள்ளது. அதற்காக நீண்டதொரு பொறுமையையும் - விட்டுக் கொடுப்பையும் மேற்கொள்வதற்கும் அது தயாராக உள்ளது. அதேவேளை, அந்தப் பொறுமைக்கும் - விட்டுக் கொடுப்பிற்கும் ஓர் எல்லை உண்டு என்பதையும் புலிகள் இயக்கம் கோடி காட்டியுள்ளது.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நடைபெற்றுவரும் விடுதலைப் போரில் தமிழர் சந்தித்த இழப்புக்களும் - துயரங்களும் எண்ணில் அடங்காது. சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப் புலிகள் இயக்கம் மேற்கொண்ட அமைதி முயற்சிகளையும் - நெகிழ்வுப் போக்குகளையும் சிங்கள அரசாங்கங்கள் தொடர்ந்தும் உதாசீனம் செய்து வருவதையும் தமிழ்மக்கள் நன்கறிவர்.

இவை காரணமாக, சமாதான முயற்சிகளில் தமிழ்மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளும் - எதிர்பார்ப்புக்களும் மெதுமெதுவாக ஆனால் உறுதியாக பொடிப்பொடியாகி வருகின்றன. தமிழ்மக்களின் சகிப்புத்தன்மை எல்லை மீறும்போது அவர்கள்மீது சமாதான நம்பிக்கையைத் திணிக்கும் கையறு நிலையைச்செய்ய புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

சமாதான வழிமுறையில் தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் சர்வதேசம் விடாப்பிடியாக உள்ளது. ஆனால் அத்தகையதொரு அரசியல் நிலைப்பாட்டை உறுதியாகக் கடைப்பிடிக்க சிங்களதேசம் இன்றுவரை தயாராக இல்லை. சிங்கள தேசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஒரு தற்காலிகத் தீர்வு காணவும் - சர்வதேச சமூகத்தைத் தற்காலிகமாக ஏமாற்றவுமே அது சமாதான நாடகத்தை மாற்றி மாற்றி அரங்கேற்றத் துடிக்கின்றது.

சிங்கள அரசின் இந்தச் சதி நிலைப்பாட்டை இப்போது சர்வதேச சமூகமும் உணரத்தொடங்கிவிட்டது. ஆயினும், சிங்கள அரசியல்வாதிகள் தங்களுக்குள் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்து, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல்தீர்வை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையையும் அது கைவிட விரும்ப வில்லை.



சர்வதேசத்தின் இந்த நம்பிக்கைக்கு மாறாகவே சிங்கள தேசத்தில் இன்று அரசியல் நிலைப்பாடுள்ளது. தீவிர இனவாதிகளான ஜே.வி.பி கட்சியுடன் சந்திரிகா அம்மையார் கூட்டுச் சேர்ந்து ஒரு அரசியல் கூட்டணியை அமைத்துள்ளார். இந்தக் கூட்டு முன்னணி தமிழரின் அரசியல் அபிலாசைகளை ஏற்று - தமிழ் - சிங்கள இன முரண்பாட்டிற்கு ஒரு நேர்மையான - உறுதியான தீர்வை முன்வைக்கும் என்று தமிழ்மக்கள் நம்பவில்லை. மாறாக, அரசியல் தீர்வு என்ற போர்வையில் ஒரு அரைகுறைத் தீர்வை தமிழ்மக்கள் மீது திணிக்கும் முயற்சிகளிலேயே அது தன்னை ஈடுபடுத்தப் போகின்றது.

இவ்வாறானதொரு நிலை ஏற்படும்போது தமிழ்மக்களின் பொறுமை கலைந்திட வாய்ப்புண்டு. அந்தவேளையில் மக்களின் மனநிலைக்கேற்றவாறு செயற்படவேண்டிய நிலைக்குப் புலிகள் இயக்கமும் தள்ளப்படும்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கும் - பாராளுமன்றின் நிருவாக அதிகாரத்திற்குமான இழுபறி நிலைக்குத் தீர்வேற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகையதொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நிலையில் சிறிலங்காவின் அரசியல் அமைப்பும் இல்லை.

இதனாலேயே அரசியல் அமைப்புக்கு வெளியே நின்று சிந்தித்தவாறு ஒரு இடைக்கால நிருவாக வரைபைப் புலிகள் இயக்கம் வரைந்து அரசிடம் சமர்ப்பித்துள்ளது. அந்த வரைபு சமர்ப்பிக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரங்களைத் தனதாக்கிக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் புலிகள் சமர்ப்பித்த வரைபுபற்றி காத்திரமான பதில் எதையும் வழங்கவில்லை.

இதேசமயம், முஸ்லிம் தலைவர்களை முடுக்கிவிட்டுத் தமிழரின் அரசியல் பலத்தைச் சிதைக்க முயலும் அரசியலிலும் சிங்களத் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். சிங்களத்தின் இந்த சூழ்ச்சிகர அரசியல் தந்திரத்திற்கு முஸ்லிம் தலைவர்களும் பலியாகி வருகின்றனர் என்பது வேதனையான விடயமாகும்.

இவ்விதமாக, சிங்கள தேசத்தின் அரசியல் நிலையும் - சிங்களக் கட்சிகளின் மனநிலையையும் உற்று நோக்கிப் பார்த்தால் சமாதானத்திற்கான வாய்ப்பு நம்பிக்கையீனமாகவே தென்படுகின்றது. இதேசமயம், சிங்களத்தின் இறைமையையும் - அதன் கௌரவத்தையும் விட்டுக்கொடுத்து உலக நாடுகள் சிலவற்றுடன் அது செய்யமுற்படும் இராணுவ ஒப்பந்தங்கள், சமாதானத்தை வளர்க்க உதவமாட்டாது என்பதும் தெளிவாகின்றது.

இலங்கைத்தீவு மீண்டும் ஒருமுறை ஒரு இருண்ட அத்தியாயத்தினுள் நுழைய முற்படுகின்றதா? என்ற கேள்வியை சிங்களத் தலைவர்களின் செயற்பாடுகள் எழுப்புகின்றன.

தமிழ்மக்களைப் பொறுத்தவகையில் அவர்கள் தெளிவான நிலைப்பாட்டுடன் உள்ளனர். எப்பாடுபட்டாவது தம் அரசியல் தலைவிதியை தாமே தீர்மானிப்பது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளனர். இந்த அரசியல் நோக்கத்திற்காக, புலிகளின் கரத்தைத் தமிழ்மக்கள் பலப்படுத்தி வருகின்றனர். தமிழரின் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து புலிகளின் தலைமையை ஏற்று அவர்களுக்குப் பக்கபலமாகவும் செயற்பட்டு வருகின்றனர். வரலாற்றில் முதற்தடவையாக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு புலிகள் இயக்கத்தின்கீழ் அணிவகுத்துள்ளனர். இந்த அரசியல் உண்மையை, தமிழர் நிலத்தின் அரசியல் யதார்த்தத்தை சிங்களத் தலைவர்களும் - சர்வதேச சமூகமும் கருத்தில் எடுக்க வேண்டும். ■

தீவிர இனவாதிகளான ஜே.வி.பி கட்சியுடன் சந்திரிகா அம்மையார் கூட்டுச்சேர்ந்து ஒரு அரசியல் கூட்டணியை அமைத்துள்ளார். இந்தக் கூட்டு முன்னணி தமிழரின் அரசியல் அபிலாசைகளை ஏற்று – தமிழ் – சிங்கள இன முரண்பாட்டிற்கு ஒரு நேர்மையான – உறுதியான தீர்வை முன்வைக்கும் என்று தமிழ்மக்கள் நம்பவில்லை. மாறாக, அரசியல் தீர்வு என்ற போர்வையில் ஒரு அரைகுறைத் தீர்வை தமிழ்மக்கள் மீது திணிக்கும் முயற்சிகளிலேயே அது தன்னை ஈடுபடுத்தப் போகின்றது. இவ்வாறானதொரு நிலை ஏற்படும்போது தமிழ்மக்களின் பொறுமை கலைந்திட வாய்ப்புண்டு.

# "என்ன நடந்தாலும் இஞ்சதான் இரிக்கணும்"

— அன்புமாறன் —

உயர்ந்து வளர்ந்த அடர்ந்த காட்டு மரங்களினூடே அந்த வீதி நீண்டு ஒட்டிக்கொண்டிருந்தது. காட்டு மரங்களை இப்பொழுதுதான் டோசர்போட்டு ஒதுக்கியிருக்கின்றார்கள் எனத் தோன்றியது. எங்கள் பயணம் தொடங்கி ஒரு மணித்தியாலத்தை எட்டிக்கொண்டிருந்தது. "அது திம்புலாகல மலை, அது பெரிய மியாங்குளமலை, அருகில் சின்ன மியாங்குளம், தூரத்தே தெரிவது தொப்பிக்கல் மலை" என கூடவந்தவர்கள் எனக்கு ஒவ்வொன்றாக அடையாளம் காட்டினார்கள். உண்மையில் அந்தப் பயணத்தில் ஆச்சரியம் என்னவென்றால், ஏதோ புதியதொரு காட்டுப்பாதை என நான் எண்ணிக்கொண்டிருந்த பாதை, செங்கலடியிலிருந்து தென்தமிழீழத்தின் ஒரு எல்லைப்புறக் கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியாய் இருந்ததுதான். அடர்ந்த காட்டினுள் கைவிடப்பட்ட அந்த வீதியின் குறுக்கே, இடைமறித்தோடிய அருவிகளுக்கும் ஆறுகளுக்குமாக போடப்பட்டிருந்த பாலங்களும் மதகுகளும் மட்டுமே இப்போது எஞ்சியிருந்தன. அவையும் நீரோட்டத்தில் அடைபட்டு, அவற்றின் முன்னேயோ பின்னேயோ இப்போது ஆறு புதிதாக பெருக்கெடுத்தோடியிருந்தது.

வடமுனைக் கிராமத்தின் இடதுகரைக் குடியிருப்பு, வலதுகரைக் குடியிருப்பு அருகே ஊற்றுச்சேனை இன்னும் சூழ மீராண்டவில், மியாங்குளம் என தென்தமிழீழத்தின் எல்லா எல்லையோரக் கிராமங்களினதும் அவலம் அவற்றிற்குமிருந்தது.

சிங்கள இராணுவத்தின் படுகொலைகளாலும் கைதுகளாலும், அருகிருந்த சிங்களக் கிராமங்களினதும் காடையர்களினதும் அச்சுறுத்தல்களாலும், அத்துமீறிய ஆக்கிரமிப்புக்களாலும் அந்தக் கிராமத்தவர்களும் தமது ஊரைவிட்டு பதின்மூன்று ஆண்டுகளின் முன் விரட்டப்பட்டனர். மாவடிவேம்பு, கல்லடி, வாழைச்சேனை இறுதியாக பேய்த்தாளை என அவர்களின் இடம்பெயர்வுக்கப்பட்ட அகதிவாழ்வு நீண்டது. வளம் கொழிக்கும் தமது சொந்தப் பூமியை விட்டுவிட்டு, கண்ணீருடன் உணவின்றி, தொழிலின்றி, கல்வியின்றி அகதிகளாய் அச்சத்துடன் அவர்கள் வாழ்ந்த வாழ்வு கொடியது.

மட்டக்களப்பு, செங்கலடியிலிருந்து 21வது கட்டையிலிருந்தன, ஊற்றுச்சேனை - வடமுனைக் கிராமங்கள். பதின்மூன்று வருடங்களின் பின் இப்போது அவை மீண்டும் தம் மடியில் தன் மக்களைத் தாங்கியிருந்தன. அடர்ந்த காட்டுப்பாதையின் முடிவில் வீதியில் இருமருங்கும், சுற்றி உள்ளேயும் நூற்றிற்கும் மேலான புதிய கொட்டில்கள் தோன்றியிருந்தன. மழை மெல்லத் தூறிக்கொண்டிருந்தது. நான் அந்த ஊரின் மையத்தில், கைவிடப்பட்டு இடிந்துபோன சங்கக் கடையடியில் கந்தசாமியண்ணையுடன் கதைக்கத் தொடங்கினேன். "நாங்க இதில பக்கம் பக்கம் மூனு கிராமம் தம்பி. வடமுனை, ஊற்றுச்சேனை, மீராண்டவில் எண்டு. இப்ப ரண்டு ஊருக்குத் திரும்பி வந்திட்டம்". அவர் அந்த ஊரின் தலைவர் மட்டுமல்ல, ஒரு முறிவு வைத்தியரும்கூட. கிராமத்தவர்கள் சிலர், கொஞ்சம் கொஞ்சமாக எம்மைச்சுற்றி கூடத்தொடங்கினார்கள். "முன்னர் இது பெரிய ஊர்தம்பி. வடமுனைக் குளத்தில மீன்பிடி, விவசாயம், காட்டில வேட்டை, தேனெடுத்தல் என்று சனத்திற்கு ஒரு குறையும் இல்ல".

பன்னிரண்டு வருடங்களின் முன்னர் தாம் வாழ்ந்த வாழ்வை எண்ணி அவர் வெப்பிராயப்பட்டார். "இந்த வெட்டுக்கரையில எல்லைக்கல்லுப் போலதான் எங்கட கிராமம் இருந்திச்சு" சந்திரன் கதைக்கத் தொடங்கினார், "ஆதிநாளில, மாந்திரி ஆறுதான் எங்கட எல்லையில இந்ததாய் சொன்னாங்க. பிறகு, எல்லாத்தையும் சிங்களவர் தன்ரையாக்கிட்டான்."

"மாந்திரி ஓயா, மாதுறு ஓயாவாய், அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றக் கிராமமாய், எங்களைச்சுற்றி வில்லுப்போல சிங்களவர் கொஞ்சம் கொஞ்சமாய் வளைக்கத் தொடங்கிற்றான். திம்புலாகல மலை சிங்களக் குடியேற்றம், மாதுறு ஓயா சிங்களக் குடியேற்றம், வெலிகந்த, பதுளைறோட் எண்டு, எங்களைச்சுத்தி தொண்ணூறுக்கு முன்னமே சிங்களவன் ஒரு பொறியப் போட்டுட்டான்."

எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்தே அவர்களின் கிராமங்களில் இருந்து கால்நடைகள் காணாமல் போயின. சந்தைக்கும் ரவுணுக்குமென வெலிகந்த நோக்கிச் சென்றவர்கள் கைது செய்யப்படுவதும் விசாரிக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் ஆரம்பமாகின. "அப்படியே வெலிகந்த ரவுண் பக்கம் ஏதாவது பிரச்சனையெண்டா, ஊற்றுச்சேனை, வடமுனையில இருந்தாக்கள்தான் பதில் சொல்லவேண்டியதாய் போச்சு" என்றார் அங்கிருந்த பெண்.

கண்ணில் சோகத்துடன் பன்னிரெண்டு வருடங்களின் முன்னர் தனக்கு நடந்ததைச் சொன்னார் அந்தப் பெண், "ஊர்க் கோவில்ல திருவிழா நாள் தம்பி. என்ரை புரிசன் வெலிகந்த ரவுணுக்குப் போகேக்க ஆமிக்காரன் புடிச்சுப்போட்டான். அதுக்குப்பிறகு இண்டைக்குவர எங்கையெண்டில்ல".

மெல்ல, கைதுகள், காணாமல் போதல்கள் என அந்தக் கிராமங்களில் ஆண்கள் மறையத் தொடங்கினர். பின்னரொருமுறை ஊற்றுச்சேனையை சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்து எண்பது ஆண்களை அழைத்துச் சென்றனர். பூசா சிறையிலும், விடுவிக்கப்பட்ட சிலரும் விடுவிக்கப்படாத பலருமென அவர்களின் அவலம் தொடர்ந்தது.

"கடைசியா தொண்ணூறில எண்டு நினைக்கிறன், அப்ப ஊருக்குள்ளையும் வடமுனையில சங்கக் கடையடியில ஆமிக்காம்ப் இருந்தது" "ஒருநாள் டாங்கி, புல்டோசர்களோடை கண்டபடி சுட்டுக்கொண்டு ஆமிக்காரங்கள் ஊருக்க புகுந்தான். காயப்பட்டவை, செத்தவை எண்டுபோக மிஞ்சின எல்லோரும் காட்டுக்குள்ள விழுந்து ஓடினம்.

அதுதான் கடைசி. அதுக்குப்பிறகு நாங்க இண்டைவரை பன்ரெண்டு வருசமா ஊருக்க வரேல்ல" கதிரவேலு என்ற முதியவர் கூறினார்.

அடர்ந்த காட்டினுள்ளே பற்றைகள், இரிசல்கள் சூழ்ந்த வீடுகள் இப்போதும் பாதி உடைந்து, எரியூட்டப்பட்டு, இன்றும் கிடக்கின்றன. செளிப்பான அந்தக் கிராமத்தின் பாடசாலைக் கட்டடத்தினுள்ளே இப்போது காட்டுமரங்கள் வளர்ந்துவிட்டிருந்தன. காட்டு விலங்குப் பாதைகளாகவும், ஒற்றையடித் தடங்களாகவும் மாறிவிட்ட அந்தக் கிராமத்தில் வீதிகளில் நடந்தபோது, பற்றைக் காட்டினுள்ளே நித்திய கல்யாணி, நந்தியாவெட்டை என பூமரங்கள் பூத்துக் குலுங்கின. இடிந்த வீடுகளும், காட்டிடை வளர்ந்திருந்த பூங்கன்றுகளும் மட்டுமே, காடு முன்பொருநாள் அவர்களின் வீடாயிருந்தது எனச் சொல்லின.



நீண்ட பன்னிரண்டு வருடங்கள், மூன்றாவது நான்காவது என இடம்பெயர்ந்தோர் முகாமில்கூட இடம்பெயர்ந்த அவலம், சிதைந்துவிட்ட குடும்பங்கள், திசைக்கொன்றாய்ப்போன உறவுகள் என, சீரழிந்த தம் அகதிவாழ்வின் முடிவில் மீண்டும் இப்போது அவர்கள் தமது கிராமத்திற்குத் திரும்பி வந்திருந்தனர்.

"பதின்மூன்று வரிசமாய் தொழிலொன்றும் இல்ல, அகதிமுகாமில இருந்து நிரந்திர தொழிலொண்டும் இல்லை. ஏதோ, இப்ப எங்கட நிலத்துக்குத் திரும்பி வந்தது நிம்மதி தம்பி" நடுத்தர வயதை உடைய அந்தக் குடும்பத் தலைவர் ஆற்றாமையுடன் ஆனால், எதிர்கால நம்பிக்கையுடன் என்னிடம் சொன்னார்.

"எங்களக் கலச்சுப்போட்டு சிங்களவன் இப்ப எங்கட அழகான மாந்திரி ஆற்றை மாதுறு ஓயாவாக்கிப் போட்டான்." "மாதுறு ஓயாவில ஒரு சிங்களக் குடியேற்றத் திட்டத்தையும் செஞ்சுபோட்டான்."

அவர்கள் வெதும்பினார்கள். அவர்களைச்சூழ இன்று புதிதாக உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள், திம்புலாகல, மாதுறு ஓயா, வெலிகந்த என. இப்போது வெலிகந்தவிலிருந்து பதுளை செல்லும் வீதி எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்குவதாகச் சொன்னார்கள். எல்லாவற்றிற்கும் இராணுவ பாதுகாப்புகள். மாதுறு ஓயாவின் பாரிய படைப்பயிற்சித் தளம், கனரக இயந்திரங்கள் வேலைசெய்யும் ஒலியுடன் இயங்கிக்கொண்டிருந்தது.

"இதுதான் தம்பி ஊற்றுச்சேனையில இருந்த பள்ளிக்கூடம்" பாசிபடிந்த ஒருபக்கச் சுவரில் கரும்பலகையாக இருந்த இடம் சாம்பல் நிறமாகத் தெரிந்தது. சற்றுத் தொலைவில் மரங்களின் கீழே போடப்பட்ட கதிரை மேசைகளில் இருந்து சிறுவர்கள் படித்துக்கொண்டிருந்தனர். நேற்றுவரை அவர்கள் அகதிமுகாம் வாழ்வில் தம் கல்வியை இழந்திருப்பினும், இன்று தம் ஊர்முற்றத்திலிருந்து நம்பிக்கையுடன் படித்துக்கொண்டிருந்தனர்.

"இஞ்ச படிப்பிக்க ஆட்களில்ல. ஊரில கொஞ்சம் படிச்ச பிள்ளையள்தான் தாங்களாச் சேர்ந்து இப்ப படிப்பிக்கினம்." அந்தக் கிராமத்தின் கிராமசேவகர் என்னிடம் சொன்னார்.

அனேகமாக எல்லாக் குடிசைகளும் இப்போதுதான் போடப்பட்டுக்கொண்டிருந்தன. பன்னிரண்டு வருடங்களின் முன் அழிக்கப்பட்ட தமது வீடுகளின் அருகிலேயே காடாகிப்போன தமது முற்றங்களில் புதிதாக, நிரையாக அவர்களின் புதிய குடிசைகளிருந்தன.

"எப்படியோ தம்பி, இப்ப இஞ்ச திரும்பி வந்திட்டம். என்ன நடந்தாலும் எங்கட ஊரில இரிக்கிறத போல இரிக்குமா? என்ன நடந்தாலும் இனி இஞ்சதான் இரிக்கணும். சாகிறதெண்டாலும் இஞ்சதான் சாகோணும்" சிவானந்தம் என்ற முதியவர் என்னிடம் கூறினார்.

"சிங்களவனுக்குப் பயந்து ஊரைவிட்டோடி எல்லாம் இழந்தாச்சு. இப்ப எங்கட ஊரில ஒண்டுமில்ல. குளமில்ல, வயலில்ல, வீடில்ல எல்லாம் அழிஞ்சுபோச்சி. அவன் இன்னும் இன்னும் எங்கட ஊருகள வளைச்சிட்டான். என்ன இரிந்தாலும் இனி எப்ப நாங்கள் மாதுறு ஓயாவ மாந்திரி ஆறாய் பாக்கிறது?" அவர்கள் கூறிக்கொண்டார்கள்.

மழை சற்றுப் பெரிதாக பெய்யத்தொடங்கியது. நம்பிக்கையுடன் மீண்டும் தாம் மீள்குடியேறிய நிலத்தில் எதுவென்றே தெரியாமல்போன தமது ஊரின் காணிகளில் அவர்கள் புதிதாக எல்லைவேலி போட்டுக்கொண்டிருந்தனர், தேசத்திற்கும் எல்லையாகத்தான். •



# காலவிதை

## ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

வீட்டிற்குமுன் வாகனம் வந்து நின்ற போது செங்கதிர்வாணன் தான் வருகின்றான் என்று நினைத்துக் கொண்டாள் தண்ணீருற்று அம்மா. அவனின் அம்மா திருமலையில் என்பதால் இப்போது உறவுகள் எல்லாம் அந்த விடுதான்.

அம்மா தலையை இழுத்து முடிந்தபடி விளக்கையும் எடுத்துக்கொண்டு வாசலுக்கு ஓடிவந்தாள். அக்கம் பக்கத்து வீட்டுச்சிறுமிகள் எல்லாம் "குட்டான் மாமா வந்திட்டார்" என்ற மகிழ்ச்சியுடன் பாடப்புத்தகங்களை மூடிவிட்டு ஆரவாரித்து நின்றனர். அவர்களுக்கு ஒருபுறம் அச்சமும் இருந்தது.

பாடப்புத்தகத்தில் கேள்வி கேட்பார். தேர்வு அறிக்கை பார்ப்பார். என்றாலும், குட்டான்மாமா எவ்வளவு நல்லவர். சிறுமிகளும் வாசலுக்குவந்தனர். அந்த வயது முதிர்ந்த அம்மா விளக்கை உயர்த்தி எல்லோர் முகங்களையும் பார்த்தாள். இல்லை... அவள் தேடி வந்த செங்கதிர்வாணன் இல்லை.

வந்தவர்களின் முகத்தில் எழுதாத கவிதையொன்று எதையோ உணர்த்தியது. அம்மாவால் முகங்களைப் பார்க்க முடிந்தது. படிக்க முடியவில்லை.

'இவ்வளவு நாட்களும் ஏன் மோனை வரேல்லை'

அம்மாவிற்கு அவன் வந்திருப்பான் என்பதில் அவ்வளவு நம்பிக்கையிருந்தது. அவனை எதிர்பார்த்து எத்தனை வாசல்கள். எல்லோருடனும் சிரித்துப் பழகுவான். அவனுள் எரியும் நெருப்பு வெளியில் தெரியாது. கண்களுக்குத் தெரிவது சிரிப்பு. உள்ளே கனன்றுகொண்டிருப்பது நெருப்பு. அவனை எரிமலையாக்கும் முதற்பொறி கலவரங்களினால் விழுந்தது....

◆◆◆

"காலம் கெட்டுக்கிடக்கிற நேரத்தில எங்கை மோனை திரியிற... அவங்கள் மனிசரின்ர உயிரை எடுக்கிறதெண்டே றோட்டுவழிய நிக்கிறாங்கள்." அம்மா பெற்ற வயிற்றில் நெருப்புப்பற்ற பதறுவாள். அப்போதெல்லாம் அவளின் கைகள் அவனின் தலையிலோ கன்னத்திலோ உலாவிக் கொண்டிருக்கும்.

அவன் அவளின் பாசத்தைப் புரிந்துகொண்டாலும் கரைந்துபோக மாட்டான். கைகளை விலக்கி விட்டுக் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்பான். பின் வீராவேசமாக வசனம் பேசுவான். "அவங்களைப்போலதான் நாங்களும். ஏன் பயந்து சாகிறியள்." அவன் சொல்லிக்கொண்டே தனது சைக்கிள் பாருக்குள் மறைத்து வைத்திருந்த பழைய சைக்கிள் செயினை எடுத்துக்காட்டினான். "ஆரும் அடிக்க வந்தாங்களெண்டால், இனி அடிப்பன்" அவனின் கண்கள் கோபத்தாற் சிவந்தன.

அம்மா முன்னரிலும் பார்க்க கூடுதலாகப் பதறினாள். "என்ன இழவடா இது... நான் என்ன செய்ய..." அம்மா அழுதாள். அவளின் அழுகைக்குக் காரணம் இருந்தது. அது 1983ஆம் ஆண்டு இலங்கைத்தீவு இனவாத நெருப்பில் ஆவேசமாக எரிந்துகொண்டிருந்த நாட்கள். வீடுகளில், வீதிகளில் எங்கு என்ற வேறுபாடு இல்லாது கொலை நடந்து கொண்டிருந்த நேரம். தெருவெல்லாம் பிணங்கள். சொந்தத் தெருக்களிலேயே உலாவ முடியாத வேதனை. அதுவும் இவர்கள் திருகோணமலை சிவபுரியில் சிங்கள ஊர்களுக்கு அருகில் குடியிருப்பவர்கள். கொழும்பிலும் வேறிடங்களிலும் கலவரம் நடப்பதை இலங்கை வானொலி அறிவித்துக் கொண்டிருந்தது. இவர்களிற்கு அடுத்த வீடு, எதிர் வீடு, தெருவெல்லாம் காடையர்கள் பெரிதாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன.

இவர்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு வேலைக்கு வரும் சிங்களக் கிழவியை வீட்டில் விட்டு விட்டுப் பற்றைகளுக்குள் மறைந்தனர். அப்பாவும், மரத்தில் ஏறுமளவுக்கு வளர்ந்த அண்ணாக்களும் மரத்தில் ஏறி ஒளிந்திருந்தனர். அப்பா பதட்டத்தில்


**கரும்புலி மேஜர் செங்கதிர்வாணன்**
**(நடராசா ரமேஸ்வரன்)**
**40/30, சிவபுரி,**
**திருமலை.**

விழுப்பார்த்து கைகால் எல்லாம் உரஞ்சலோடு மீண்டும் கொப்புகளை கெட்டியாய் பிடித்து ஏறி அமர்ந்து கொண்டார். எல்லோரும் ஊரில் நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அம்மாவின் இறுகிய அணைப்பில் நின்று சினமும் வெறுப்பும் கண்களில் பொங்கப் பார்த்துக்கொண்டிருந்தான், கடைக்குட்டி. வீடுகள் எரிந்து கொண்டிருந்தன. எங்கும் தீ பரவி புகை மூடியிருந்தது. ஊரவர்கள் தாறுமாறாய் ஓடிக்கொண்டிருந்தனர். காடைகள், அவர்களை அடித்து வீழ்த்துவதும் வெட்டுவதுமாக தாண்டவம் ஆடினர். இவர்களின் வீட்டை நோக்கி வேகமாய் ஓடிவந்தனர். முற்றத்தில் நின்று சிங்களத்தில் கத்தினர். வேலைக்கு வந்த சிங்களக்கிழவி வீட்டிற்குள் இருந்தபடியே சிங்களத்தில் ஏதோ கத்தினாள். அதுகள் போய்விட்டன. ஊரே வெறிச்சோடிப்போனது. அது நடந்ததில் இருந்து அணுகுண்டு விழுந்த நகரம்போல அந்த இடம் ஆளரவமற்றுப் போனது.

இரவில் தனியே யாரும் உலாவித்திரிய அஞ்சும் நாட்களில் அவளின் ஆசைமகன் திரிவதை எப்படிப் பார்த்திருப்பாள். அவனுக்கு இப்பதானே பதினொரு வயது. அம்மா கெஞ்சலான குரலில் மன்றாடினாள், அவன் கேட்கவே இல்லை. வீட்டை விட்டு வெளியே போவான். இனக்கலவரத்தால் ஊரில் கொதிப்புற்றுப்போயிருந்த இளைஞர்களோடுசேர்ந்து ஆங்காங்கே அவனும் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். பெரியவர்கள் செய்யும் ஒவ்வொன்றிலும் ஒருவித துடிப்போடு அவனும் ஓடித்திரிந்து ஈடுபட்டான்.

அவன் இயக்கத்தோடு சேர்ந்துகொள்ள முடியாமல் அவனது வயதும் இருந்தது. ஏற்கனவே அவனது அண்ணன் ஒருவன் போராளியாக இருந்தான். இவர்களின் நடவடிக்கைகளை எப்படியோ சிறிலங்கா இராணுவமும் பொலிசும் அறிந்திருக்க வேண்டும். வீடு அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டது. துடியாட்டமான கடைக்குட்டி ஒவ்வொருமுறையும் தப்பிவிடுவான். அவனது அண்ணன் ஒருவனைக் கைதுசெய்து கொண்டு போய் சிறையில் அடைத்தார்கள். அண்ணா சிறைக்குப்போனதும் வீட்டில் சோகம் சூழத்தொடங்கியது. அம்மா



பொலிவிழந்து போனாள். இவன் கொஞ்ச நாள் வீட்டிலேயே நின்றான். அம்மாவிற்குத் தெரியும்படி எங்கேயும் போவதில்லை என்று முடிவெடுத்தான். பிள்ளை இனிப்போக மாட்டான் என்று அம்மா நினைத்து இருப்பாள். ஆனால் அவன் இரகசியமாய்ப் போய் வந்துகொண்டிருந்தான்.

பாடசாலையில் சுற்றுலாப்போக ஆயத்தமாகினால் அங்கே முண்டியடித்துக் கொண்டு ஓடித்திரியும் துடியாட்டமான சிறுவன், பாடசாலையில் திருத்தவேலை, பாடசாலை வளவில் தோட்டம் வைப்பது அங்கும் அதேஆள். வகுப்பில் அவன் ஓர் எடுத்துக் காட்டு. எங்கேயும் சின்னப்பிரச்சனை வந்து விட்டதென்றால் அதை தீர்த்துவைப்பதில் அவனும் ஒராள். ஒழுக்கக்கேடாக யாரும் நடந்துவிட்டால் உடனே தண்டனை கொடுக்கப்படும். அங்கேயும் தண்டனை வழங்குபவனாக நிற்பான். பாடசாலை முழுவதும் அவன் பெயர் பரவியிருந்தது. பள்ளியில் வகுப்பாசிரியரிடம் நல்ல மதிப்பை பெறுவதே பெரும்பாடு, அப்படியிருக்க அவன் அதிபரின் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் உரியவனாக இருந்தான்.

வீட்டின் வறுமை இடையிடையே வயிற்றைக் கடிக்கும். நாட்டின் நிலைமையும் குழப்பமாக இருந்தது. இந்தியஇராணுவக் காலம் அது. தேடுதல் வேட்டைக்குள் அகப்படாது முயலோட்டம் ஓடித்திரிந்த நாட்கள். இந்திய இராணுவம் வெளியேறிய காலத்தில், நாளேடொன்றில் தலைவரின் படத்தைக் கண்டவன் உடனே தன் எண்ணத்தில் வந்ததின்படி செய்து விட்டான்.

படத்தை அளவாக வெட்டித் தடித்த மட்டை ஒன்றில் ஒட்டினான். கீழே தலைவர் வே.பிரபாகரன் என்று தன் கைப்பட எழுதி ஊர் கூடும் இடம் ஒன்றில் எல்லோரும் காணும்படியாக ஒட்டினான். அப்போது அவன் எந்த பின்விளைவைப் பற்றியும் கவலைப்படவில்லை. எதையும் எதிர்கொள்வது என்ற துணிவோடு இருந்தான். இரகசியப் பொலிசார் நோட்டமிட்டபடியே திரியும் அந்த இடங்களில் அவன் ஒட்டிய படம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

எல்லோருக்கும் அதிர்ச்சியும் ஆச்சரியமும். யார் இதைச் செய்திருப்பார். அவர்களோடு சேர்ந்து அவனும் ஆச்சரியப்படுவதாய்ப் பாவனை செய்தான். இந்த அதிர்வலை அடங்க முன் யமாலியாவில் தேசத் துரோகிகள் மீது தாக்குதல் நடத்திவிட்டு வரும்போது படகு விபத்தில் வீரச்சாவடைந்திருந்த மாவீரர்களின் படங்கள் வெளியாகி இருந்தன. அந்தப் படத்தையும் எடுத்து வீட்டில்கூட யாருக்கும் தெரியாமல் பசை கிண்டிக்கொண்டுபோய் கோட்டை முகப்பில் ஒட்டிவிட்டான். அது இன்னும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.


இவனின் செயல் ஒவ்வொன்றிலும் தீவிரம் கூடக்கூட சொந்த ஊரில் வாழ்வதற்கே முடியாமல் போனது. நாளுக்குநாள் அவனுக்கு அச்சுறுத்தல் அதிகமாகிக் கொண்டிருந்தது. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய காலத்தில் அண்ணன் ஒருவனுடன் யாழ்ப்பாணம் வந்து அவருடனே வாழ்ந்து கொண்டிருந்தவன், காலத்தின் தேவையறிந்து தன்னைப் போராட்டத்தில் இணைத்துக்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## நான் எப்பொழுதும் பேச்சுக்குத் தருவது குறைந்தளவு முக்கியத்துவமே; செயலால் வளர்ந்த பின்னரே நாம் பேசத் தொடங்கவேண்டும்.

- தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் -

# இதுவரை நடந்த பேச்சுக்களும் தோல்விக்கான காரணங்களும்



யாழ்ப்பாணத்தில் 1961இல் சத்தியாக்கிரகத்தின்போது

பேசித்திருக்கும் நடைமுறைகள் பல தடவை மேற்கொள்ளப்பட்டாலும் ஒன்றிலாவது தமிழர்களின் கோரிக்கை நிறைவேறவில்லை. 1920ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையிலான காலம்வரை தமிழ் - சிங்களத் தரப்பினர் நடத்திய பேச்சுவார்த்தைகள் பலனளிக்கத் தவறியுள்ளன. அவை முடிவிலாது இழுபட்டபின் இறுதியில் கைவிடப்பட்டன. முறியும் தறுவாயை நெருங்கும்போது பேச்சுக்களுக்குப் புத்துயிர் கொடுக்கும் முயற்சி எடுக்காமல் போருக்குச் செல்வதுதான் சிறிலங்காவின் வழமை. நாமே நாடு, நமக்கே எல்லாம் என்ற சிங்களத் தலைமையின் சிந்தனை பேச்சுக்களின் தோல்விக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

'இலங்கையின் பேச்சுவார்த்தைகள்' என்ற தலைப்பில் பத்திரிகைக் கட்டுரை எழுதிய அரசியல்துறைப் பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட, 'இலங்கையின் இனப் பிரச்சினை வரலாறு மீண்டும் மீண்டும் திரும்பி வருவதுதான் மிகவும் வருத்தமான அம்சம். தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் வரலாறு மீண்டும் திரும்பி வருகின்றது' என்று சுட்டிக்காட்டியுள்ளார். இவர் குறிப்பிடும் வரலாறு பல தசாப்தங்களைக் கடந்து கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறது. வரலாறை மேலெழுந்தவாரியாகக் குறை கூறுவதில் பயனில்லை. வரலாறை இயக்கும் காரணிகளை நோக்கவேண்டும்

பேராசிரியர் குறிப்பிடும் வரலாற்றுச் சுழற்சி 1920ல் ஆரம்பிக்கின்றது. அந்த நாட்களில் நடந்தவற்றை விரிவாக ஆராய வேண்டிய அவசியம் எழுகின்றது. வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குதல், அப்பட்டமான பொய்யுரைகளைச் சொல்லிச்சொல்லி ஏமாற்றுதல் போன்ற கீழ்த்தரமான அம்சங்களை அங்கு சந்திக்கலாம். அன்றைய சிங்களத் தலைமை அவ்வாறு நடவாதிருந்தால் வரலாறு மீண்டும் மீண்டும் வருவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாது. 1920ஆம் ஆண்டிற்குத் திருப்புமுனை முக்கியத்துவம் உண்டு. இலங்கையர்கள் ,என்ற பரந்த தேசிய அடையாளத்தைத் தூக்கிப் பிடித்த முத்துக்குமாரசாமி, இராமநாதன், அருணாசலம் போன்ற தமிழ்த் தலைவர்களின் சிந்தனை வேறுவிதமாக மாற 1920 நிகழ்வுகள் உதவின.

1920க்குப் பின் இக்காலகட்ட நிகழ்வுகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பொன்.அருணாசலம் இதுவரை காலம் கடைப்பிடித்த பரந்துபட்ட தேசியத்தைக் கைவிட்டு இன அடையாளத்தை முதன்மைப்படுத்த ஆரம்பித்தார். இதை புதிய சகாப்தத்தின் பிறப்பாகக் கொள்ளலாம். சிங்கள மக்கள் மத்தியில் நெடிதுயர்ந்த தலைவர்கள் தோன்றாத காலத்தில் முத்துக்குமாரசாமி, இராமநாதன், அருணாசலம் போன்றோர் அக்குறையைத் தீர்த்து வைத்தனர்.

சிங்கள மக்களுக்காக அவர்கள் குரல் கொடுத்தனர். சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்திற்கும் இடையூறு வந்தபோது இவர்கள் இரண்டையும் காத்து நின்றனர். அழிவுற்ற கீழைத்தேயப் பண்பாட்டை புனரமைக்கும் பணியினைத் தொடக்கியவர் கலாயோகி ஆனந்த குமாரசாமியின் தந்தையான முத்துக்குமாரசாமி. சிங்களவர் மத்தியில் கிறிஸ்தவப் பரப்பலைத் தடுத்து நிறுத்துவதற்கு சகோதரர்களான இராமநாதனும், அருணாசலமும் பெரும் பிரயத்தனம் எடுத்தனர்.

இப்படியாகச் சிங்களவர்களோடு ஊடும் பாவும் போல், நகமும் சதையும் போல செயற்பட்ட தமிழ்த் தலைவர்களின் மனம் மாறுவதற்கு என்ன காரணம்? 1913இல் நீண்டகால அரச சேவையில் இருந்து பொன். அருணாச்சலம் ஓய்வுபெற்றார். தனது ஓய்வுக்காலத்தை அரசியலுக்கு அர்ப்பணித்த அவர், 1917இல் அரசியல் சீர்திருத்தக் கழகத்தை உருவாக்கி பூரண சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்தார். இதற்கான பிரச்சாரத்தை தீவின் பலபாகங்களில் மேற்கொண்டார். அத்தோடு இனரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் செயற்பட்ட பல்வேறு பொது அமைப்புக்களையும் தானே முன்னின்று ஒன்றிணைத்து 1919இல் இலங்கை தேசிய காங்கிரசை உருவாக்கினார்.

1920வரை சிங்கள அரசியல் தலைவர்களிலும் பார்க்க சிறந்த தேசியவாதிகளாகத் திகழ்ந்த அருணாசலத்திற்கு அவர் வளர்த்தெடுத்த சிங்களத் தலைவர்கள் பலமான அடி கொடுத்தனர். அதன் பயனாய் இலங்கையன் என்ற அடையாளத்தைத் தாங்கி நின்ற அவர் தமிழன் என்ற அடையாளத்தை நோக்கி அடிவைத்தார். தேசிய காங்கிரசை உருவாக்கிய அருணாசலம் அந்த அமைப்பின் சாதாரண அங்கத்தவர் பதவியையும் உதறித் தள்ளிவிட்டு வெளியேறினார். இலங்கை தேசிய காங்கிரசின் முதலாவது தலைவராகப் பதவி வகித்தவர் அருணாசலம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய இலங்கை தேசிய காங்கிரசை உருவாக்கும் காலத்தில் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை தேசிய சங்கத்தையும், தமிழர்களை மாத்திரம் கொண்ட யாழ் சங்கத்தையும் ஒன்றிணைக்கும் சாதனையை அருணாசலம் நிறைவேற்றினார். இரு அமைப்புகளும் வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த காரணத்தால் அருணாசலத்தின் பணி மிகவும் கடினமாக இருந்தது. இலங்கை தேசிய சங்கம் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை அகற்றி, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தைப் புகுத்தும் நோக்கில் செயற்பட்டது. யாழ் சங்கமோ இனவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்படுமாயின் சமபலப் பிரதிநிதித்துவம் பேணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இறுக்கமாக நின்றது.

இலங்கை தேசிய சங்கத்தின் தலைவர்களான ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே. சமரவிக்கிரம, எவ்.ஆர்.சேனநாயக்கா ஆகியோர் எதுவிதமாகிலும் இனவாரிப் பிரதிநிதித்துவம் அகற்றப்படவேண்டாம் என்பதில் பிடிவாதமாக இருந்தனர். இதனால் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைக் கூட்டவேண்டிய கட்டாயம் தோன்றியது. அருணாசலம் இரு சங்கங்களின் தலைவர்களையும் சந்தித்து சமரசம் செய்ய விளைந்தார். தமிழர்களுக்குத் திருப்திகரமான பிரதிநிதித்துவ ஒழுங்கைச் செய்யும் நோக்குடன் அவர் சிங்களத் தலைவர்களை பலமுறை சந்தித்தார்.

வடமாகாணத்தில் மூன்றும், கிழக்கு மாகாணத்தில் இரண்டும், மேல்மாகாணத்தில் ஒன்றும் வரக்கூடிய தேர்தல் தொகுதிகளை தமிழர்களுக்கு விட்டுக் கொடுப்பதற்கு இலங்கை தேசிய சங்கத் தலைவர்கள் ஒத்துக்கொண்டனர். இதற்கான உறுதிமொழி அடங்கிய கடிதத்தை சிங்களத் தலைவர்கள் சார்பில் இலங்கை தேசிய சங்கத்தைச் சார்ந்த ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே. சமரவிக்கிரம ஆகிய இருவரும் தமது கையொப்பத்துடன் அருணாசலத்திடம் கொடுத்தனர். இக்கடிதத்தை யாழ் சங்கத் தலைவர் ஏ.சபாபதியிடம் காட்டி யாழ் சங்கத்தின் மேற்கூறிய தேர்தல் திட்டத்திற்கு அருணாசலம் ஒப்புதல் வாங்கினார்.

டிசெம்பர் 11, 1919இல் இலங்கை தேசிய காங்கிரசின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அதன் தலைவராக அருணாசலம் ஏகமனதாகத் தெரிவானார். கடும் பிரயத்தனம் செய்து பலதரப்பட்ட அமைப்புக்களை ஒன்றிணைத்து பல்லினமும் ஐக்கியப்பட்ட தேசிய இயக்கத்தை தோற்றுவித்த அதே அருணாசலம் சில காலத்தின் பின் மனமுறிவுடன் வெளியேறிய வரலாறு இலங்கை இனமுரண்பாட்டின் அடித்தளமாக அமைகின்றது. **இலங்கையின் முதலாவது தேசிய இயக்கத்தை உருவாக்கிய அருணாசலம் இலங்கையின் முதலாவது தமிழ்த் தேசிய அமைப்பையும் சிறிது காலத்தின்பின் உருவாக்கினார் என்பது மறுக்கமுடியாத வரலாறு.**

பிரிட்டிசாரிடமிருந்து இலங்கையர்களுக்கு படிப்படியாக அதிகாரம் கைமாறிய போது அத்தகைய அதிகாரங்கள் சிங்களவர்களுக்கு மாத்திரமே என்று சிங்களத் தலைவர்கள் எண்ணினர். தேசாதிபதி மானிங் பெயரால் மானிங் அரசியல் சீர்திருத்தம் என்பதின் கீழ் நடந்த தேர்தலில் 13 சிங்களவர்களும், வடக்கு கிழக்கு ஆகியவை ஒவ்வொன்றிற்கும் தலா ஒருவர் தெரிவாகினர். தேசிய காங்கிரஸ் வாக்களித்தபடி வடகிழக்கில் இருந்து 5 பிரதிநிதித்துவமும், மேல் மாகாணத்தில் ஒரு பிரதிநிதித்துவமும் கிடைத்திருக்கவேண்டும். இச்சந்தர்ப்பத்தில் இனப் புறக்கணிப்பின் சுயரூபத்தை அருணாசலமும் தமிழர்களும் உணர்ந்தனர். தேசாதிபதி மானிங் மாத்திரம் மனமிரங்கி தனது சீர்திருத்த ஒழுங்கின் கீழ் சிறப்பு உறுப்பினர்களில் ஒருவராக இராமநாதனை நியமித்தார்.

இதனால் மூன்று தமிழர்கள் பிரதிநிதிகளாகினர். நடுவராக நின்ற அருணாசலம், சிங்களத் தலைவர்களின் வாக்குறுதி சம்பந்தமாக நேரில் சென்று பேசினார். அருணாசலத்தை அவர்கள் அவமதித்து அனுப்பினர். தமது உறுதிமொழிகளைத் தாமே உதாசீனம் செய்தனர். இதற்கு இரு காரணங்களையும் அவர்கள் கூறினர். பீரிசும் சமரவிக்கிரமவும் தமது சுயவிருப்பில் மாத்திரம் கடித மூலமான உறுதிமொழியை வழங்கினர். அவர்கள் தேசிய காங்கிரஸ் சார்பாக உறுதிமொழி வழங்கவில்லை. இரண்டாவதாக, உறுதிமொழி இலங்கை தேசிய சங்கம், இலங்கை சீர்திருத்த சங்கம் போன்றவற்றைக் கட்டுப்படுத்துமே ஒழிய கடிதம் வழங்கப்பட்டபின் உருவாகிய இலங்கை தேசிய காங்கிரசைக் கட்டுப்படுத்தமாட்டாது.

தீட்டிய தடியில் கூர்பார்க்கும் இந்த விதண்டாவாதப் போக்கு அருணாசலத்தை மனமுடையச் செய்தது. தமிழர்கள் ஏமாந்தது இதுவே முதல் தடவை. மனம் வெதும்பிய அருணாசலம் யாழ் திரும்பினார். பொதுக் கூட்டங்களைக் கூடித் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய வகையில் 'தமிழ் ஈழம்' ஒன்றை அமைப்பதே நன்றெனப் பகிரங்கமாகப் பேசினார். இந்த நோக்கத்தை எட்டுவதற்காக அவர் ஆகஸ்ற் 15,1921இல் தமிழர் மகாஜன சபை என்ற அமைப்பை உருவாக்கினார். ஜனவரி 09,1924இல் அவர் மதுரை மீனாட்சி அம்மன் தரிசனத்திற்காகச் சென்றவேளையில் அங்கு திடீர் மரணமடைந்தார். இதனால் தமிழர் மகாஜன சபையும் வலுவிழந்தது. இறுதிவரை சிங்களவர்களின் நம்பிக்கைக்குரியவராக இருந்த தமையன் இராமநாதன் 1930வரை உயிர் வாழ்ந்தார்.

“உடைந்த உடன்படிக்கைகளின் சிதறல்கள் கடந்த ஐம்பது வருடகாலம் பழமைவாய்ந்த இரு இன உறவுப்பாதையில் பரவிக்கிடப்பதாக” இலங்கை இனத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். உடன்படிக்கைகளைச் செய்யும்போது அதை எப்படி உடைக்கலாம் அல்லது சமயோசிதமாக மீறலாம் என்ற முன்யோசனையுடனேயே சிங்களத் தலைவர்கள் கைச்சாத்திடுகின்றனர் என்ற நியாயமான விமர்சனமும் நிலவுகின்றது. சிங்களவர்களின் இந்தவகை நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தலைவர்களும் உடந்தையாக இருக்கின்றனர். நம்ப நட ஆனால் நம்பாதே என்ற பழமொழியை இவர்கள் அறியவில்லைப் போலும்.

வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற சி.சுந்தரலிங்கம், முதன் முதலாக தமிழ் ஈழக்கோரிக்கையை முன் வைத்ததாகச் சொல்லப்பட்டாலும் அது உண்மையல்ல. முதற்குரல் எழுப்பியவர் அருணாசலம் என்பதே உண்மை. இருவரும் ஏமாற்றப்பட்டு மனமுடைந்த நிலையிலேயே இக்கோரிக்கையை விடுத்தனர். 1931இல் டொனமோர் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 'ஸ்ரேற் கவுன்சில்' (STATE COUNCIL) ஆட்சி முறையின் கீழ் 1936இல் தனிச் சிங்கள அமைச்சரவையை அமைப்பதற்குத் தனது கனித மூளையைப் பயன்படுத்தி ஆலோசனை வழங்கியவர்தான் மேற்கூறிய சுந்தரலிங்கம். இவர்களுடைய ஈழத்திற்கான குரல் கண்கெட்டதன் பின் செய்யும் சூரிய நமஸ் காரத்திற்கு ஒப்பானதாகும்.

இதே ஸ்ரேற் கவுன்சில் அரசமைப்பில் சபாநாயகர் பதவி வகித்த வயித்திலிங்கம் துரைசாமி என்பவரும் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சிங்களத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தினார். இவருடைய வேலணை வீட்டில் வைத்து சிங்கள - தமிழர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது ஓசைப் படாமல் சிங்களத் தலைவர்களால் கை



விடப்பட்டது. ஆனால் பதவியே கதியென்று வயித்திலிங்கம் துரைசாமி வாளாவிருந்தார்.

1948இல் சிங்களவர்கள் சுதந்திரம் பெற்றபின் தமிழர்களை ஏமாற்றும் நடைமுறை தொடர்ந்தது. 1956இல் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பின்வருமாறு கூறினார், "சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்கமாட்டார்கள் என்ற அடிப்படையில் சிங்களத் தலைவர்களின் நம்பகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டிசார் அரசுரிமையை சிங்களவர் வசம் ஒப்படைத்தனர். தங்களுடைய பெரும்பான்மையைப் பயன்படுத்தும் சிங்களத் தலைமை தமிழர்களின் உரிமைகளை மறுக்கின்றது". தமிழர்களின் சுயநிர்ணயக் கோரிக்கையின் சாராம்சத்தை இவ்வுரை கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதைத் தொடர்ந்து 1957இன் நடுப்பகுதியில் இலங்கைப் பிரதமருக்கு "தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதை நான் இப்போது நம்புகிறேன். சிங்களக் குடியேற்றம் மூலமான அழிவிலிருந்து தமிழர்கள் தமது எதிர்காலச் சந்ததியினரைக் காத்துக்கொள்ள வேண்டும். தன்னாட்சி பெற்ற தமிழ் இலங்கை ஒன்றுதான் எமக்குள்ள ஒரே வழி" என்ற வாசகங்கள் அடங்கிய பகிரங்கக் கடிதத்தை வவுனியா சுந்தரலிங்கம் பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு எழுதினார்.

ஜூன் 1956 இல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இனத்துவ வரலாற்றில் ஒரு மைல் கல்லாகவும், இரு இனங்களையும் சட்டபூர்வமாக மொழி அடிப்படையில் பிளவு படுத்திய விதிமுறையாகவும் இது கருதப்படுகின்றது. இச்சட்டம் நிறைவேறிய மூன்று மாதங்களின் பின் ஆகஸ்து 1956இல் சமஷ்டிக் கட்சி செல்வநாயகம் தலைமையில் திருகோணமலை மாநாட்டைக் கூட்டியது. இந்த மாநாடு நான்கு முக்கிய கோரிக்கைகளை விடுத்தது. சமஷ்டி அரசமைப்பு அடிப்படையில் வடக்கு - கிழக்கிற்குச் சுயாட்சி, வடக்கு - கிழக்கில் சிங்களக் குடியேற்ற நிறுத்தம், தமிழ் - சிங்கள மொழிகளுக்கு உத்தியோகபூர்வ சமத்துவம், மலையகத் தமிழர்களுக்கு இலங்கைக் குடியுரிமை.

இதைத் தொடர்ந்து 1957இல் பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதற்கான சட்டவரைவு - மே 17, 1957இல் பிரசுரிக்கப்பட்டது. இது பின்வரும் விடயங்களை ஏற்றுக்கொண்டது :- இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாகச் சிங்களம் தொடரும், வடக்கு கிழக்கின் நிர்வாக மொழியாகத் தமிழ் இடம்பெறும், நாடு பூராகவும் பிராந்திய நிர்வாக அமைப்பு அறிமுகப்படுத்தப்படும், குடியேற்றத்தை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கப்படும். இவை யாவும் இதன்பின் நடந்த நிகழ்ச்சிகள் காரணமாக பிரதமர் பண்டாரநாயக்காவினால் ஒரு தலைப்பட்சமாகக் கைவிடப்பட்டதோடு உடன்படிக்கையும் அவரால் கிழித்தெறியப்பட்டது.

ஏப்ரல் 09,1958இல் பண்டாரநாயக்கா வீட்டின் முற்றத்தில் சில பிக்குகள் பண்டா - செல்வா உடன்படிக்கையை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்தனர். இதைவிட ஜெயவர்த்தனா தலைமையில் யூ.என்.பி கட்சியினர் இதற்கு முன்பே 1957 ஒக்ரோபர், 2 - 3 இல் கண்டிக்குப் பாதையாத்திரை சென்றார்கள். இந்த எதிர்ப்புடன் பண்டாவின் கட்சியினர் சிலரும் உடன்படிக்கைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். சத்தியாக்கிரகம் செய்த பிக்குகளின் கோரிக்கைக்கு

> **"இலங்கையின் இனப்பிரச்சனை வரலாறு மீண்டும் மீண்டும் திரும்பி வருவதுதான் மிகவும் வருத்தமான அம்சம். தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் வரலாறு மீண்டும் திரும்பி வருகின்றது."**
>
> - ஜெயதேவ உயங்கொட -

அமைவாக உடன்படிக்கையை ஒருதலைப் பட்சமாக பண்டா நிராகரித்தார்.

1965இல் மீண்டுமொரு உடன்படிக்கையை அப்போது பிரதமர் பதவி வகித்த டட்லி சேனநாக்காவுடன் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் செய்துகொண்டார். இது டட்லி - செல்வா உடன்படிக்கை என்று அறியப்படுகின்றது. இந்த உடன்படிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்கியது. வடக்கு கிழக்கில் நிர்வாக மொழியாகத் தமிழ் இடம்பெறும். வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்படும், மாவட்ட சபைகள் மூலம் அதிகாரப் பங்கீடு செய்யப்படும், தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் நியாயமானளவுக்கு சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படும். மகா சங்கத்தினர் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்ப்புக் காரணமாக இதுவும் ஒருதலைப் பட்சமாகக் கைவிடப்பட்டது. "கடவுள்தான் இனி தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்ற பிரகடனத்துடன் எஸ்.ஜே.வி. கையை விரிக்கிறார்.

1970களில் தமிழர்களுக்காகப் பேசும் ஏகபோக உரிமையைத் தமிழ் அரசியல்வாதிகள் இழக்கின்றார்கள். பொறுமை இழந்த ஆயுதம் தரித்த தமிழ் இளைஞர்கள் உரிமைப்போரைத் தொடங்குகின்றனர். இவர்கள் முதன்முறையாகத் தமிழர் பிரதிநிதிகளாகப் பேச்சுக்களில் ஈடுபடுகின்றனர். பூட்டான் தலைநகர் திம்புவில் 1985இன் திம்பு பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. தமிழர் தரப்பில் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை உட்பட நான்கு முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. சிறிலங்காவின் இறைமைக்கும் தனப்பரப்பு ஒருமைக்கும் அவை முரணானவை என்று காரணம் காட்டி அவற்றை அரச தரப்பினர் நிராகரிக்கின்றனர்.

இதைத் தொடர்ந்தது தமிழர் கூட்டணி (TULF) தலைமையிலான சர்வ கட்சி மாநாடு கொழும்பில் 1986இல் நடைபெறுகின்றது. பலதரப்பட்ட கோரிக்கைகள்

**- கலாநிதி க.சோமாஸ்கந்தன் -**

கூட்டணியினரால் முன்வைக்கப்பட்டன. ஆனால் ஒரு தீர்மானமும் எட்டப்படாமல் இழுபறி தொடர்ந்தது. தாம் ஒரு செல்லாத காசு என்பதைக் கூட்டணியினர் இதன்மூலம் நிரூபித்துள்ளனர்.

இதற்கு அடுத்த கட்டமாக சிறிலங்கா - இந்தியா உடன்படிக்கையில் (THE SRI LANKA - INDIA ACCORD OF 1987) ராஜீவ், ஜெயவர்த்தனா ஆகியோர் தமது நாடுகளின் சார்பில் கையொப்பமிட்டனர். பெயரளவில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக இவ்வுடன்படிக்கை பிரகடனப்படுத்தப்பட்டாலும் அது இந்திய நலனைக் குறிவைத்தே செய்யப்பட்டது. நடுவராக நுழைந்த இந்தியா, சிங்கள அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதோடு தமிழர்களுக்கு எதிராக இராணுவ ரீதியாகச் செயற்படத் தொடங்கியது. இந்திய இராணுவம் தன்னை அமைதிப்படை என்று கூறிக்கொண்டாலும் தமிழர்கள் அதை ஆக்கிரமிப்புப் படையாகவே பார்த்தனர். இந்தியத் தலையீடு ஒரு பாரியளவு தோல்வியாக முடிந்தது. கிடப்பில் போடப்பட்டதாக முன்பு சொல்லப்பட்டாலும் இந்த உடன்படிக்கை மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான சிறிலங்கா அரசுக்குமிடையிலான பேச்சுக்கள் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் ஆரம்பமாகின. இவை ஹில்ரன் (HILTON TALKS) என்று அழைக்கப்படுகின்றன. சிறிலங்கா அரசுடன் பேசுக்சுவார்த்தைக்காக அழைத்துச் செல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை அணியினர் ஹில்ரன் நட்சத்திர விடுதியில் தங்கவைக்கப்பட்ட காரணத்தால் இவ்வாறு அழைக்கப்படுகின்றது. 1989 தொடக்கம் 1990வரை இப்பேச்சுக்கள் நீடித்தன. விடுதலைப்புலிகள் இப்பேச்சின்போது அரசின் இழுத்தடிப்பு உபாயத்தை நேரடியாகச் சந்தித்தனர்.

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பையும் கூடுதல் அதிகாரப் பகிர்வையும் புலிகள் இப்பேச்சின்போது கேட்டனர். இராணுவம் முகாமிற்குள் முடங்கியிருக்க வேண்டுமென்றும் சில இடங்களிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறவேண்டும் என்றும் புலிகள் கோரினர். தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழக் காவல் துறை சட்டம் ஒழுங்கிற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்றும் பிறிதோர் கோரிக்கையயை புலிகள் முன்வைத்தனர். அரசு இழுத்தடிப்பில் குறியாக இருந்தது. இதனால், புலிகள் வெறுப்படைந்தனர். இதற்கிடையில் புலிகள் தம்மைப் பலப்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டை சிறிலங்கா இராணுவம் எழுப்பியது. பேச்சுக்கள் தோல்வியுற மீண்டும் போர் தொடங்கியது.

அடுத்ததாக, யாழ்ப்பாணப் பேச்சுக்கள் 1994இல் தொடங்கி 1995வரை இடம் பெற்றன. இப்பேச்சுக்கள் யாழ்நகரில் நடந்த காரணத்தால் இப்பெயர்வரக் காரணமாகியது. ஹில்ரன் பேச்சுக்களை யூ.என்.பி. அரசும், யாழ்ப்பாணம் பேச்சுக்களை சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் நடத்தின. இப்பேச்சுவார்த்தைக்காக உலங்கு வானூர்திமூலம் கொழும்பிலிருந்து யாழ் வந்த அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கு போதுமானளவு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. அவர்கள் உயர் மட்டத்தினரும் அல்ல. புலிகள் தரப்பில் அதியுயர் உறுப்பினர்கள் பேச்சில் பங்குபற்றினர். எல்லாவற்றிற்கும் மேலாக பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கும் போதே பெருமளவு இராணுவத்தினர் தாக்குதலுக்குத் தருணம் பார்த்து பலாலியில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்தனர். பேச்சுக்கள் மீண்டும் ஒரு ஏமாற்று வித்தையாக அமைந்தது.

யாழ் பேச்சுக்களில் புலிகள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தனர். வடக்குமீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும், பூனகரி படை முகாம் அகற்றப்படவேண்டும், கிழக்கில் ஆயுதம் தரித்து நடமாடுவதற்குப் புலிகள் அனுமதிக்கப்படவேண்டும். இவற்றை ஏற்றுக்கொள்ள அரசு சம்மதிக்காத காரணத்தால் பேச்சுக்கள் தோல்வி அடைந்தன. தடைவிதிக்கப்பட்ட சில பொருட்கள்மீது தடைநீக்கம் செய்வதாக அரசு கூறியது. ஆனால், வவுனியா போன்ற இராணுவ முகாம்கள் தடையை அமுலாக்கின. பேச்சுவார்தை முறிந்தபின் கடும்போர் மூண்டது.

அடுத்த பேச்சுக்கள் பெப்பிரவரி 22, 2002இல் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையோடு இன்று நிறுத்தப்பட்டிருந்தாலும், தொடரும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன. நோர்வே ஒழுங்குசெய்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் போர் நிறுத்த உடன்படிக்கையும் உள்ளடங்கு



கின்றன. பெப்பிரவரி 24, 2002 தொடக்கம் போர்நிறுத்தம் அமுலில் இருக்கின்றது. சிறிலங்கா - இந்தியா உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்பட்ட போர்நிறுத்தம், யாழ் பேச்சுக்களின்போது தேசியத் தலைவர் அவர்களும் சந்திரிகாவும் செய்துகொண்ட ஜனவரி 08, 1995 போர்நிறுத்த உடன்படிக்கை (CESSATION OF HOSTILTIES) ஆகியவற்றிற்கும் இப்போதைய போர் நிறுத்தத்திற்கும் இடையில் பாரிய வித்தியாசமொன்று உண்டு.

முதல் கூறியவை இரண்டும் இரு பகுதியினர் இணைந்து செய்துகொண்ட உடன்படிக்கைகள். இறுதியானது மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் செய்யப்பட்டது. 1920இல் இருந்து 2002வரை செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றிய மேலோட்டமான விவரங்களை மாத்திரம் இங்கு தரக்கூடியதாக இருக்கின்றது. விரிவாக இவ்விடயத்தை ஆராய முற்படின் அது பெருமளவு பக்கங்களைக் கொண்ட ஆய்வு நூலாக இடம்பெறும். இப்போதைய பேச்சுக்களைப் பொறுத்தளவில் வரலாறு திரும்பினாலும் வியப்படையத் தேவையில்லை. ●

**மனசை வலிக்கவைக்கும் எத்தனை நிகழ்வு. வளர்த்த நாய் சாப்பிடாது விட்டால் தானும் சாப்பிடாமலே பசியிருக்கும் அவனது நேசம் எல்லோர்மீதும் எல்லாவற்றின் மீதும் வியாபித்திருந்தது. மனதுக்குள் எழுகின்ற வலிகள் எல்லாம் வலிமையாகியிருந்தன. இலக்கிற்காகக் காத்திருப்பது, பயிற்சி எடுப்பது, நகருவது, சண்டை ஆரம்பிக்கலாம் என்ற கடைசிக் கணங்களில் சந்தோசப்படும்வேளை ஏதாவது ஒரு காரணம் இலக்கை அழிக்கமுடியாமைக்கு வழிவகுக்கும். வாடிய முகம், தளர்ந்த நடை, மறுபடி தளம் திரும்புவான். மறுபடியும், மறுபடியும்.... அவனின் காத்திருப்பு, பயிற்சி எடுப்பு, எல்லாம் தொடரும்.**

— துளசிச்செல்வன் —

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டான். பகைவனின் குகைக்குள்ளேயே கூடுகட்டி அவனையே வேவு பார்க்கும் வேவுப்பணிதான் அவனுக்கு வழங்கப்பட்டது. அராலி, ஊர்காவற்துறை இன்னும் அந்தக் கரையோரத்து இராணுவ முகாம்கள் எல்லாவற்றிற்குள்ளேயும் நிற்கும் பற்றைகள் பேசமானால் மட்டுமே அவனைப்பற்றி முழுமையாக அறியலாம். எவ்வளவோ கடினங்களும் துயரங்களும் அந்தப்பற்றைகளோடும், மரங்களோடும் சேர்ந்து உறங்கிகொண்டிக்கின்றது.

ஆட்கள் இல்லாத சூனியப் பிரதேசத்துக் கட்டடங்களும் தண்ணீரில் நனைந்து கொண்டேயிருக்கும் கரையோராத்துப் பற்றைகளுந்தான் அவனின் தங்கிடங்கள். பல நாட்களாய் அங்கேயிருந்து ஊர்காவற்துறை முகாம் வேவிற்காக அலைந்து கொண்டிருந்தான்.

ஒருநாள், தன் அணியோடு வேவிற்காக உள்ளுக்கு வந்தவன் இடையில இராணுவத்தை சந்தித்துக் கொள்ளவேண்டியிருந்தது. தவிர்க்க முடியாத சூழலில் சண்டையிட்டார்கள். முன்னனி அரணைத் தாண்டிவெளியே போகவே முடியாது என்று புரிந்துகொண்டான்.

அவர்களோடு வந்தவர்களில் ஒருவன் காலில் சூடுபட்டு விழுந்து விட்டான். முன்னனி நிலைகளை இராணுவம் பலமாகவும் விழிப்பாகவும் இனி வைத்திருக்கும் என்று புரிந்தமையால் காயப்பட்டவனையும் தோளில் சுமந்துகொண்டு இராணுவப்பகுதிக்குள்ளேயே சென்றார்கள். இடையிடையே இராணுவகாவலரண்கள் மற்ற இடங்கள் எல்லாம் பற்றைகள். அவர்களது நடைத்தூரம் அதிகமாக அதிகமாக நா வரண்டு போனது. ஒருசொட்டுத் தண்ணீர்கூட இல்லை. பசிவாட்டம் தாங்க இயலாது. உடல் சோர்ந்துவிட்டது. காயப்பட்டவனின் புண்ணுக்குச் சுற்றிய சீலைத்துணியைத் துளைத்து விடும் முயற்சியில் இளையான்களும் கொசுக்களும் மொய்த்துக்கொண்டிருந்தன.

"சீ... இதுகளே காட்டிக்கொடுக்கும் போல" மடியில் வைத்திருந்தவன் கொசுக்களை விரட்டிக் கொண்டிருந்தான். காயப்பட்டவன் வேதனையோடு முனகிக் கொண்டு கிடந்தான். இந்த வேளையில் எல்லோரும் சோர்ந்த பின்னும் செங்கதிர்வாணன் இன்னுமொருவனை அழைத்துக்கொண்டு தண்ணீர் தேடினான். இப்போது அவர்கள் இயலாமையினால் அழுதால் கூட கண்ணீர் வராது. அவ்வளவுக்கு உடலில் நீர்த் தன்மையில்லை. தண்ணீர் தேடி அலைந்தவர்களின் கண்ணில் கிணறு ஒன்று தென்பட்டது அது ஆழக்கிணறு. யாரும் பாவிப்பதில்லையென்பதால் கிணற்றில் வாளிகூட இல்லை.

அவன் கிணற்றில் இறங்கித் தண்ணீர் எடுப்பது என்ற முடிவோடு உடற் தளர்வைப் பொருட்படுத்தாது கிணற்றினுள் இறங்கினான். ஒவ்வொரு படியும் குறையக்குறைய நெஞ்செல்லாம் புதுப்பரவசமோடியது. தண்ணீர்.... தொடும் தூரத்தில் கையால் அள்ளி முதலில் உதடுகளை நனைப்போம் என்று முயன்றான். சீ.. சரியான உப்புத்தண்ணி. ஏமாற்றம். இயலாமை என்றாலும் சோர்ந்து விடாது மீண்டும் மேலேறிவந்து தண்ணீர் தேடி அலைந்தான். தனக்கு இல்லாவிட்டாலும் தன் காயப்பட்ட தோழனுக்கும் ஏனைய தோழர்களுக்கும் கொடுத்துவிட வேண்டுமே எனத் துடித்தான்.

அவனுக்கு இது பெரும் கஷ்ரமாகவோ சுமையாகவோ இருக்கவில்லை. இப்படிப்பட்ட வேளையிலெல்லாம் அவனின் மனதில் வந்துபோபவை அவன் நேரில் கண்ட மக்களின் அவலமும் தன் தேசத்தை மீட்கத் தாமதமாகும் ஒவ்வொரு நொடியும் அவர்களின் அவலங்களும் அதிகரிக்குமே என்ற எண்ணங்களும் தான்.

அவன் முயற்சிகளை கைவிடாது நடந்தான். அவனது கண்ணில் ஒரு வீடு தென்பட்டது. அவர்களை அழைத்து தண்ணீர்கேட்டு அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கவிரும்பவில்லை. அவர்கள் முற்றத்தில் ஏதோ சுவையாகக் கதைத்துக்கொண்டிருக்க பின்புறம் வந்து குடத்துத் தண்ணீரை அவன் கொண்டுவந்த கலன்களில் நிரப்பிக்கொண்டு தோழர்களை நோக்கி விரைந்தான். இடையில் ஓரிடத்தில் பற்றிக்கரியும் தேங்காய்நெய்யும் எடுத்துக்கொண்டுபோய் காயப்பட்ட போராளிக்கு கை மருத்துவம் செய்துவிட்டு உதவி அணி வரும்வரை காத்திருந்தான்.

உதவி அணி வந்து சேரமுடியாது அல்லற்பட்டது. இவர்களும் வெளியில் செல்ல மீண்டும் மீண்டும் முயன்றனர். முடியவில்லை. உதவியணி ஒருவாறு இவர்களை வந்தடைந்தது. இரவுபகல் அலைந்தமையால் எத்தனை நாட்கள் எங்கே அலைந்து திரிந்தார்கள் என்று சரியாகத் தெரியாது. உதவியணியில் வந்தவர்களிலும் சிலர் காயமடைந்திருந்தார்கள். அவர்களையும் தூக்கிக்கொண்டு சேற்றுக்குள்ளால் நடந்து வெளியேறி வந்து சேர்ந்தார்கள். ஆனால் பெறப்பட்ட தகவல்கள் நெஞ்சின் ஆழத்திற் கவனமாக இருந்தன.

◆◆◆

'நொடி மாஸ்ரர்' அவனை அப்படித்தான் எல்லோரும் அழைப்பார்கள். பயிற்சி முடிந்து கிடைக்கும் தேனீர் இடைவேளையிலோ ஓய்வான வேளைகளிலோ அவன் நிற்கும் இடத்தை சிரிப்பூட்டிக் கொண்டிருப்பான். ஏதாவது நொடி சொல்லி மற்றவர்களை மடக்கிவிடுவான்.

அவனின் அகன்ற உடம்பும் நடக்கும் போதும் நிற்கும் போதும் பின்புறம் வளையும் கால்களும் குத்திநிற்கும் மீசையும் எடுப்பில்லாத சாதாரணமான தோற்றமும் நினைவுக்கு வரும் ஒவ்வொரு கணமும் அவன் கேட்டு விடை காணமுடியாது போன புதிர்களே நினைவுக்குவரும்.

'நொடிமாஸ்ரர்' அது அவனுக்கு ஏற்றதாய்த்தான் இருந்தது. அவன் உண்மையில் ஆசிரியன்தான். அராலித்துறைச்சண்டைக்கு செல்லும் அணிகளில் ஒன்றிற்கு இவனே வழிகாட்டி. இவன் வழிகாட்டி அழைத்துச்சென்ற அணிக்கு இவன்தான் பயிற்சி கொடுத்தான். அதன் பின் வெடிமருந்து பற்றிப்படிப்பித்தான். புதிதாய் வேவு அணியில் இணைபவர்களுக்கு அவனே வெடிமருந்துப் பாடமும் கற்பித்தான். வெடிமருந்து சம்பந்தமான பயிற்சிகளும் கொடுத்தான்.

மெதுவாகவும் பொருள் விளங்கும் படியும் கற்பிக்கும் திறமையால் அவன் கற்பிப்பதைப் போராளிகள் விரும்பினர். வேவு பணியில் நின்று வெடிமருந்து பற்றிப் படித்துக் கொண்டிருக்கும் போது முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையில் எதிரிவைத்த பொறி வெடிகளையும் வெடிக்காமல் போன எறிகணைகளையும் செயலிழக்கச் செய்யும் பணி கொடுக்கப்பட்டது.

வெடிமருந்துக் கல்வி முழுமையாக நிறைவுறாதபோதும் அவன் தனது முயற்சியால் ஒவ்வொரு வெடிப்பொருளையும் செயலிழக்கச் செய்யும் முறையை அறிந்து வேகமாக செயற்பட்டான். அவன் இயக்கத்தில் இணைய முன்பே யாழ்ப்பாணத்திற் கற்றுக்கொண்ட தொழில் நுட்ப அறிவு பெரிதும் பயன்பட்டது.

அவன் சூரியகதிர் சண்டையில் அணி ஒன்றிற்கு பொறுப்பாக நின்றபோது கரும்புலி அணிக்குச் செல்வதற்கான அனுமதி வந்தது. அவன் வேவில் நிற்கும் போதே தலைவருக்கு கடிதம் எழுதியிருந்தான். பதில் வந்தபோது துள்ளிக் குதித்தான்.

◆◆◆

மனசை வலிக்கவைக்கும் எத்தனை நிகழ்வு. வளர்த்த நாய் சாப்பிடாது விட்டால் தானும் சாப்பிடாமலே பசியிருக்கும் அவனது நேசம் எல்லோர்மீதும் எல்லாவற்றின் மீதும் வியாபித்திருந்தது. மனதுக்குள் எழுகின்ற வலிகள் எல்லாம் வலிமையாகியிருந்தன. இலக்கிற்காகக் காத்திருப்பது, பயிற்சி எடுப்பது, நகருவது, சண்டை ஆரம்பிக்கலாம் என்ற கடைசிக் கணங்களில் சந்தோசப்படும்வேளை ஏதாவது ஒரு காரணம் இலக்கை அழிக்கமுடியாமைக்கு வழிவகுக்கும். வாடிய முகம், தளர்ந்த நடை, மறுபடி தளம் திரும்புவான். மறுபடியும், மறுபடியும்.... அவனின் காத்திருப்பு, பயிற்சி எடுப்பு, எல்லாம் தொடரும்.

மூன்று வருடங்களாக கழிந்த ஒவ்வொரு கணத்திலும் அவனது காத்திருப்பும் சேர்ந்தே கழிந்திருந்தது. சோர்வில்லாது எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தியபடி எல்லாக் காரியங்களிலும் ஈடுபடும் செங்கதிர்வாணனின் பாதங்கள் கடைசியாக மணலாற்றுக் காட்டுக்குள் இரத்தம் கசியக் கசிய நடந்தன.

அந்தப் பாதங்கள் பல இடங்களில் பதிந்திருக்கின்றன. அநேகமாக சண்டைகளிற்கு முன் வேவுப் பணிக்காக எதிரியின் மையப் பிரதேசம் வரையும் கவடு பதிந்திருக்கிறது.

கரும்புலியாக வெடிசுமந்தும் ஏராளமான களங்கள். சிலவற்றை இப்போதுகூட வெளிக்காட்ட முடியாது.

◆◆◆

'எங்கேனும் ஒழித்திருப்பான்.' அவளின் மனம் அங்கலாய்த்தது. சற்றுத் தள்ளி விளக்கை உயர்த்தினாள். வாகனத்திலிருந்து வித்துடற்பேழை இறக்குவது தெரிந்தது. அவளால் நம்ப முடியவில்லை. இனி நம்பித்தான் ஆகவேண்டும். மணலாறில் கரும்புலித்தாக்குதல் ஒன்றின் இறுதி வேவிற்காக சென்ற போது அவன் வீரச்சாவடைந்தான்.

'ஆட்டி உடைக்கவேணும்' என்று இரவுபகலாய் விழித்திருந்த அந்தவிழிகள் 29.10.1999 அன்று உறங்கிவிட்டன. 'குட்டான்மாமா குட்டான்மாமா' என்று சிறுமிகள் குரலெடுத்து அழுவது மனங்களை உருக்கியது.

நாளை... இந்தச் சின்னமனங்களுக்கு வளமான எதிர்காலமும் நிலையான தேசமும் வேண்டித்தானே குட்டான்மாமா போலப் பலபேர் போகிறார்கள். சிறுமிகளுக்கு இப்போது புரியாவிட்டாலும் காலம் ஒருநாள் உணர்த்தும். ●





# மீண்டும் மீண்டும் தேசத்திற்காய்

தூயவன்

**1996** ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதி. யாழ் குடாநாடு சனசந்தடியற்று மயான அமைதியுடன் காட்சியளிக்கின்றது. அதன் மேற்குப் பகுதியில் புலிகளின் கரந்தடிப்படை அணியொன்று நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. 1995 மாவீரர் தினம்வரை யாழ்நகரை தக்க வைத்திருந்தனர் போராளிகள். அவர்கள் இப்பொழுது பின்வாங்கி விட்டார்கள். பலவாயிரம் வருடங்கள் பழமைவாய்ந்த பண்பட்ட நகரமொன்று போர்ப் பூகம்பத்தில் சிக்குண்டு வெறிச்சோடிவிட்டது. உள்நிற்கும் போராளிகளுக்கான தளத்தொடர்பு துண்டிக்கப்பட்டு மாதங்கள் கடந்துவிட்டது. மரபுவழித் தாக்குதலுக்குப் பழக்கப்பட்டிருந்தார்கள். மீண்டும் கெரில்லாக்களாக மாறிவிட்டிருந்தனர். எதிரியின் கோட்டைக்குள் வாசம்செய்து, அவன் குகையினுள் தாக்குதல்கள் தொடுப்பது என்பது, சுற்றிப் பற்றி எரியும் நெருப்பின் மையத்தில் நிற்பதுபோன்ற உணர்வையே ஏற்படுத்தும். இராணுவ நகர்வுகளில் அசாத்தியமானவற்றைச் சாத்தியமாக்குவதன் மூலமே பாரிய வெற்றிகளைச் சாதிக்கமுடியும்.

எதிரியின் அதியுச்ச பாதுகாப்பு வலயங்களினுள் தொல்லை கொடுக்கும், தேர்ந்து கொல்லும் தாக்குதல்களைச் செய்வதனூடாக அவனது கவனத்தை உட்குவியவைத்து, வெளிநோக்கிய முன்னேற்றங்களைத் தடுக்கலாம். பெரிய வட்டமொன்றினுள் காணப்படும் பல சிறிய வட்டங்கள் போன்று சிக்கல் நிறைந்ததாகவே எதிரித் தளங்கள் அமைந்திருந்தன. அவற்றினுள் உள்நுழைவது, வெளிவருவது, உள்வசிப்பது அனைத்துமே உயிர்விடுதலை நிச்சயப்படுத்தும். அவன் காப்பரண்கள் சிலவற்றைத் தாக்கியழித்து, போராளிகள் சிலரை உள்நுழைக்கும் முயற்சி வெற்றியளித்து விட்டது. எனினும் சிலர் காயமடைந்து விட்டனர். ஆதலால் மருத்துவப் போராளிகளினது வேலைப்பளு அதிகரித்துவிட்டது. மிகுந்த சிரமத்தின் மத்தியில், நடக்கக்கூடிய காயக்காரர்களை வன்னித்தளம் அனுப்பிவிட்டார்கள். ஆனால் வயிற்றுக் காயமும், தொடையென்பு முறிவுக் காயமும் ஏற்பட்ட ஒரு போராளியை அவர்களுடனேயே வைத்திருக்க வேண்டியநிலை ஏற்பட்டது.

சிலநாட்களிற்கு படைக் காவலரண்கள் கடப்பது ஆபத்தானது. எனவே பாதுகாப்பான உட்பிரதேசங்களினுள் செல்ல முடிவெடுத்தார்கள். நாற்புறமும் வயல் வெளிகளினால் சூழப்பட்ட ஒரு நிலத்தைத் தெரிவு செய்கின்றார்கள். அங்கு ஆந்தைகளும் வௌவால்களும் குடியேறிய, அறுகம்புல் ஆக்கிரமித்த, தூசிபடிந்த, சருகுகள் நிறைந்த வீடுகளினுள் புகுந்து கொள்கின்றார்கள். அவர்களை நோக்கி இராணுவம் முன்னேறினால் அவதானிப்பது சுலபம் எனினும் தப்பியோடுவது கடினம்.

தடயங்கள் தெரியாதவாறு நிலக்கீழ் பதுங்கு குழிகளை அமைத்துக் கொள்கின்றார்கள். கடந்த சில நாட்களாக காயப்பட்டவனுக்கு, வாய்மூலம் எதுவும் கொடுக்கப்படவில்லை. திரவ ஊடகமும், நுண்ணுயிர் கொல்லி மருந்துகளும் நாளத்தினூடாக ஏற்றப்படுகின்றது. இவர்களின் மருத்துவக் கையிருப்பு வற்றிவிட்டது. ஆங்காங்கே பலமைல்கள் தொலைவில் பதுக்கி வைக்கப்பட்டவற்றை எடுத்து வருவதென்பது அபாயம் நிறைந்த ஆளணிவள விணடிப்பில் முடிந்துவிடும். எனவே வன்னித் தளத்திற்கு விரைவாக அனுப்புவதே சிறந்தது.

காயக்காரனை நகர்த்த வேண்டிய பாதையோ கடினங்களைத் தாராளமாகத் தரவல்லது. பலமைல்கள் முட்பற்றைகளையும் வயல் வரம்புகளையும் தாண்டி, இராணுவ ரோந்துகள் கூடிய வீதிகளைக் கடந்து, கடற்கரைக்கு வரவேண்டும். பின்னர் அங்கு காணப்படும் காவலரண்களுக்குச் சமாந்திரமாக கடலினுள் சிலமைல்கள் நீந்தவேண்டும். மீண்டும் பாலமொன்றைக் கடக்கவேண்டும். அதில் 30m இடைவெளியில் காவலரண்கள் அமைக்கப்பட்டு, மின்னொளி பாய்ச்சப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தண்ணீர் சலசலக்கும் அல்லது நீர்த்துளிகள் சொட்டும் சத்தம்கூட இவர்கள் உயிர்களுக்கு உலைவைத்துவிடும். தங்கள் மூளைகளைச் சலவைசெய்து ஒரு வழியை முயற்சிப்பது என முடிவெடுத்தனர்.

ஆங்காங்கே கைவிடப்பட்ட வாகனங்களில் இருந்து ரயர்களைக் கழட்டி ரியூப்பை வெளியில் எடுத்தார்கள். பத்து சேதமடைய இரண்டைச் சேதமில்லாது எடுக்க முடிந்தது. இரண்டு ரியூப்புக்கும் காற்றடித்து, அவற்றை 'ஸ்ரெச்சரின்' இரு முனைகளிலும் வைத்துக் கட்டினார்கள். அதன்மீது ஒருவனைப் படுக்கவைத்து தண்ணீரில் இழுத்துப் பார்த்தார்கள். தூக்கும்போது தாரையாக நீர் சிந்தும் சத்தம் பெரிதாகக் கேட்கிறது. அதனைக் குறைப்பதற்கு 'ஸ்ரெச்சர்' நுனியில் சிறு துவாரங்கள் இட்டார்கள். நீரில் நகர்த்துவதற்கு வழி செய்தாகிவிட்டது. சத்தம் கேட்காமல் நீண்டதூரம் நகர்த்துவதற்கு ரயர்ச் சில்லுகள் பொருத்தப்பட்ட வண்டில்கள் உசிதமானவை. பலமைல்கள் தேடி ஒரு வண்டிலைக் கொண்டுவந்து சேர்த்தார்கள். மாடுகளிற்குப் பதிலாகத் தங்கள் தோள்களைக் கொடுத்து இழுத்துப் பார்த்தார்கள். அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது.

இராணுவ அழுத்தம் நிறைந்த இரவில் பலமணிகள் நடந்து ஒருவாறு கடற்கரை வந்துசேர்ந்தார்கள். வேவுப்புலிகள் நோயாளியை ஸ்ரெச்சரில் கிடத்தி நீரில் இழுத்தபடியே இருளில் மறைந்தார்கள். எவ்வளவு முறை பழக்கப்பட்டிருந்தாலும் உடல் குளிரில் விறைக்கவே செய்தது. உணவின்றி வாடிய உடல்கள் விரைவாகக் களைக்கவே செய்தது. எனினும் உளவுரண் உடைபடாமல் பார்த்துக் கொண்டார்கள். சில மணிகள் செலவழித்து கடக்க வேண்டிய பாலத்தடியை வந்து சேர்ந்தார்கள். அவர்களின் துர்ப்பாக்கியம், எதிரி காவலரண்களை இன்னும் நெருக்கமாக்கியிருந்தான். காரணம் ஊகிக்க முடிந்தது. இதற்கு முதற்தடவை இவர்கள் கடக்கையில் சிந்திய நீர்த்துளிகள் தடயம் ஆகிவிட்டிருந்தன. மிகுந்த ஏமாற்றத்துடன் தங்கள் தங்ககம் திரும்பினர். மீண்டும் மீண்டும் நான்கு தடவைகள் முயற்சித்தனர், முடியவில்லை. நோயாளியின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டிருந்தது. மருந்துகளும் முடிவடைந்துவிட்டது. எனினும் சிறிது ஆறுதலான விடயம், அவனிற்கு நீர் அருந்தக் கொடுத்துப் பார்த்ததில் பிரச்சினை இல்லை. அதனால் வயிற்றுக்காயம் எனத் தயங்காமல் இப்பொழுது திரவ உணவுகள் வழங்கக்கூடியதாக இருந்தது.

இக்காலப்பகுதியில் வேறுபல சண்டைகளில் காயமடைந்தவர்களும் வந்து சேர்ந்துவிட்டனர். எண்ணிக்கை பத்தைத் தாண்டிவிட்டது. உணவுகள் எதுவும் கையிருப்பில் இல்லை. பல வருடங்களுக்கு முன்னர் இராணுவப் பிரதேசங்களுக்கு அண்மையில், மக்களால் கைவிடப்பட்ட, மரவள்ளித் தோட்டங்களைத் தேடிச்சென்று கிழங்குகள் பிடுங்கிவந்தனர். அவையோ சூம்பிக்கிடந்தன. கைவிடப்பட்ட வயல்களில் முளைத்திருந்த நெற்கதிர்களை அறுத்துவந்து கஞ்சி வைத்துக் குடித்தனர். நிலாக்காலம் வந்துவிட்டது. இனிக் காவலரண்களை காயக்காரர்களுடன் கடப்பது என்பது சாத்தியமற்றது. ஒன்றும் செய்யமுடியாத நிலை. உணவுப்பஞ்சம் உயிரைக் குடிக்குமோ எனும் நிலை. அப்பொழுது மெல்லச் சிரித்தவாறு அக்காயக்காரன் சொல்கின்றான், "அண்ண! என்னட்ட புதுப் புரியாணிப் பார்சல் ஒண்டு இருக்குது, எனக்கு நல்லாப் பசிக்கேக்க சாப்பிடுவன்". அப்பொழுது அதனை மற்றவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

நிலவெறிக்கும் இருகிழமைகள் ஒருவாறு கழிந்துவிட்டிருந்தது. அனைவரும் அரைவாசியாக மெலிந்துவிட்டிருந்தனர். அடுத்து வந்த பதினைந்து நாட்களாக மீண்டும் மீண்டும் முயற்சித்தனர். ஆனால் இவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை. பகைவனின் இராணுவ மூளை சரியாகவே செயற்படுகிறது என்பதனை ஏற்பதைத் தவிர. இப்படி இருக்கையில் கிடைத்த செய்தி பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல் இருந்தது. இவர்கள் இருக்கும் இடத்தை எதிரி மோப்பம் பிடித்துவிட்டான். அதலால் முற்றுகையில் இருந்து தப்புவதற்காக வேறு இடம் மாறத் தீர்மானித்தார்கள். பலமைல்கள் உட்பிரதேசத்தினுள் நுழைந்து நிலை எடுத்தார்கள்.

எவரும் எதிர்பார்க்காத சம்பவங்கள் நடைபெறத் தொடங்கின. இவர்கள் இருக்கும் பிரதேசம் பலவாயிரம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டது. நாளுக்கு நாள் முற்றுகை இறுகத் தொடங்கிவிட்டது.

சிறுசிறு கொப்புகளை முறித்து, வளைவான பாதைகளை உருவாக்கி சூரை முட்பற்றைகளினுள் புகுந்து கொள்கின்றார்கள். இவர்கள் உள்நுழைந்த பற்றைகளுக்கு அண்மையாகவும் பலநூறு இராணுவத்தினர் வந்துவிட்டனர். அவர்கள் சிங்களத்தில் உரையாடுவது தெளிவாகக் கேட்கின்றது. உண்ண உணவோ, குடிக்க நீரோ இன்றி மணித்தியாலங்கள் நாட்களினுள் மறையத் தொடங்கியது. ஏற்கனவே களைத்திருந்தவர்களையும், காயமுற்றிருந்தவர்களையும் முற்றுகை உண்ணாநோன்பு ஏறி மிதிக்கத் தொடங்கியது. சுரக்கும் எச்சில்கூட விழுங்க முடியாதவாறு இறப்பர் போல் தொண்டையில் ஒட்டிக் கொண்டு இம்சை செய்தது. காயக்காரரின் பரிதாபத்தைப் பார்த்த சிலர் பலமணிகள் எடுத்து, சில மீற்றர்கள் ஊர்ந்து, பகைவன் உள்முற்றுகை தாண்டிச் சென்று நீர் எடுத்துவந்து கொடுத்தார்கள். துருப்பிடித்த தகர டப்பாக்களில், இறந்த கரப்பான் பூச்சிகளுடன் காணப்பட்ட அந்நீர் மண்ணிறத்தைத் தோற்கடித்தது. அதனைத் துளித்துளியாக நாக்கை நனைக்கப் பயன்படுத்தினார்கள் காயமுற்றிருந்தவர்கள்.

ஆறு இரவு பகல்கள் கடந்துவிட்டிருந்தது. சண்டை செய்யமலேயே சாகவேண்டி வந்துவிடுமோ என அஞ்சினர். இனியும் பொறுக்கமுடியாது. உடல் வலுவுள்ளவர்கள் தயாரானார்கள். ஏதோவொரு சலசலப்பை எதிரி அவதானித்துவிட்டான். திடீரென அவனது செறிவான துப்பாக்கிச் சூடுகளும் ரைபிள் கிரனைட்டுகளும் இவர்கள் இருந்த பற்றைகளை நோக்கி சீறிவந்து, வெடித்து எரிய வைத்தன. மூர்க்கமுடன் ரவைகளைத் தீர்த்தபடி வெளியில் பாய்ந்த சில போராளிகள் முற்றுகையை உடைத்து வெளியேறினர். இறுதியாக அந்தக் காயக்காரனை அங்கிருந்த மருத்துவப் போராளி ஏக்கமுடன் பார்த்தான். கணப்பார்வையில் ஆயிரம் கதைகளைப் பரிமாறினர். 'அண்ணை நீங்க தப்புங்கோ, நான் புரியாணிப் பார்சலை சாப்பிடப்போறன்...' கூறியபடியே தன்னிடம் இருந்த புதிய குப்பியை எடுத்து சரக்.. சரக்... எனக் கடித்தான். எஞ்சிய தோழர்கள் தம் துப்பாக்கிகளை இயக்கியவண்ணம் வெளியே பாய்ந்தனர்.

●

# சங்கரண்ணா! சாவு உனது முடிவல்ல.

## - ஒரு வரலாற்றின் அறிமுகம்

கேணல் சங்கரைப்பற்றிய நினைவுகளின் ஒரு பகுதியைத் தொகுத்து ஒரு புத்தகம் வெளிவந்துள்ளது. 'சங்கரண்ணா! சாவு உனது முடிவல்ல' என்று வந்திருக்கும் இந்தப் புத்தகம் கேணல் சங்கரை எங்களோடிருத்துகிறது. இன்னுமின்னும் ஆழமாகச் சங்கரை எங்களில் இருத்துகிறது. எங்களுடைய விடுதலைப்போராட்ட வரலாற்றில் கேணல் சங்கரின் அடையாளம் மிகவும் பிரகாசமானது என்பதைக் காட்டுகிறது. ஒரு விடுதலை வீரனின் சாவு என்பது புதுவாழ்வு குறித்த ஒரு வெளிப்பாடாகவும் பிரகடனமாகவுமே இருக்கும் என்பதையும் இந்தப் புத்தகம் சொல்கிறது.

சங்கர் அவர்களைப் பற்றிய நினைவுகளால் அவருடைய ஆற்றலை, ஆளுமையை, திறன்களை, அறிவை, அன்பை, உறுதியை, துணிவை, போராட்ட உணர்வை, போராளிக்குரிய குணாம்சத்தை, சங்கரின் இயல்பை, அவருடைய நேர்மையை, இயக்கத்தின் மீதான பற்றை, தலைமையின் மேலான நேசிப்பை, கவனிப்பை, மக்களுடனான உறவை - இவ்வாறு எல்லாவற்றிலும் விரியும் செழுமைமிக்க, ஒரு முழு மனிதனுக்குரிய பண்பு விருத்திகளை ஒவ்வொருவரும் இந்நூலில் வெளிப்படுத்துகிறார்கள். இந்தப் புத்தகம் பலருடைய எழுத்துக்களால், நினைவு மீட்டல்களால், சங்கர் அவர்களைப் பற்றிய பிறருடைய கருத்துக்களால் உருவாகியிருக்கிறது.

கேணல் சங்கர், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து போராடியவர். செயற்திறன்மிக்க ஆற்றலாளர். தலைவர் பிரபாகரனின் நெருக்கத்துக்கும் நம்பிக்கைக்குமுரியவர்.

போர் உக்கிரம் பெற்றிருந்த நாட்களில் - நெருக்கடிமிக்க களங்களில் துணிச்சலோடும், புதிய புதிய தந்திரோபாயங்களோடும் வியூ கங்களை வகுத்து நின்றவர் - கேணல் சங்கர்.

சங்கர் அவர்கள் ஊரோடி, உலகோடிப் பெற்ற அனுபவங்களை விடுதலைக்காக போராடப் பயன்படுத்தினார். உள்ளூர்களிலும் வெளிநாடுகளிலும் படிப்புக்காகவும் பணிக்காகவும் பயணித்தவர்; அறிவையும் அனுபவத்தையும் திரட்டியவர். கடலோடியாக, விமானமோட்டியாக, பொறியியலாளராக என்றெல்லாம் தன்னை விரித்தவர். மக்கள் மீதான நேசிப்பாளராக, மக்களின் பற்றாளராக விரிந்தவர்.

இந்தகைய அடையாளங்களைக் கொண்ட மனிதரின் இழப்பினை, அதன் கனதியை வெளிப்படுத்தும் 'சங்கரண்ணா! சாவு உனது முடிவல்ல' நம் சமகால வரலாற்றுப் பதிகையில் முக்கியமானதாகவே இருக்கிறது. இந்தப் புத்தகம் வாசிப்புக்கு மிக இலகுவாகவும், ஈர்ப்புள்ளதாகவும் இருக்கிறது. எழுதியுள்ள பலரும் சிறிய அளவில்தான் தமக்கும் சங்கர் அவர்களுக்குமிடையிலான உறவை, அல்லது சங்கரிடம் தாங்கள் அவதானித்த பண்புகளை, இயல்பினை, தாம் படிந்த பாடங்களைச் சொல்கிறார்கள். ஆனால், அவை கட்டும் சேதிகள் ஏராளம்.

கேணலோடு ஒன்றிணைந்திருந்த சக தளபதிகள், போராளிகள், சங்கரை, நன்கறிந்திருந்த - சங்கர் மதிப்பும் பற்றும் வைத்திருந்த தலைவர், சங்கரின் மகள், துணைவி, சங்கருடன் பழகிய உறவாடிய மனிதர்கள், சங்கர் அவர்கள் செயற்பட்ட களங்களைச் சேர்ந்த மக்கள், உறவினர்கள் எனப்பலரும் தங்களின் நினைவுகளின் அழியாச் சுடராக இருக்கும் மனிதரைப்பற்றி விபரிக்கிறார்கள். இப்படி இவர்கள் எல்லோரும் விபரிக்கும் இந்த விரிப்பில் 'கேணல் சங்கர் மிகவும் முதிர்ச்சி நிரம்பிய ஒரு விடுதலைப் போராட்ட வீரராக வாழ்ந்திருக்கிறார்' என்ற படிமம் மிகச் சிறப்பாகத் துலங்குவதைக் காணலாம்.

கியூ ப விடுதலைப் போராட்டத்தில், பிடலுடன் தோள்சேர்த்து நின்ற 'சே'யைப்போல தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தலைவர் பிரபாகரனுக்குத் துணைநின்ற பாத்திரமாக இருக்கிறார் கேணல் சங்கர். சங்கர் அவர்களைப்பற்றிய அடையாளங்களைச் சிதறல்களாகவும் துண்டு துண்டாகவும் ஒவ்வொருவரும் தத்தமது நோக்கு நிலையிலிருந்து வெளிப்படுத்தியிருக்கின்ற போதும் சங்கரின் படிமம் சிதையாமல் முழுமை பெற்றிருக்கிறது. ஆனால் இந்த முழு மனிதனுடைய நிறைவான சித்திரத்தை இந்த விபரிப்பில் மட்டும் காணமுடியாது. சங்கரின் இளமைப் பிராயத்திலிருந்து அவருடைய இறுதிக்காலம் வரையுமான வாழ்க்கையை புள்ளி புள்ளியாக வைத்து ஒரு இணைப்பை உணரக்கூடியதாக இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இது வாழ்க்கை வரலாறு அல்ல. இதை 'நினைவு வெளிப்படுத்தல்' என்றுதான் வேண்டுமானால் சொல்லலாம். என்றபோதும் இந்நூல் சங்கர் பற்றிய வெளிப்படுத்துகையின் முதல் நூல் என்ற இடத்தைப் பெற்றிருக்கிறது.

நெருக்கடிகளின்போது மதிநுட்பத்துடன் தீரமாகச் செயற்படும் விடுதலைப் போராட்ட வீரனே விடுதலை வரலாற்றை முன்னகர்த்திச் செல்லும் மையக் கருவியாகின்றான். கேணல் சங்கர் இதை மிகச் சரியாகச் செய்திருக்கிறார். தனது கல்வியறிவை - மருத்துவத்துறை சார்ந்த அறிவை - சேகுவேரா எப்படி கியூ ப விடுதலையில் பிடலுடன் இணைந்து எப்படிப் பயன்படுத்தினாரோ அப்படியே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் இணைந்து தனது விமானப் பொறியியல்துறையின் அறிவை கேணல் சங்கர் பயன்படுத்தினார். தனியே தனது கல்வியறிவுக்குட்பட்டோ அல்லது தன்னுடைய ஈடுபாட்டுத்துறையினூள் மட்டும் நின்றோ கேணல் செயற்படவில்லை. விடுதலை இயக்கம் ஒவ்வொரு சூழ்நிலையிலும் எந்தெந்தத் தேவைகளை வேண்டி நின்றதோ அதையெல்லாம் தலைவரோடும் சக போராளிகளோடும் நின்று நிறைவேற்றியிருக்கிறார் சங்கர். மிக்க மதிநுட்பத்துடன் அவர் செயற்பட்ட விதங்களை அவரோடு கூட நின்றவர்கள் இங்கே சாட்சிப்படுத்தியிருக்கிறார்கள். ஆறாத தவிப்போடு ஏற்றுக்கொள்ளக் கஸ்ரமான இழப்பின் காயத்தோடு சங்கர் அவர்களைப் பற்றி ஒவ்வொருவரும் உணர்ச்சி பொங்கச் சொல்கிறார்கள். உண்மையின் சொற்களாக வெளிப்படும் சங்கர் பற்றிய விபரிப்புக்கள் எங்கள் காலத்தில், எங்களோடு வாழ்ந்த இந்த விடுதலை மனிதரை உலகமெங்கும் அறிமுகம் செய்கின்றன; அதிசயங்கொள்ள வைக்கின்றன.

கேணல் சங்கரின் குடும்பத்தில் அவருடைய சகோதரர்களும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து மாவீரரானவர்கள். ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர் இழப்பினைச் சந்தித்தவர் சங்கரின் துணைவி. புதல்வர்களைப் போர்க்களத்தில் ஈந்தவர் சங்கருடைய தந்தை. போராட்டக் களத்தில் தந்தையை இழந்த பிள்ளைகள், தளபதியை இழந்த மக்கள், ஆற்றல்மிக்க, தோழமை நிரம்பிய துணைக்கரத்தை இழந்த தலைவர், மூத்த போராளியை இழந்த போராளிகள் என சங்கர் அவர்களுடைய இழப்பு பல நிலைகளில் நம் காலத்தில் ஆழமான பதிவை ஏற்படுத்தியது. ஆனால் தன்னுடைய இழப்பால் எந்த வெற்றிடமும் ஏற்பட்டுவிடாத வண்ணம் அவர் தனது திறன்களை, ஆளுமையை சக மனிதர்களிடம் - விடுதலைப் போராளர்களிடம் விதைத்துச் சென்றுவிட்டார். சங்கரைப் பற்றி விவரிக்கின்ற பெரும்பாலானவர்களிடம் சங்கருடைய ஆளுமைப் பதிவை அவதானிக்கலாம். தன்னுடைய இழப்பினால் எந்த வெற்றிடமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்த சங்கர் அவர்களுடைய நோக்கு, ஒரு இலட்சியவாதியின் பார்வையினுடைய வெற்றி என்றே கொள்ளவேண்டும். இது நாம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய விடயம்.

கேணல் சங்கர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வகித்த பாத்திரம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் திசைவழியை ஒழுங்கமைப்பதில் அவர் வகித்த பங்கு என்பவற்றை உணர்த்தும் 'சங்கரண்ணா! சாவு உனது முடிவல்ல' போராடும் ஒவ்வொருவரையும் ஊக்குவிக்கும் சுடர்ப் பொறியாகவே இருக்கின்றது. தேடல் மிக்கவராக, ஓயாத உழைப்பாளராக, இலட்சியப் பற்றாளராக வாழ்ந்த மனிதரைப் பற்றிப் பேசுவதனூடாக வாசிப்போரை அத்தகைய வழித்தடத்தில் ஒழுங்கமைக்க இந்தப் புத்தகம் உதவுகிறது.

புத்தகத்தின் இன்னொரு கவனிக்கத்தக்க அம்சம் சங்கர் அவர்களுடைய ஒளிப்படங்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் கேணல் எப்படி இயங்கி வந்திருக்கிறார் என்பதையும், அவருடைய வளர்ச்சிநிலை, வாழ்க்கை ஒழுங்கமைப்பு என்பதையும் இந்தப் படங்கள் காட்டுகின்றன. வரலாற்று முக்கியத்துவம் மிக்க திருப்புமுனைகளில் சங்கர் எப்படி இயங்கியவர் என்பதை இந்தப் படங்களில் சில சாட்சியமாக இருக்கின்றன.

மேலும் இங்கே இன்னொரு விடயத்தையும் கூறவேண்டும். இந்த நூலை சிறப்பான ஒழுங்கோடு வெளியிட வேண்டுமென்று முயன்றுழைத்தவர் லெப். கேணல் நிர்மலன். ஆனால், நூலை வெளியிட முன்னரே அவர் சாவடைந்துவிட்டார். எங்களுடைய வரலாறு இன்று இப்படித்தான் நகர்ந்து வருகிறது. நிர்மலன் அவர்களுடைய கனவையும் இந்தப் புத்தகம் நிறைவேற்றியிருக்கிறது.

எதிரி நயவஞ்சகமாகப் பலிகொண்ட கேணல் சங்கரை எங்கள் வரலாறு எப்படி மகிமைப்படுத்துகிறது என்பதை எதிரிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அவர் மக்களுக்காக, மக்களுடன் வாழ்ந்த ஒரு உன்னதமான இலட்சியப் போராளியல்லவா.

- கருணாகரன் -



## மறக்கமுடியாத மழைக்காலப்பொழுது

இரவு முழுவதும் கடும்மழை. காற்றும் சேர்ந்து காட்டு மரங்களை கரகாட்டம் ஆட்டியது. ஒரு அடிதூரத்திலுள்ள பொருளைக்கூட சரியாகப் பார்க்கமுடியாத நிலை.

தோழி தொலைநோக்கியூடாக எதிரியின் நிலைகளை அவதானித்தபடியே இருந்தாள். தோழிகள் எல்லோரும் மழையில் தெப்பலாக நனைந்திருந்தபோதும் துப்பாக்கிகளை நனையாமல் பாதுகாத்திருந்தார்கள். கால்களை மழைநீர் தழுவியிருக்க கண்கள் தூக்கத்தைத் தொலைத்திருந்தன. எதிரிகளின் நிலைகள் மீதான அவதானம் அணுவளவும் பிசகாமல் கடமையில் கண்ணாயிருந்தார்கள்.

பொழுது புலரத்தொடங்கியது. மழையும் சற்றுத் தணிந்தது. நேற்று நடந்த சண்டையில் எதிரியின் எறிகணை, தங்ககத்தை பதம் பார்த்திருந்தது. எல்லா உடுப்புப் பைகளும் கருகிப்போயிற்று. மிஞ்சியிருப்பது தோழிகள் அணிந்திருப்பவை மட்டுந்தான்.

தொடர்மழையில் நனைந்ததால் ஆடைகள் இறுகி உடல்களில் அடையாளமிட்டன. ஒருத்தியின் கால்களிலிருந்து மழைநீரோடு செந்நீரும் கலந்து கரைந்தது. அவளுக்குச் செய்யவேண்டிய ஒழுங்கைச் செய்து முடித்தேன்.

ராங்கிகளின் உறுமல் கேட்டது. அது எதிரியின் முன்னேற்றத்துக்கான அறிகுறி. மீண்டும் சண்டை தொடங்கிற்று. இரவு இடி முழக்கங்களிற்குப் பதிலாக வெடி முழக்கங்கள் தொடங்கின. மின்னல்களுக்கிடாகக் கந்தக ஒளி காட்டைப் படம் பிடித்தது.

வந்த ராங்கிகளில் சில வசமாய் மாட்டிக்கொள்ள ஏனையவை பின்வாங்கின. எதிரி இழப்புக்களோடு தனது நிலைகளுக்குள் முடங்கிப்போனான். அடங்கிப்போயிருந்த பிராணிகளின் சத்தம் தலைகாட்டியது.

பகலவன் பதினொருமணியளவில் முகம் காட்டினான். கூடவே மழையும் சொரிந்தது. பசி எல்லோரையும் ஆட்கொண்டிருந்தது. பகலுணவும் இரவுணவும் சேர்ந்தே வரும். பாதைகளை வெள்ளம் மூடியுள்ளதால் ஊர்திகள் அடிக்கடி வரமுடியாத நிலை. நாளுக்கு ஒரு தடவை வருகின்ற ஊர்திகள் கூட புதையாத நாட்களில்லையென்றே கூறலாம்.

மழை அவர்களைச் சமைக்க விட்டிருக்குமோ தெரியவில்லை. ஆனால் எப்படியும் சமைத்திருப்பார்கள்.

தோழிகளைத் திரும்பிப் பார்த்தேன். எல்லோர் முகங்களிலும் பசிக்களை படமாக விரிந்து கிடந்தது.


கையைத்திருப்பி நேரத்தைப் பார்த்தேன். இரண்டு மணியாகியிருந்தது. உணவு வரும் பாதையைக் கூர்ந்து பார்த்தேன். பாதையெங்கும் வெள்ளக்காடாய்த் தெரிந்தது. இதனுள் அவர்கள் எப்படி வரமுடியும்? வந்திருப்பார்கள். ஊர்தி புதைந்திருக்கும்.

தூரத்தே ஒரு உருவம் தெரிந்தது. உணவுப்பொதிகளைச் சுமந்தபடி அசைந்து அசைந்து வந்து கொண்டிருந்தது.

அந்த அண்ணை வந்துகொண்டிருந்தார். ஏற்கனவே நடந்த சண்டையொன்றில் காலொன்று முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டதால் பொய்க்கால் பொருத்தியிருந்தார்.

உரிய நேரத்துக்கு உணவு கொடுக்கமுடியாமல் போனதால் அவரின் முகம் வாடிப்போயிருந்தது. பொய்க்கால் வெள்ளத்தில் ஊறி நிறம் மாறியிருந்தது. தோழிகள் ஒருகணம் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். அவர் ஊர்தி புதைந்ததைச் சொல்லிவிட்டு, உணவுப் பொதிகளைத் தந்துவிட்டு அடுத்த நிலைகள் நோக்கி நடந்தார். மழைசொரிந்த தண்ணிரில் உணர்ச்சிப் பிளம்பான முகத்தை மறைக்க உணவுப் பொதிகளைப் பிரித்தேன்.

ஆ.ந.பொற்கோ



## பதிப்படாத பக்கங்கள்

# “தமிழரே புலிகள் புலிகளே தமிழர்”

“புலிகளே மக்கள் - மக்களே புலிகள்” - இவைதான், இம்முறை மட்டக்களப்புப் பொங்கு தமிழின் பிரதான முழக்கமாக இருந்தது.

உணர்ச்சிப் பிரவாகத்துடன் மக்களின் மனங்களிலும், உதடுகளிலும் இருந்து இடைவிடாது முழங்கிய இந்த உண்மையின் ஓசை, நிச்சயம் உலகத்தின் காதுகளையும் நெஞ்சங்களையும் தொட்டேயிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

போரியல் தளத்தில் இருந்து சற்று விலகி இன்று அரசியல் தளத்தில் நிலைகொண்டிருக்கும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய படிநிலையாகப் பொங்குதமிழ் மாறிவிட்டிருந்ததை, ஆர்வத்துடன் கலந்துகொண்ட மக்களின் உணர்வுகள் வெளிப்படுத்தி நின்றன.



## மட்டுநகரில்

பொங்கு தமிழின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு தமிழனும் முண்டியடித்துக்கொண்டு தன்னை மீள் எழுச்சிக்கு உட்படுத்திக் கொண்ட விந்தைதான் பொங்கு தமிழின் உண்மையான வெற்றி.

வயது, பால், இனம், மதம் என்ற வேறுபாட்டின் ஆடைகளையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு, தமிழர்கள் என்ற ஒரே இன அடையாளத்தை மட்டுமே மனதில் ஏந்தியபடி ஊர்வலத்தில் கலந்திருந்த பலரினுள், முஸ்லிம்களும் தம்மை இணைத்திருந்ததானது, தமிழ்பேசும் இனத்தைக் கூறுபோட்டு குளிர்காய நினைக்கும் சக்திகளை கூனிக்குறுக வைத்திருந்தது.

தேசியத் தலைவரின் உருவப் படத்தைத் தாங்கிப் பிடித்தபடி முஸ்லிம் மௌலவி ஒருவர் பொங்குதமிழ் ஊர்வலத்தில் கலந்துகொண்டதானது, தமிழ்த் தேசியத்தில் இருந்து முஸ்லிம்களை எவருமே பிரித்துவிடக் கூடாது, அவ்வாறு பிரித்துவிடவும் முடியாது என்ற உண்மையை உரத்துக் கூறுவதாகவே இருந்தது.

“அடக்கி ஆள நினைக்காதே - அமைதிப் பேச்சை நடாத்து”, “தமிழ்மக்களுக்கு வாழ்வு தந்தவர்கள் புலிகள் - புலிகளுக்கு வளம் சேர்ப்போம் நாங்கள்”, “மக்களே புலிகள் - புலிகளே மக்கள்” போன்ற வானை எட்டும் கோசங்களுடனும், “மறவர் படை தான் தமிழ்ப்படை, குல மானம் ஒன்றுதான் அடிப்படை, வெறிகொள் தமிழர் புலிப்படை, அவர் வெல்வார் என்பது வெளிப்படை” என்ற உணர்ச்சிக் கவி வரிகளுடனும் மக்கள் ஊர்வலங்களில் கலந்து கொண்டார்கள்.

மட்டக்களப்பு பொங்கு தமிழ் எழுச்சியின் பரிணமிப்பு வரலாறு ஒரு தொடர்கதை போன்றது. கால் நூற்றாண்டின் முதன்மையான மக்கள் எழுச்சியாக 17.01.2001 இல் யாழ். சமூகம் பொங்கியெழுந்தபோது, மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகம் அடையாள உண்ணாவிரதத்தின் மூலம் தனது பங்களிப்பை நல்கியிருந்தது. வடக்குக் கிழக்கு முழுவதுமே ஸ்ரீலங்கா இராணுவத்தின் திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாறியிருந்த காலமது. சமாதானத்திற்காக வென்று புதினமான ஒரு யுத்தத்தை நடாத்தி ஸ்ரீலங்கா அரசு அப்போது மூக்குடைபட்டிருந்தாலும், தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தைச் சர்வதேச தளத்தில் பயங்கரவாதமாகச் சித்தரிப்பதில் அதி தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தது.

தமிழ்த் தேசியத்தின் வரலாற்றுத் தேவையை உணர்ந்த யாழ்.மக்கள் தமது அபிலாசைகளையும், உணர்வுகளையும் பொங்கு தமிழாக கொட்டித் தீர்த்தபோது, மட்டக்களப்பு மக்கள் அடையாள உண்ணாவிரதத்தின் மூலம் தமது ஆதரவை வழங்கியிருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து 20.02.2001இல் கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முழுமையான ஒரு பொங்குதமிழ் நிகழ்வை முதற்தடவையாக பல்கலைக்கழக வளாகத்தினுள் நடாத்தியது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் துப்பாக்கி முனைகளுக்கு மத்தியிலும், ஸ்ரீலங்கா புலனாய்வு பிரிவினரின் அகன்ற பார்வைகளுக்கு மத்தியிலும் பல்கலைக்கழக சமூகத்தினர் இந்த பொங்குதமிழ் நிகழ்வை மிகுந்த உணர்ச்சியுடன் நடாத்தியிருந்தார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் உடும்பன்குளப் படுகொலை நிகழ்ந்த தினத்திலேயே இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு அதே பெப்ரவரி 20ஆம் திகதி மட்டக்களப்பு மண் மீண்டும் ஒரு பொங்குதமிழ் நிகழ்வினைத் தாங்கி நின்றது. மட்டக்களப்பு நகரின் மத்தியில், ஸ்ரீலங்காப் படையினரின் அதி உச்சப் பாதுகாப்பு வலயத்தினுள் பெருந்திரளான ஜனத்திரள் மத்தியில் இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெற்றது.

## ஆர்ப்பரித்த பொங்குதமிழ்



உத்தியோகப் பற்றற்ற ஒரு யுத்த நிறுத்தம் நிலவிய காலமது. தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்று தமிழ்மக்கள் தேர்தல் பிரகடனத்தின் மூலம் வழங்கியிருந்த அங்கீகாரத்தை உறுதி செய்யும் முகமாக இந்தப் பொங்குதமிழ் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மண் கண்ட மூன்றாவது பாரிய பொங்குதமிழ் நிகழ்வு கடந்த 21.01.2004இல் கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. ‘வீரம் விளை நிலம், வெற்றிப் பெரும் தளம்’ என்ற வர்ணனையுடன் இந்த மாபெரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை மாணவர் சமூகம் ஏற்பாடு செய்திருந்தது.

மக்களால், மக்களுக்காக நடாத்தப்படுகின்ற இந்த மக்களது நிகழ்வை சில சக்திகள் பயங்கரவாதமாகச் சித்தரித்து வருகின்றது. பௌத்த மதத் தலைவர் உட்பட நான்கு மதங்களையும் சேர்ந்த மதத் தலைவர்கள் வாழ்த்துரைக்க, ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அமைச்சர், மற்றும் ஸ்ரீலங்காப் பிரதமரின் பிரதிநிதிகள் என்று பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வு, வழமையாக பொங்கு தமிழுக்கு புலிச்சாயம் பூசிப் பிரச்சாரம் மேற்கொள்ளும் பேரினவாதிகளின் முகத்தில் புதுச்சாயம் பூசுவதாகவே அமைந்திருந்தது.

போருக்குப் பின்னான இடம்பெயர்வுகள், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், பகைவனின் தொடர் பிரசன்னம் போன்றனவற்றுடன் மிதமிஞ்சிய சமாதான அழுத்தத்தினாலும் கூட் அடைபட்டு வதைபட்டிருந்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களின் உணர்ச்சிப் பிரவாகம் அன்றைய தினம் கரைபுரண்ட வெள்ளமாகவே காட்சி தந்தது.

சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தனித்துவமான தேசிய இனம் போன்ற தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை உரத்து உரைத்த மக்கள், “தமிழரே புலிகள் புலிகளே தமிழர்” என்றும் - அன்றையதினம் அடித்துரைத்திருந்தார்கள்.

உலகத்தின் காதுகளில் இந்த ஓசை ஓங்கி ஒலித்திருக்கும் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

---

(04ம் பக்கத் தொடர்ச்சி)

கோடு இணைத்துக் கொண்டார்கள். மசகு எண்ணெயை, பெறப்படும் இடங்களிலேயே சுத்திகரித்து வேலைவாய்ப்பு வழங்காமல் பெரும் செலவில் 1000 மைல் தூரத்துக்கு குழாய்மூலம் எடுத்துச்சென்று போட்சூடானில் வைத்து சுத்திகரித்தார்கள்.

சிவிலியன்கள்மீது பலவருடங்களாக விமானக் குண்டுவீச்சுக்கள் நடத்தப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 1999இல் 65 விமானக் குண்டுவீச்சுக்களும், 2000ஆம் ஆண்டில் 132ம், 2001ஆம் ஆண்டில் 195ம் இடம்பெற்றுள்ளன.

மனிதநேய உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடைவதை அரசு திட்டமிட்ட ரீதியில் தடுத்து வந்திருக்கிறது.

இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் தாக்குப்பிடித்து நின்ற தென்சூடானிய விடுதலை அமைப்புகளுடன் பல்வேறு நாடுகளின் ஏற்பாட்டில் பேச்சுவார்த்தை நடத்தி சுயாட்சியை வழங்கவேண்டிய நிலைக்கு காட்டும் அரசு வந்திருக்கிறது. 1991, 1993, 1995, 1997, 2000, 2002 என நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் மூன்று அம்சங்கள் வெளிப்பட்டன.

(1) தென்சூடான் மக்கள் தங்கள் இனம் காரணமாகவும், மதம் காரணமாகவும் இரட்டை ஒதுக்கல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

(2) காட்டும் அரசுடன் செய்துகொள்ளப்படும் உடன்பாடுகள் நிறைவேற்றப்படுவதில்லை.

(3) அவர்களுடன் ஒருமைப்பாட்டைக் காட்டாமலும், அவர்களது மனித மற்றும் ஏனைய வளங்களை அபிவிருத்தி செய்ய உதவாமலும் ஏனைய ஆபிரிக்க நாடுகள் அவர்களை நட்டாற்றில் கைவிட்டுவிட்டன.

எப்படியோ, 2002 யூலையில் செய்து கொள்ளப்பட்ட மக்காகோஸ் (MACHAKOS) ஏற்பாடுகளின்படி, தென்சூடானில் ஆறு வருடகால இடைக்கால ஏற்பாட்டின் பின் கருத்துக்கணிப்பு ஊடான சுயநிர்ணயம் செய்துகொள்ளும் ஏதுநிலை தோன்றியுள்ளது. இந்த உடன்பாட்டின் கீழ்:

(1) இடைக்காலத்தின்போது வெவ்வேறு கட்டளைப் பீடங்களின் கீழ் இரண்டு இராணுவங்களை சூடான் கொண்டிருக்கும்.

(2) SPLA இன் அரசியல் தலைவரான மேஜர் ஜெனரல் ஜோண் கறாங் SPLAக்கு தலைமை தாங்க, அரசப் படைகளுக்கு ஜனாதிபதி ஹர்ஷான் அல் பஷீர் தலைமை தாங்குவார்.

(3) விரிவான சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்களுக்குள் தென்சூடானில் நிலைகொண்டிருக்கும் அரசப்படைகளில் 10,000 பேரைத் தவிர்த்து 80%மானோர் மீளப் பெறப்படுவார்கள்.

(4) SPLA ஆனது அதனது படைகளில் 80%மானவற்றை தென் சூடானில் வைத்திருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

(5) தெற்கில் ஆறுவருட சுயாட்சி அனுமதிக்கப்படும்.

(6) பிரச்சினைகள் எழும் இடங்களில் சேவையாற்ற ஒவ்வொரு தரப்பினரும் தலா 10,000 துருப்பினரை வழங்குவர்.

(7) வடக்கில் ‘ஷரியா’ சட்டம் வழக்கில் இருக்கலாம் என SPLA ஏற்கிறது.

பின்வரும் விடயங்கள் பேசித் தீர்க்கப்படவிருக்கின்றன.

(1) ‘ஷரியா’ சட்டம் காட்டுமில் நடைமுறைப் படுத்தப்படவேண்டுமா? வேண்டாமா?

(2) எண்ணை மூலமான வருமானத்தைப் பகிர்ந்துகொள்வது எப்படி?

(3) மையப்பகுதிகளான அபேயெய், புளுநைல், நூபா மலைகள் ஆகியவற்றின் தகுநிலை (இப்பகுதிகளில் இருக்கும் நீர்வளங்கள் வட/தென் சூடான்களினால் மட்டுமல்லாது, அயலில் இருக்கும் நாடுகளினாலும் நுகரப்படுகின்றன)

(4) அரசியல் அதிகாரம் எப்படிப் பகிர்ந்து கொள்ளப்படவேண்டும்.

பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கென்யாவில் இடம்பெறுகின்றன. இப் பேச்சுவார்த்தைகள் மூலம் தென்சூடான் மக்களுடைய துன்பங்களுக்கு முடிவு கிட்டவேண்டும் என்று எதிர்பார்க்கும் அதே வேளை, அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்களை இடைக்கால நிர்வாக முன்மொழிவுகளை முன்வைத்திருக்கும் நாமும் கருத்திலெடுத்தாக வேண்டும்.

- வி.அருணாளன் -

# நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு!

## - முப்பது ஆண்டுகளின் பின் ஒருமீள்பார்வை.




**சு.அரசண்ணா**

ஈழத் தமிழ்பேசும் சமூகத்தின் தொன்மையின் சிறப்புக்களும், மேன்மைகளும், இருப்புக்களும் நடப்பியல்புகளும் - போன்றன சிங்கள இன முதன்மைவாதிகளின் மூர்க்கத்தனக் கொம்புக்கு மண்ணெடுப்புக்களால் குதறியும் கிளறியும் எறியப்பட்டுள்ளன. நீதி, நியாயம் என்ற மேன்மைகளின் பொருட்டான எந்தவொரு அவசியங்களுமின்றி வெறும் இனவெறியின் வெப்புசாரங்களால் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகளான தமிழ்பேசும் மக்களின் ஒவ்வொரு முன்னெடுப்புக்களும் முறித்துப் போடப்பட்டுள்ளன.

கேட்பாரும் தடுப்பாரும் எமக்கு எவருக்க முடியும் என்ற விட்டேந்தியான அதிகார வெறியின் மதைகளால் இன்னொரு நியாயமான தேசிய இனத்தின் இயல்புவாழ்வும், இருப்புக்களும், உரிமைகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

மனித தர்மத்தின் தார்ப்பரியங்கள் எல்லாம், முற்றாக நிராகரிக்கப்பட்டு, அடக்குமுறை அதர்மத்தின் கோலோச்சுதல்கள், சிங்கள ஆட்சியாளர்களால் தொடர்ச்சியறாமல் இம்மண்ணில் தமிழ்மக்களின்மேல் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. அந்தவகையில் மேற்கொள்ளப்பட்ட எல்லா முக்கியமான கொடுமைகளிலும் ஒன்றாக உறுத்தக்கூடிய முதன்மைக் கொடுமை முப்பது ஆண்டுகளுக்கு முன்னே நடைபெற்றுள்ளது.

1974, சனவரி 03ஆம் திகதியில் இருந்து 09ஆம் திகதிவரை, மக்களின் விருப்பின் காரணமாக அதிகரிக்கப்பெற்ற அந்த இன்னுமொரு நாளையும் சேர்த்தால் 10ஆம் திகதிவரை மொத்தம் எட்டு நாட்கள், நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாண மாவட்டத்தின் மாநகரத்தில் கொண்டாடப்பெற்றது.

தமிழின் உயர்வை வெளிப்படுத்தியதோடு, இம்மாநாடு, இலங்கைத்தீவில் வாழும் தமிழ்பேசும் மக்களின் தமிழ்த்தேசிய மனப்பாங்கையும், குறிப்பாக யாழ் குடாநாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டு முறைமைகளையும், வரவேற்புச் சிறப்பையும், விருந்தோம்பல் மாண்பினையும் கூட வெளிப்படுத்தியுள்ளது.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டு நல்லறிஞர்கள் அனைவராலும் முன்னர் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளைவிட வித்தியாசமானதும் சிறப்பானதுமென பாராட்டப்பெற்ற மாநாடு இது!

இதற்கு முன்னரோ பின்னரோ நடந்த எந்தவொரு தமிழாராய்ச்சி மாநாட்டிற்கும் இல்லாத எதிர்ப்பினைக் கண்டதுமல்லாமல், நரபலி எடுக்கும் பேரினவாத மூர்க்கத்தனத்திற்கு இரைகள் கொடுத்த மாநாடும் இது.

இது நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு. மனமகிழ்ச்சியோடு கொண்டாடிய அந்த மக்களின் உள்ளக் குதூகலிப்பை உடைத்து எறிந்ததோடு, சொந்தமண் சொந்தமாய் மீட்கப்படாத ஒரு நிலையில்; மண்ணை, உரிமையை இழந்து நிற்கும் மக்கள் சமூகம் எந்தவொரு சிறப்பு விழாவையும் கொண்டாட முடியாது என்பதையும் இம்மாநாட்டின் இறுதி நாள் சந்தித்த கோர வெறியாட்டத்தின் மூலம் இம்மாநாடு தமிழ்பேசும் மக்களுக்கு நன்கு உணர்த்தியது.

தவத்திரு தனிநாயகம் அடிகளார் அவர்களின் பொருத்தம்மிகு முன்னெடுப்புக்களால், ஆலோசனை - கோரிக்கைகளால், உலகின் தமிழைப் பற்றியறிந்த, தமிழைக் கற்றறிந்த வெவ்வேறு மொழிகளைச் சார்ந்த, மொழி அறிஞர்களும், மற்றும் தமிழ்மொழி அறிஞர்களும் கூடி, தமிழுக்கு ஆய்வு நடத்தவேண்டும் எனத் தீர்மானித்தனர். இதன் காரணமாக எழுந்தது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்.

இம்மன்றத்தின் முன்னெடுப்பின்படி முறைப்படியான நடவடிக்கைகள் மூலம் பல உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் எழுச்சிகரமாகக் கொண்டாடப்பெற்றன. கொண்டாடப் பெறவும் இருக்கின்றன.

பாரிசில் நடைபெற்ற மூன்றாவது மாநாட்டின்போது நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஈழத்தில் கொண்டாட வேண்டுமென அழைப்பு விடுக்கப்பெற்றது. அவ்வழைப்பு சம்பந்தம் பெற்றோர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

அதன்படி மாநாட்டை இங்கு நடத்துவதற்கான ஒழுங்குகளை அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை கவனிக்கத் தொடங்கியது. மாநாட்டை யாழ்ப்பாணத்திலேயே நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

சிறிமா அம்மையாரின் தலைமையிலான இலங்கை அரச தரப்பார் இம்மாநாட்டைக் கொழும்பிலேயே கொண்டாடவேண்டும், அப்படிக் கொண்டாடாமல் யாழ்ப்பாணத்தில்தான் மாநாட்டை நடத்துவது என்றால் அரச எந்தவொரு உதவியையும் செய்யாது எனக் கூறினர். தமிழ்த் தலைவர்கள் தரப்பார், நீங்கள் எந்த உதவிகளும் செய்யவேண்டாம், அதைத் தமிழ்பேசும் மக்கள் பார்த்துக் கொள்வார்கள். நீங்கள் உபத்திரவம் எதுவும் செய்யாமல் இருந்தால் போதும் எனக்கூறி, மாநாட்டை யாழ்ப்பாணத்திலேயே கொண்டாடுவது என்னும் முடிவை உறுதியாக்கிக் கொண்டனர்.

1973ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதியில் இருந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் தலைமையில், புதிய முகாமைக்குழு ஒன்று செயலாற்றத் தொடங்கியது. அக்குழு பொருத்தமான பல்வேறு உபகுழுக்களை அமைத்து, மாநாட்டு அமைப்பு, பரப்புரை, செய்தி, பாதுகாப்பு, நிதி திரட்டல், பண்பாட்டு (கலசாரம்) நிகழ்ச்சிகள், ஊர்வலம் ஆகியனவற்றைக் கவனிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன.

தமிழ்பேசும் மக்களும் சகல ஒத்துழைப்புக்களையும் மனமுவந்து நல்கினர். இக்கால கட்டத்தில், இத்தீவில் வாழ்ந்த அனைத்து இன மக்களும், குறிப்பாக உடல் உழைப்பை மேற்கொள்ளும் அடிமட்ட மக்களும், மத்தியதர மக்களும், சிறிமா அம்மையாரின் ஆட்சியில் (1970, 72, 73) உணவுப்பொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட வறுமையின் வெம்மையில் வரண்டு போயிருந்தனர். வணக்கத் தலங்களின் முன்னே கூடி வழிபாடு செய்பவர்களையும், வயல்கள் தோட்டங்களில், தொழிலிடங்களில் மற்றும் நிறுவனங்களில் வேலைசெய்யக் கூடுவோர் எல்லோரையுமே சிறிமா அம்மையார் வெதுப்பகங்களின் (பாண் பேக்கரிகளின்) முன்னால் அதிகாலையிலேயே கூடி வரிசையில் நிற்கவைத்தார். அரைப்பச்சையில் வெதும்பியை (பாணை) வாங்கவைத்தார். பஞ்சம், பசி, பட்டினி தலைவிரித்தாடியது. இதன் வெம்மை மக்களை வாட்டியது. யாழ்குடா நாட்டிலும் மிக அதிகமான மக்கள் இவ்வெம்மையில் வாடிப்போயிருந்தார்கள். ஆயினும் என்ன?

தமிழின் விழா தமிழர் மண்ணில் நடைபெறவுள்ளது என்னும் செய்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே, வறுமை வெம்மையின் தகிப்பிலிருந்து விடுபட்டு, எங்கள் மண்ணில் எங்கள் தமிழ்விழா என்னும் மகிழ்வுத் தன்மையில் குளிர்ந்து போய்விட்டனர். கேட்ட உதவிகளை முடிந்தவரை நல்கினர். விழாக்காலத்தை எதிர்பார்த்தும், விழாவுக்காகச் செயற்பட்டும், அந்த மக்கள் கொண்டாட்டக்கோலம் பூண்டனர்.

எங்கே எவர் விட்டார் குறை? எவரும் எதுவும் விடவில்லை. எல்லோரும் எடுத்துக் கொண்டார்கள் தங்கள் தங்கள் ஒத்துழைப்புக்கு வளையமுறை, தொய்வு இல்லாமல் வேண்டிய உழைப்புக்கள் உதவிகள் நல்கப் பெற்றன. வசதி படைத்தவர்கள் மனம்போல் அள்ளிக் கொடுத்தனர் நிதி.

அறிவித்தல்கள் விடப்பெற்றன. அழைப்புக்கள் முறைப்படி உரியவர்களுக்கு நேரடியாகவும், அஞ்சல் மூலமாகவும் கொடுக்கப் பெற்றன. வந்து குவிந்தன ஆய்வுக் கட்டுரைகள். அவைகளில் இருந்து நூற்றிப் பதினைந்து கட்டுரைகள் மாநாட்டில் படிப்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பெற்றன. இவற்றில், நாற்பத்தி ஐந்து கட்டுரைகள் ஈழத்தின் மொழி இலக்கியம், கலை, சமூக இயல் போன்றவைபற்றி அமைந்திருந்தன.

விழா முன்னெடுப்பதற்கான காலம் நெருங்கி வரவர யாழ்.குடாநாடு எழிற்கோலம் பூண்டது. மக்கள் என்றுமில்லாதவாறு உணர்வு கொண்டு எழுந்தனர். இளந் தென்னைகள் இளம் பனைகள், வாழைகள் கமுகுகள் ஆகிய வற்றை வேருடன் பிடுங்கிவந்து வீதிகளின் இருமருங்கிலும் நாட்டினர். அலங்கார வளைவுகள் கட்டினர். முக்கிய சந்திகளில் சிகரங்கள் கட்டப்பட்டன. முக்கியமான வர்த்தக, கூட்டுறவு நிலையங்களின் முன் சப்பறங்கள் கட்டப்பெற்றன. யாழ்குடாநாடு எங்கும் மகிழ்ச்சி பொங்கும் எழுச்சிக்கோலங்கள் துள்ளிவிளையாடின.

நான்காவது உலகத் தமிழராச்சி மாநாட்டின் விழாக்கொண்டாட்டம், பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தை எனப் போற்றப் பெறும் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தொடக்கிவைப்புரையுடன் ஆரம்பமானது.

ஆய்வு மாநாடானது, பொதுக்கருத்தரங்கு, குழுக் கருத்தரங்கு என இருபிரிவாக சனவரி, 03இல் இருந்து 08ஆம் நாள்வரை நடைபெற்றன.

பொதுக் கருத்தரங்கு, 03ஆம் நாள் பிற்பகலிலும், 4,5,6,7,8ஆம் நாட்களில் முற் பகலிலும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும், 4,5,6,7,8ஆம் நாட்களில் குழுக் கருத்தரங்கு பிற்பகலில், சமூகஇயல், இலக்கியம், சமயமும் தத்துவமும், மொழியியல், அறிவியலும் தொழில்நுட்பவியலும், தொல்பொருளியலும் மானிடவியலும் என்னும் ஆறுபிரிவுகளில் நிம்மர் மண்டபத்திலும் நடைபெற்றன.

வீரசிங்கம் மண்டபம், திறந்தவெளி அரங்கு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய மூன்று இடங்களிலும் தினந்தோறும் இரவில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாட்டியாஞ்சலி, உழவர் நடனம், காவடி, கரகம், பரத நாட்டியம், குச்சுப்பிடி முதலிய நடன நிகழ்ச்சிகளும், பண்ணிசை, வீணை இசை ஆகிய இசை நிகழ்ச்சிகளும், கலந்துகொண்ட பொதுமக்களுக்கும், வெளிநாட்டு அறிஞர்களுக்கும் விருந்தாக அளிக்கப்பெற்றன.

யாழ்ப்பாணக் கலைஞர்களும் மலையகக் கலைஞர்களும் கலைநிகழ்ச்சிகளை உவந்தளித்தனர்.

யாழ்.முற்றவெளியில் இடம்பெற்ற மாட்டுவண்டிற் சவாரியும், இங்கிலாந்துப் பேராசிரியர் ஜோன்மார் அவர்களும் அவரது மகளும் அளித்த கர்நாடக இசையும், சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன.

சனவரி 09ஆம் நாள் அலங்கார ஊர்திகள் சங்கிலியனின் தோரணவாயில் அமைந்திருக்கும், முத்திரைச் சந்தியிலிருந்து ஆரம்பித்து பிரதான வீதிகளில் பவனிவரத் தொடங்கி வந்தன. பண்டாரவன்னியனை ஆங்கிலேயர் கைதுசெய்து விலங்குடன் கொண்டுவரும் காட்சியைச் சித்தரிக்கும் ஊர்தியும் பவனியில் வந்தது. அதில் பண்டாரவன்னியனாக விடுதலைப்போராளி மாவீரன் உரம்பிராய்ச் சிவகுமாரன் பங்கேற்றியிருந்தார். (இந்த ஊர்திப் பவனி பொலிசாரால் தடுக்கப்பட்டது. சிவகுமாரன் உட்பட அதில் கலந்து கொண்ட இளைஞர்களும் மக்களும் மேற்கொண்ட கடும் போராட்டத்தின் பின் பொலிசார் ஊர்திப்பவனி தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்) நகர்முழுவதும் மக்கள் கூட்டம். மழை கொட்டியது வெள்ளம் ஓடியது ஆயினும் மக்கள் ஊர்திப் பவனியையும் விழா நிகழ்ச்சிகளையும் கண்டு களித்தனர்.

முன்னெப்போதும் எந்தவொரு விழாவுக்கும் கூடியிருக்காத அளவுக்கு இலட்சக் கணக்கான மக்கள் கூடி மாநாட்டைக் காண விழைந்தனர், கண்டுகளித்தனர்.

சனவரி 03இல் இருந்து 09ஆம் நாள்வரை நடத்தத் திட்டமிட்டிருந்த விழா மேலும் ஒருநாள் கூட்டவேண்டுமென அபிப்பிராயக் கொப்பி மூலம் விருப்பமும் வேண்டுதலும் பல ஆயிரக்கணக்கானவர்களால் தெரிவிக்கப்பெற்றிருந்தன.

உரிய இடங்களில் உரியபடி அனுமதி, மேலும் ஒரு நாளுக்காகப் பெறப்பட்டன. அன்று சனவரி 10ஆம் நாள். அன்றும் விழாவுக்கு பெருந்திரளாக மக்கள் வந்திருந்தனர். பருவம், பால், பிரதேசம், வர்க்கம், மற்றுமுள்ள பிரிவுகளைக் காட்டும் அனைத்து வரம்புகளையும் கடந்து குடாநாட்டு மக்கள் தேசிய மணம்வீசக் கலந்து கொண்டனர்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மாலை நிகழ்ச்சியில் உரையாற்றுதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மண்டபத்திற்குள் நடைபெற்றுக் கொண்டிருந்த உரையரங்கை வெளியிலே நடத்தும்படி மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து உரையரங்கு மண்டபத்திற்கு வெளியிலே ஏற்பாடு செய்யப்பெற்றது.

முற்றவெளி முழுவதும் மக்கள், அச்சூழலில் உள்ள பிரதானவீதி அடங்கலும் நிறைந்தனர். ஒரு சின்ன மிதிவண்டிக்குக் கூட நுழைய இடம் கொடுக்கமுடியாத அளவிற்கு நிலம் வீதி வாயில்கள் போன்றனவெல்லாம் மக்களால் நிரம்பியிருந்தன. நேரம் இரவாகியிருந்தது. மின்சார விளக்குகள் ஒளிவெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருந்தன. நான்கு திசைகளிலும் வர்ண விளக்குகள் அழகுகொண்டு எரிந்து கொண்டிருந்தன. நின்று நின்று எரியும் விளக்குகள் பல்வேறு கோலங்களை வெளிப்படுத்தின. அவை அங்கு கூடிநின்ற மக்களின் மனங்களில் ஆனந்தப் பரவசத்தை மூட்டின.

தாங்கள் கண்ட, அனுபவித்த எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் தம்முடையவர்களுக்கும் தமக்குப் பிடித்தவர்களுக்கும் போய்ச் சொல்லவேண்டும் என்று உள்மனத்தில் விருப்பங்கொண்டனர். மகளை அழைத்துவந்த தந்தை வரத்தவறிய தன் வயதுக்கு ஒத்தவர்களுக்குச் சொல்லவேண்டும் என நினைத்தார். தந்தையின் கைப்பிடித்துவந்த மகனும், மகளும் தாங்கள் வயதுக்கு ஒத்தவர்களுக்குச் சொல்லவேண்டும் என எண்ணினர், சொல்லி மகிழ்வில் பூரிக்கவேண்டுமென விரும்பினர்.

உரை அரங்கில் நயினார் முகமது அவர்கள் உரையாற்றத் தொடங்குகிறார். அவரின் உரையை மக்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எறும்பு நுழையமுடியாத இடத்தில் எருமையை நுழைக்க முயன்ற கதையாக, யாழ் மாநகரக் காவல்துறை உறுப்பினர்கள் சிலர் தமது வாகனத்தில் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னாலுள்ள வீதியால், திரண்டிருக்கும் மக்கள் சமுத்திரத்திற்குள்ளால் போக முயன்றனர். மக்கள் அவர்களுக்கு நிலைமையை விளக்கினர். அவர்களோ திரும்பமுடியாது தாம் போக வேண்டும் என முறைத்தனர். மக்களைத் திட்டினர்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# நான்காவது உலக...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் கொடுக்கமுடியாத நெருக்கமான திரள்நிலையில் மக்கள் விட்டுத்தான் ஆகவேண்டும் என்ற முறைப்பு நிலையில் சிங்களக் காவல் துறையினர். நிலைமை விபரீதத் தைத் தொட்டது.

உண்மையையும் நிலைவரத்தையும் உணர்ந்து அந்த மக்களின் விழாவை ஏன் சச்சரவிற்கு ஆளாக்க வேனும் வேற பாதை உண்டுதானே அவ்வழியால் போவோம் எனத் திரும்பிச் செல்வதற்கு, அக் காவல்துறையினர் அங்கு திரண்டிருந்த மக்களின் பாது காப்புக்காக அவர்களின் நலன்களுக்காகப் பணியாற்றுபவர் களல்லவே.

காவல்துறையினரின் முறைப்பும் விறைப்பும் உச்சத்தைத் தொட்டது. அவர்களின் துப்பாக்கிகள் ரவைகளைக் கக்கின. படபடவென வெடியோசைகள் ஒலிந்தன. கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. மின்கம்பிகள் அறுந்து வீழ்ந்தன. ஒளி வெள்ளம் அமிழ்ந்தது. இருள் சூழ்ந்தது.

மக்களின் நிலை மோசமானது இருட்டில் எங்கு போவது? எப்படிப் போவது? கண்கள் எரிந்தன. பார்வைகள் மங்கின. வாயில் வீணீர் வடிந்தன. வீசிய கண்ணீர்ப் புகைக்குண்டுகள் இதை உருவாக்கின. ஏதோ ஒரு முடிந்த திசையில் ஓடினார்கள். வெடிச்சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

கால் வைக்கக் கூசும் அசுத்தமான இடங்கள்கூட ஓடிவந்து வீழ்ந்து படுக்கும் இடமாக ஆகியிருந்தன... ஆனந்த வானத் தில் மிதந்த மக்கள் இப்ப துன்பக் குழியினில், அமிழ்ந்தனர்.

ஊர் சென்று உறவுகளோடு கூடிக் கதைத்துக் குதூகலிப்போம் என மனம் குளிர் ந்த மக்கள் உயிரோடு மீளுவோமா என அச்சத்தால் நடுங்கினர்...

எந்தவொரு மக்கள் சமூகத்திற்கும் இப்படிப்பட்ட கஸ்டம் வரவே கூடாது - வரவே கூடாது.

எங்களின் இனிமைமிகு தமிழுக்கு எடுத்த சந்தோசவிழா, இப்படிக் கொடுந் துன்பத்தையூட்டியா முடியவேண்டும்...

காலொடிந்தோர், காயப்பட்டோர், கை முறிந்தோர், மனமுடைந்தோர், சித்தப் பிரமைக்கு உள்ளானோர் என மக்களுக்குப் பல அனர்த்தங்கள் நடந்திருந்தன. எல்லா அனர்த்தங்களையும் தோற்கடித்து ஒன்பது பேர்களின் உயிர்களைப் பலிகொண்ட பொல்லா அனர்த்தமும் நடந்திருந்தது.

யாழ-குடாநாடே சோகத்தில் மூழ்கியது. பலியெடுத்த படையினரின் கூட்டம் மாநகரத்தின் தெருக்களில் வந்து சுற்றித் திரிந்தனர். கண்ணில் கண்ட அப்பாவிகளுக்கு அடிபோட்டனர், பிடித்துச் சென்றனர்.

என்ன நடந்தது? தமிழாராய்ச்சி மாநாடு நடந்தது. தமிழின் சிறப்பை அதன் மேன்மையை, தொன்மையை, இனிமையை ஆராய்வதோடு தமிழில் படைக்கப்பெற்ற காவியங்கள், காப்பியங்கள், பாடங்கள் போன்றவற்றையும் ஆய்வு செய்வது மொழி வல்லுனர்கள் பலருமே கூடி இதனை மேற்கொள்வார்கள்.

என்னதான் எத்தனை ஆய்வுகளை மேற்கொண்டாலும், எத்தனை அறிஞர்கள் வந்து கலந்துகொண்டாலும், உலகத் தமிழாராய்ச்சி மாநாடு எக்காரணத்தைக் கொண்டும் இன்னொரு மொழியின் சிறப்பைப் பறிக்காது, வோறொரு இனத்தின் மாண்பினைப் பழிக்காது, உரிமையைப் பறிக்காது!

தமிழின் வளர்ச்சி விதிகளைக்



தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை

கண்டறியும்போது அவ்விதிகள் இன்னொரு வளரும் மொழிக்கு உதவும் என்பது உலகறிந்த உண்மை.

இவ்விழாவானது சிங்கள மக்களுக்கும் அவர்தம் மொழிக்கும் எந்தக் கேட்டையும் விளைவிக்கும் தீர்மானங்களையோ முன்னெடுப்புக்களையோ செய்யவில்லை. ஆனால் அதன் முடிவு கொடுந்துன்பமாய் விடிந்திருக்கிறது.

அந்த ஒன்பதுபேரின் வாழ்வுக்கும், அவர்களின் உறவுகளுக்கும் சொல்வதற்கு ஒரு பதில் இருக்கமுடியுமா? வெருட்டி முறைக்கும் மிருகத்தனத்திற்கு அப்பால் மனிதமொழி பதில்சொல்ல ஒருபோதும் முயலாது.

இந்தக் கொடூரத்தை, வெறித்தனத்தை யார் செய்கிறார்கள்? தம் மொழியின்பால், தம்மினத்தின்பால் நல்லுணர்வு கொண்ட அறிஞர்கள் பண்பாளர்கள் இதனை ஒருபோதும் செய்யமாட்டார்கள். மாறாக சிங்கள இன வெறியுணர்ச்சி கொண்டவர்களே இதனைச் செய்துள ளார்கள்.

மொழியுணர்வும் அறிவும், பண்பும் கேடுசெய்வதில்லை. துன்பம் விளைவிப்பதில்லை. இனவெறியும் மூர்க்கமும் ஆதிக்க வெறியுமே கேடுகளைச் செயதது. துன்பத்தை விளைத்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முனைப்புறும் ஆயுத நடவடிக்கைகள் மற்றும் முன்னெடுப்புக்களில் எல்லாம் தமிழீழத்தின் மக்கள் பங்குகொண்டு உழைத்திட அவர்களை வீறுகொள்ள வைத்ததில் நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின் படு கொலைகளும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முக்கியமும் முதன்மையுமானவை.

அதற்குப் பின்பு நடந்த ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சிகளும் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

ஒரு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தி இனிமையாய் முடிக்க முடியாது போன தமிழ்மக்கள் பின்னர் எத்தனை விழா க்களை கண்டுள்ளனர், எடுத்துள்ளனர்?

விடுவிக்கப்பட்ட தமிழீழ மண்ணில் முன்னெடுக்கப்பெற்ற, மே நாள், முத்தமிழ் விழா, மாவீரர் (நாள்) வாரம், திலீபனின் நினைவு நாட்கள் என்பனபோன்ற பல விழாக்களில் இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். சிங்கள அரசின் அதிகாரத்தை நிராகரித்து அகற்றிவிட்டு இவற்றைச் செய்தனர்.

திரும்பத்திரும்ப வருடா வருடம் அவற்றை முன்னெடுத்து, உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நான்காவதில் பலி கொள்ளப்பட்ட அந்த ஒன்பது பேர் களுக்கும் நினைவு வணக்கம் செலுத்தினார்கள்.

தமிழின் சிறப்பை அறிந்தவர்கள் அதன் மேன்மைக்குத் தலைசாய்க்கவே செய்வார்கள்.

சிங்கள, தமிழ் ஒற்றுமை என்னும் தலைப்பில் மாநாட்டில் கலந்து கொண்டு கட்டுரைசமர்ப்பித்த டி.டி.நாணயக்கார அவர்கள் தனது அக்கட்டுரையில் பின்வரும் கருத்துக்களையும் முன்வைத்திருந்தார்.

"தமிழை நான் கற்றுக் கொண்டதை, நான் பெரும் செல்வமாக மதிக்கிறேன். பலர் கருதுவது போலத் தமிழரும் சிங்களம் கற்கவேண்டும் என்ற கொள்கையாற் சிங்களமொழி விருத்தயடையும் என்பது என் அனுபவத்திற்கு மாறானது. இக் கட்டுரையில் மத்திய காலப் பகுதியில் தமிழ் மொழியின் நிலை பற்றிக் கூறியபோது, கோட்டை இராச்சியத்தில் ஒரு பொற்காலமாக விளங்கிய சமயம், இலங்கையிலே தமிழறிஞரும் தமிழ் மொழியும் சிங்கள இலக்கியங்களையும் இதிகாசங்களையும், வளர்த்த வரலாற்றையும் சிங்களமொழி சிறப்புடன் பரவியமையையும் விபரமாகக் கூறியுள்ளேன். மொழிகளுட் சிறந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு இனத்தை வேறொரு மொழியைக் கற்கவேண்டுமென வலிந்து திணிப்பதினால் இன வேற்றுமையும் பகையும் ஏற்பட்டு பிளவுபடுமே தவிர நன்மை கிடையாது.

இவ்வாறான அறிஞர்கள் முன்வைக்கும் அறிவுரையையும் வரலாறு கூறும் உண்மைகளையும் உய்ந்துணரும் சரியை சிங்கள மூர்க்கம் செய்யத் தவறியதே வரலாறு. இவ் வெறியானது தொடர்ந்து செய்துவரும். யாழ் மண்ணில் நடந்த மாநாட்டுப் படுகொலைகள் போன்ற அடாவடித்தன அக்கிரமங்கள் சிங்கள மக்களை அவமானத்திற்குள்ளாக்கவும், தமிழ்பேசும் மக்களை விடுதலையின்பால் முனைப்புக் கொள்ளவும் செய்கிறது என்ற உண்மையை மூர்க்கவாதிகளுக்கும் அதிதீவிரவாதிகளுக்கும் எப்படி உணர்த்துவது?

வரலாறு எப்பவும் தனது பணியை நிறைவேற்றிக்கொண்டு முன்னேறி மேலோங் கிச் செல்லும்.

சரியான ஒன்றின் உயர்ச்சியையும் வளர்ச்சியையும் முறியடித்து அந்த ஒன்றை அழித்துவிட முனையும் ஆட்சி அதிகார வர்க்கத்தினர், அதன் அடிவருடிகள் அனைவரும், ஆட்டங்கண்டு அடங்கிவிடும் வரை அவர்கள் தமது பிழைகளை உணர்ந்ததுமில்லை, பிழைகளைச் செய்யாமல் விடப்போவதுமில்லை.

வரலாற்றின் போக்கைச் சரியான பாதையில் இனங்காணும் போரிடும் மக்கள் கூட்டத்தின் உணர்வுக் கொதிநிலையை ஆறவிடாது செய்யும் நடவடிக்கையை அடக்கு முறை, இனவெறி அதிகாரம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும்.

நான்காவது உலகத் தமிழாராச்சி மாநாட்டின் முடிவுநாளில் செய்யப்பட்ட கொடூர அடாவடித்தனத்தினால் சாவடைந்து போன அந்த ஒன்பது பேர்களின் நினைவுத் தூபி யாழ். முற்றவெளியில் மீண்டும் புதுப் பொலிவுடன் (நினைவுத் தூபியும்கூட ஆக்கிரமிப்புக் கரங்களால் அழிக்கப்பட்டது) நிமிர்ந்து நிற்கிறது. அது தமிழ்பேசும் மக்களுக்கு உணர்த்தவேண்டிய உண்மையைத் தொடர்ந் தும் உணர்த்தும்.

---

(03ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு இன்னொரு நுணுக்கமான விடயத்தினையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். முசலிம் எதிர்ப்புணர்வு திட்டமிட்ட முறையில் இலாவகமாக வளர்க்கப்பட்டு வருகின்ற பொழுதும், 1915ஆம் ஆண்டு கொழும்பு புறக்கோட்டையில் வணிகக்காழ்ப்பு காரணமாக முசுலிம்களுக்கும் சிங்களவருக்குமிடையில் ஏற்பட்ட மோதலே முதல் இனக்கலவரமாகக் கருதப்படுகின்றபொழுதும் இன்று முசுலிம்களைப் பிரதான இலக்காகக் காட்டாமல் சிங்களம் நுணுக்கமாகக் கையாள்கை செய்கின்றது. தமிழ்மக்களை அடக்க, அல்லது மடக்க முசுலிம் தலைமையைப் பயன்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையே இதற்குக் காரணம். எனவே பாய்ச்சல் தள்ளிப் போடப்பட்டிருக்கின்றது. ஆனால் என்றோ ஒருநாள் பொகனியாவில் சேர்பியர் செய்ததுபோல ஒட்டுமொத்தமான இனச் சுத்திகரிப்பில் ஈடுபடுவதே இவர்கள் இலக்கு. அப்போது தமிழின எதிர்ப்பு, முசுலிம் எதிர்ப்பு, கிறித்தவ எதிர்ப்பு எல்லாமே ஒன்றாகக் கலவையாக்கப்பட்டு இன்னொரு சேர்பியாவாக சிறிலங்கா மாறக்கூடும். இப்போது இறுதியாகக் கிடைக்கும் தகவல்களை வைத்துப் பார்க்கும்போது பிற சக்தி தம் நோக்கினை (அமைதி முயற்சியை குழப்பல், தமிழ்மக்கள் பலம் பெறுவதைத் தடுத்தல்) அடைய இத்திய சக்திகளை ஊக்குவிப்பதாகக் கூறப்படுகின்றது.

இன்று இத்தகைய உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளின் 'ஆரியக் கூத்துக்களை' எம் மக்கள் அமைதியுடனும் பொறுமையுடனும் அவதானிக்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் எந்தவொரு அரசியல் யாப்பின் தரப்பை நம்பியோ நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கையில் தங்கியோ எந்தவொரு அன்னிய சக்திகளின் கையில் கடிவாளத்தைக் கொடுத்தோ வாழும் நிலையிலில்லை. அவர்கள் எதிர்காலம் அவர்கள் கையில்.

பின்வரும் கூற்றோடு இக் கட்டுரையை முடிக்கின்றோம். கட்டுவானையில் உள்ள தேவாலயம் மிக அண்மையில் அடித்து நொருக்கப்பட்ட பின் அத்தேவாலயத்தினைச் சேர்ந்த சிங்களப் பெண்மணியொருவர் கூறியது. "நாங்கள் மிகப் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் எப்போது என்ன செய்வார்கள் என்று தெரியாது. நாங்கள் உங்களுடன் பேசியதையறிந்தாலே கொன்றுவிடுவார்கள். தமிழர்கள் எவ்வளவு துன்பப்பட்டிருப்பார்கள் என்பது இப்போதுதான் எமக்குப் புரிகின்றது. நாம் பொலிசில் முறையிட்டும் பயனில்லை."(5)

நன்றி.

(1),(2) - சண்டே ஐலண்ட். திசரானி குணசேகரா (04.01.2004) தயான் செயத்திலக்கா
(3) - முதிருநாவுக்கரசு இலங்கை இனப்பிரச்சனைக்கான அடிப்படைகள்
(4) - தினக்குரல் (11.01.04) ஜயதேவ உயங்கொட.
(5) - வீரகேசரி (18.01.04) டி.சிவராம்



# பேய்களுக்கும் முனிகளுக்கும் இடையே பெரிய வேறுபாடில்லை

**வியாசன்**

அறுவடை முடித்த வயல்கள் வெறிச்சோடின
ஒருசிறங்கை மணிகூடக் கிட்டவில்லை நமக்கு.
காற்று அடித்ததுதான்
எடுத்துத் தூற்றவில்லையே எம் நெற்குடு.
மழைபெய்தது
எம் தாமரைக்குளத்துக்கு மட்டும்
தண்ணீர் வரவில்லை.
வெளிவீதி சுற்றி
காவடி தோளிருந்து இறங்கும்
நேரம் வந்தாச்சா?
வலிக்கிறது தோள்மூட்டு
வரமேதும் கிட்டவில்லையே நமக்கு.
ஈழத்தமிழர் மீண்டுமொருமுறை
இளிச்சவாயர் ஆனோமா?
பூ மலரும் வடிவு பார்க்க
வாசலிருந்தோம் நம்பிக்கையுடன்.
பூ வும் மலரவில்லை
பூ மரத்தின் வேரும் தெரியவில்லை.
நிலவு பார்க்கும் ஆசையில்
இரவெல்லாம் விழித்திருந்தோம்
நிலவையும் காணவில்லை
விழித்திருந்த இரவையும் காணவில்லை.
பத்துநாள் அலங்காரத்திருவிழா
முற்றுப்பெறுகிறது.
எஞ்சியிருப்பது கொடியிறக்கம் மட்டுமே.
சிகரங்கள் இறங்குகின்றன.
சின்னமேளங்கள் போய்விட்டனர்.
தவில்காரரும் புறப்படுகின்றனர்.
காப்புக்கடைகளைக் கலைத்து
கட்டத் தொடங்கியாயிற்று.
சில கடலைக்காரரே மீதி
இனி அவர்களும் போய்விடுவார்கள்.
எல்லோரும் போகலாம்
கோயில்வீதிக் குடியிருப்பாளர்கள்
எங்கே போவது?
ஜிகினா வெளிச்சத்தில் குதித்த அலுப்புத்தீர
ஒரு பகல் உறங்கலாம்
அதன் பிறகு என்ன?
வேள்வி நடத்த கோயிலில்
அலங்கார உற்சவத்துக்கு ஆசைப்பட்டோம்
நடந்தது என்ன?
கூத்து நடந்தது பார்த்துப் பரவசமடைந்தோம்.
இப்போ கூத்தும் முடிந்துவிட்டது
எந்த வாழ்வும் கிட்டவில்லையே எமக்கு.
எங்கேனும் சின்னக் கிளைகளில்
அரும்புகட்டத் தொடங்கினாற் போதுமே.

ஆதிக்கமாடுகள் அதனை மேய்ந்து விடுகின்றன.
அழகிய ஜீவிதத்துக்காக
சின்னக் கூடுகட்டுவோமென சிட்டுக்குருவிகள்
கள்ளிபொறுக்கினாற்கூட
பருந்துகள் பொறுத்துக் கொள்வதில்லை.
குருவிகளை அடித்து வாயிற் போடுகின்றன.
நம் வயலின் விதைப்புக்கு நாமுழுதாற் கூட
அண்டை வயற்காரன் சண்டைக்கு வருகிறான்.
ஈழத் தமிழருக்கு
இது எழுதிவைத்த விதியாச்சு.
எட்டுமூலைப் பட்டம் கட்டி இரவிலேற்றினோம்.
விடியும்வரை விண்சத்தம் கேட்டது.
பட்டத்தைத்தான் எவரும் பார்க்கமுடியவில்லை.
சப்த நதிகளும் கூடி
அட்டதிக்கு யானைகளும் கூடி
ஊரையடித்து உலையிற்போடும்
பகாசுரர்களும் கூடி
எமக்குப் பந்தி பரிமாற வந்தனர்.
பாயாசம் என்றனர்.
வாழையிலை விரித்து வரிசையிலிருந்தோம்
என்ன விழுந்தது இலையில்?
ஆக்கித் தந்ததும் ஒன்றுமில்லை.
தூக்குச் சட்டியிலும் ஒன்றுமில்லை.
மின்சாரம் வந்தது.
எரிசாராயம் வந்தது.
டயலொக் வந்தது.
மோபிற்றல் வந்தது.
அங்கர் பட்டரும்
மக்கிநூடில்ஸ்சும் வந்தது.
பிதாமகன் வந்தான்.
போய்ஸ்சும் வந்தார்கள்.
எமக்கான விடுதலைதான் வரவில்லை.
வீதியெங்கும் விளம்பரப் பலகையும்
காதிலெங்கும் சமாதானப் பாடலுமாய்
விளங்குகின்றன நம் ஊர்கள்.
ஈழத்தமிழனே!
பட்டும் பட்டும் உனக்கேனடா புத்திவரவில்லை.
ஒன்றில் போராடு
இல்லையேல் சரணாகதி அடைந்துவிடு.
இரண்டுக்குமிடையில் நின்று நசிந்துவிடாதே.

உன் தாகத்துக்கு நிறைவான தண்ணீரை
எவரும் தரமாட்டார்கள்.
வாய்நனைக்க மட்டுமே வார்ப்பார்கள்
நீ சொண்டைத்தான் நக்கவேண்டி வரும்.
பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே
பெரிய வேறுபாடுகளில்லை.
ஒன்று கடிக்கும்
மற்றது அடிக்கும்.
எதிரே வருபவன் பலவானென்றால்
இரண்டுமே ஒன்றாகிவிடும்.
எரிகிற கூரையில் கொள்ளியெடுத்து
சுருட்டுப் பற்றவைத்தானாம் கிழவனொருவன்.
பக்கத்து வீட்டுக்காரனின் கதைதான்
எமக்குப் பழையகதையாச்சே.
உலகெங்கும் டெங்குக் காச்சலாம்
அவரொருவர் நுளம்புநாசினி விசிறுகிறார்.
இறுதியில் நுளம்பு இங்குதானென்று
மகாபிரபு மருந்துடனும் வரலாம்
வருபவர்கள் எல்லோரும் வரட்டும்.
முதலில் நீ முதுகிற் கூனலில்லாமல்
முற்றத்தில் நில்.
உடுக்கடித்து ஆடப்பழகு
தலையில் தலைப்பாகை கட்டு.
நறுக்குத் தெறித்தாற்போல
உன் வாயிருந்து வார்த்தைகள் வரட்டும்.
நீ திரும்பினால்
திசைகளும் உன்னோடு திரும்பட்டும்.
நீ பாடினால் பட்ட மரத்திற்கூடப் பால்தெறிக்கட்டும்.
மழையுன் தோளின் கீழேயே பெய்யும்படியாய்
தலையை முகிலுக்குமேலே வைத்திரு.
இத்தனைபேரையும் குழியில் விதைத்தது
தேர்தலில் நிற்க அல்ல.
தெருக்களைச் செப்பனிட அல்ல.
மாகாண சபையின் நிர்வாகமெடுத்து
மதவு கட்ட அல்ல.
வேண்டும் எமக்குக் கூண்டில்லா வாழ்வு.
வேண்டும் எமக்கு விடுதலைக்கான சிறகு.

